படைப்பு

ஊற்று-5 | நதி-9 | ஜனவரி - 2023 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## மனிதத்தின் மேல் உள்ள அன்பே என்னை எழுத்து உலகத்துக்கு இழுத்து வந்தது..

எழுத்தாளர் ஜோ டி குருஸ் உடனான நேர்காணல்



• படைப்பு நுவல் நிகழ்வு



• வாசிப்பு 2022



• வானவில் வண்ண மின்னல்

- ஆதிரன்

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-5 | நதி-9 | ஜனவரி 2023

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**கலிங்கப்பட்டி க.கருப்பசாமி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** -பக். 04
- **மனிதத்தின் மேல் உள்ள அன்பே என்னை எழுத்து உலகத்துக்கு இழுத்து வந்தது..**
  - எழுத்தாளர் ஜோ டி குருஸ் உடனான நேர்காணல் -பக். 05
- **வாசிப்பு 2022**
  - தொகுப்பு : அம்மு ராகவ் -பக். 11
- **இலக்கியத்தில் சுழித்தோடிப் பாயும் உயிர்நீர் கோ.லீலா**
  - மதுமிதா -பக். 18
- **ஆதி பாம்பெனச் சூழும் நிஜம்**
  - கவிஜி -பக். 24
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  - மு.முருகேஷ் -பக். 33
- **இனிப்பை நோக்கிய நகர்தல்**
  - த.செயபிரகாசு -பக். 40
- **அப்பாவப் போல இங்க யாரிருக்கா...**
  - கவிஞர் ஏகாதசி -பக். 43
- **‘கதைகளைவிட இன்றைய காலத்தில் வேறு எது அறத்தைக் கற்றுத்தர உதவிடப்போகிறது..’**
  - குறட்டை மாமா கணேசுபிரபுவுடனான சந்திப்பு -பக். 47
- **வானவில் வண்ண மின்னல்**
  - ஆதிரன் -பக். 54

## சிறுகதைகள்


- **பேசாப் பெரும்பொருள்**
  – அல்லி பாத்திமா -பக். 28

- **அம்மாவின் வீடு**
  – ஆர்மேனிய மூலம் : வி.பெத்ரோசியன்
  தமிழில் மொழிபெயர்ப்பு : வல்லிக்கண்ணன் -பக். 59


## கவிதைகள்


- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 28**
  – ஜின்னா அஸ்மி -பக். 39
- **வைகை சுரேஷ்** -பக். 52
- **ரம்யா அருண் ராயன்** -பக். 52
- **மகேஷ் சிபி** -பக். 53
- **தீபிகா சுரேஷ்** -பக். 53
- **இரா மதிபாலா** -பக். 53
- **யாழினி** -பக். 53

# தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு ‘தகவு’ ஐம்பத்தேழாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

மண் சார்ந்து எழுதுதலில்தான் தொடங்கியது இலக்கியம். திணை பாகுபடுத்தி மனிதன் எழுதிவைத்ததெல்லாம் தம் நிலம் சார்ந்த பதிவுகளைத்தான். நிலத்தோடு பிணைந்துதான் இலக்கிய மாந்தர்களின் உரையாடல்களும் இடம்பெற வேண்டும் என ஆதி இலக்கியப் படைப்புகளுக்கே விதிகள் வகுக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாய் இந்நூற்றாண்டின் படைப்புகள் வரை தம் நிலம் சார்ந்த பதிவுகளாய் இலக்கியங்கள் உருவாயின. ஆனால் அவற்றுள் எத்தனை தம் நிலம் சார்ந்த பிரச்சனைகளை விவாதித்திருக்கின்றன, பொதுச் சமூகத்தில் விவாதத்தை உருவாக்கியிருக்கின்றன என்று நோக்கினால் சிலவே. இந்த இதழில் நேர்காணல் காணப்பட்டிருக்கும் ஜோ டி குருஸின் படைப்புகள் விவாதத்தை நோக்கியன. எந்த மக்களுக்காக அவரது படைப்புகள் எழுந்தனவோ அந்த மக்களின் புறக்கணிப்புகள் குறித்து இந்நேர்காணலில் அவர் பேசியிருப்பது படைப்பாளனை ஒரு சமூகம் எதிர்கொள்ளும் பாங்கிற்கான வலி மிகுந்த சான்று.

படைப்புக் குழுமம் பல்வேறு இலக்கியச் செயற்பாடுகளால் தன்னை நிலைநிறுத்திவருகிறது. தரமான படைப்புகளை உலகறியச் செய்யும் பணியை முதன்மையாகக் கொண்ட குழுமத்தின் பயணம் முகநூல் தொடங்கி இன்று ‘படைப்பு நுவல்’ வரை நீண்டுள்ளது. நுவலின் முதல் நிகழ்ச்சி குறித்த கட்டுரை இவ்இதழில் வெளியாகியுள்ளது.

2022இல் தாங்கள் வாசித்த நூல்கள் குறித்த இலக்கியவாதிகளின் அனுபவப் பகிரல்கள் இடம்பெற்றுள்ளன. இது சமூகத்தில் வாசிப்பிற்குட்படுத்தப்படும், உட்படுத்தவேண்டிய நூல்களைச் சுட்டிக்காட்டி வாசகர்களுக்குத் தம் வாசிப்பிற்கேற்ற நூல் தேர்ந்தெடுப்புக்குப் பெரிதும் உதவும். குழந்தைகளுக்கான கதைசொல்லிகள் எச்சமூகத்திற்கும் அத்தியாவசியத் தேவை. மன மேம்பாடுற்ற, அறம் நிறைந்த ஒரு சமூகத்தின் உருவாக்கத்திற்குக் கதைகளைக் கேட்டு அறிவுடனும் நெறிகளுடனும் வளரும் குழந்தைகள்தான் அடித்தளம். அத்தகைய பணியைச் செய்வோருள் ஒருவரான குறட்டை மாமா கணேசுபிரபுவுடன் நிகழ்த்திய சந்திப்பு கட்டுரையாக வெளியாகியுள்ளது.

கவிஞர் விக்ரமாதித்யனைப் பற்றிப் படைப்புக் குழுமம் உச்சிமுகர்ந்து கொண்டாடிக் கொண்டாடித் தீரவில்லை. இந்த இதழில் மு.முருகேஷ் தனது நோக்கிலான கவிஞர் விக்ரமாதித்யனைப் பகிர்ந்துகொண்டுள்ளார். விதைகள் குறித்தான ஆதிரனின் பதிவு சூழலியல் சார்ந்தது மட்டுமல்ல.. மனித வரலாறு சார்ந்தது. தத்துவம் என்னும் பிரம்மாண்டத்தை எளிதாய் மிகச் சிறிய வரிகளில் இப்பதிவு அறிமுகப்படுத்திவிடுகிறது.

இன்னும் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், தொடர்கள், அனுபவங்கள் என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

ஆசிரியர். ■

வீரசோழன் க.சோ.திருமாவளவன்

# மனிதத்தின் மேல் உள்ள அன்பே என்னை எழுத்து உலகத்துக்கு இழுத்து வந்தது..



## - எழுத்தாளர் ஜோ டி குருஸ் உடனான நேர்காணல்

**ஜோ** டி குருஸ் தமிழ்நாட்டின் கடலோரக் கிராமமான உவரியைச் சேர்ந்தவர். அவரது படைப்புகள் தமிழ்நாட்டின் கடலோர மக்களின் வாழ்க்கை, போராட்டம், வரலாறு, கலாச்சாரம் மற்றும் பிற அடையாளங்களைச் சுற்றித்தான் எழுந்துள்ளன. 2009ஆம் ஆண்டு வெளியான இவரது கொற்கை நாவல் 2013ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி விருதைப் பெற்றது. எழுத்தாளர், ஆவணப் பட இயக்குனர் என்பதை எல்லாம் தாண்டி, தன்னை ஒரு மீனவராக அடையாளப்படுத்திக்கொள்வதில் ஆர்வமிக்கவர். படைப்புக் குழுமத்திற்கு அவர் அளித்த நேர்காணல்..

**உங்கள் பூர்வீகம், பால்யகால வாசிப்பு பற்றிச் சொல்லுங்கள்..**

பிறந்தது கடற்கரை ஊரான உவரி, திருநெல்வேலி மாவட்டம். அய்யா கப்பலில் மாலுமியாக வேலை பார்த்தவர், ஆத்தா ஆரம்பப் பள்ளி ஆசிரியை.

நான் பிறந்த கடலும் கடல் சார்ந்த நிலமான நெய்தல் எனக்குப் பிடித்தமான நிலம். கடல் தொழிலின் அபாயம் கருதி, பிள்ளைகள் யாரும் கடல் பக்கம் போகக்கூடாது எனக் கண்டிப்பாய் இருந்தாள் ஆத்தா. வீட்டில் எவ்வளவோ எதிர்ப்புகள் இருந்தாலும் கடற்கரையே கதியெனக் கிடந்திருக்கிறேன். சிறு வயது முதல், இன்றுவரை என் நண்பர்களாய்த் தொடர்பவர்கள் கடல் தொழில் செய்பவர்களே.

கடற்கரையில் அமர்ந்து பெரியவர்கள் கதை சொல்வதைக் கேட்பதில் எனக்கு அலாதிப் பிரியம். பணி சார்ந்து எவ்வளவோ இடங்களுக்குப் போய் வந்துவிட்டேன். ஆனாலும் பெருங் கடலோடியான தாத்தா தொம்மந்திரையும், பாட்டி பிரகாசியும்தான் இந்த வாழ்வில் நான் மதிக்கும் ஆகச் சிறந்த ஆளுமைகள்.

இளமைக் காலத்தில், ஆத்தாவுடைய கடிதங்கள் என்னுடைய வாசிப்புக்குப் பெரிதும் உதவியாய் இருந்தன. உயர்நிலைப் பள்ளியிலிருந்து முதுகலைக் கல்லூரி வாழ்க்கைவரை விடுதி மாணவ வாழ்க்கையிலிருந்த எனக்கு ஆத்தாவின் கடிதங்களே ஆறுதல்! ஆத்தாவின் எழுத்துத் தொடர்ச்சிதான் நானாய் இருப்பேனோ எனக்கூட எண்ணத் தோன்றுகிறது.

கல்லூரி வாழ்க்கையில்தான் நாவல் வாசிக்க ஆரம்பித்தேன். சாண்டில்யன், கல்கி, புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், அசோகமித்திரன் என ஆரம்பித்த வாசிப்புப் பழக்கம் சுந்தர ராமசாமி, ப.சிங்காரம், பாமா, சிவகாமி, பூமணி, இமயம், சு.வேணுகோபால், கண்மணி குணசேகரன், க.வை.பழனிச்சாமி, மு. ராஜேந்திரன், வெண்ணிலா, கார்த்திக் புகழேந்தி, அகர முதல்வன், அரவிந்த்குமார் என இன்றுவரை தொடர்கிறது.

**உங்கள் பெயருக்குப் பின் ஏதாவது வரலாறு இருக்கிறதா.. ஏதாவது ஒரு பாரம்பரியத்தைச் சார்ந்து இருக்கிறதா?**

டி குருஸ் என்பது எங்கள் குடும்பப் பெயர். போர்ச்சுக்கீசியர்களால் கத்தோலிக்க நம்பிக்கைக்கு மாறிய எனது மூதாதையர்களுக்குக் கொடுக்கப்பட்ட பெயர். அது ஒரு கலாச்சார வீழ்ச்சியின் அடையாளம். ஆனாலும் தலைமீது தூக்கி வைத்துக்கொண்டு அலைகிறேன். கீழே இறக்கி வைக்கத் தெரியவில்லை. போர்ச்சுக்கீசியர்களின் இந்த அல்குய்ஞங்களை ஏற்றுக்கொள்ளாத பரதவர்கள் கடற்கரையில் உண்டு. வில்லவராயன், பூபாலராயன், கலிங்கராயன் இதுபோல... எங்கள் பங்காளிகளே போர்ச்சுக்கீசியப் பெயர் வேண்டாமென மறுத்து இன்றும் வீரச்சந்திரா என்ற குடும்பப் பெயரோடு, நான் பிறந்த ஊரிலேயே இருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில், இன்றும் இந்துப் பரதவர்கள் இருக்கிறார்கள்.

**எழுத்துத் துறைக்கு வருவதற்கு முன்பான உங்கள் பயணம்? இந்த மண்ணை, மக்களை எழுத்தின் வாயிலாக உலகிற்கு அறிமுகம் செய்ய வேண்டும் என்ற துடிப்பை உங்களுக்குள் விதைத்தது?**

முதல் திருமணத்தில் ஏற்பட்ட மணவிலக்கு, மனதளவில் என்னைப் பெரிதும் பாதித்தது. என்ன செய்வது என்று புரியாமல் இருந்து, கவிதை எழுத முயற்சித்த என்னை மடை மாற்றியவர் தமிழினி பதிப்பாளர் வசந்தகுமார். அவருடனான தொடர் உரையாடலில், சமூகம் சார்ந்து என் ஆழ்மனதில் உறங்கிக் கிடந்த பல நினைவுகள், வெளிச்சத்துக்கு வந்தன. நானும் வாழ்வைப் பதிவு செய்யலாம் என்ற முடிவுக்கு வந்தேன்.

மனிதத்தின் மேல் உள்ள அன்பே என்னை எழுத்து உலகத்துக்கு இழுத்து வந்தது. மற்ற நிலப்பரப்புகளில் நடக்கும் வாழ்க்கைப்



பதிவுகள் போல் நெய்தலிலும் வாழ்க்கை பதிவு பெறவேண்டும் என மனதார நினைத்தேன்.

நெய்தலின் வாழ்வைப் பதிவு செய்வதால் எனக்கு என்ன கிடைக்கும்? முதலில் மன நிம்மதி கிடைக்கும். அன்பான, அக்கறையான பதிவுகள், அடுத்த நிலப்பரப்பு மக்களோடு உரையாடும், வாழ்வின் புரிதலை ஏற்படுத்தும் என்ற புரிதல் எனக்கு இருந்தது. பெருங் கடலோடிய இந்த நெய்தல் மக்கள், மீனவர்கள் எனக் குறுக்கப்பட்டு, அரசியல்ரீதியாய்த் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவது என்னுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. நெய்தல் வாழ்வைப் பதிவு செய்வதற்கான விதை இதுதான் என நினைக்கிறேன்.

**மீனவ சமூகத்தின் சிக்கல்கள், அவலங்களை அவர்களுடைய மொழியிலேயே வெளிப்படுத்தியது என்று ஆழிசூழ் உலகிற்குத் தனித்த இடம் உண்டு. எதனால் இப்படி ஒரு படைப்பை மக்கள் முன் வைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது?**

கடலோர மக்கள், தங்கள் வாழுமிடமும் தொழிலும் மாறாத பழங்குடிகள். தனித்துவமான வாழ்க்கை முறையால், ஆட்சியதிகாரத்தோடு உறவாட, உரையாடத் தயங்குபவர்கள். குறிஞ்சியும், முல்லையும், மருதமும், பாலையும் உப்பு விற்கும் நெய்தலின் உமணர்களின் வருகைக்காகக் காத்துக் கிடந்தது ஒருகாலம். காலனிய காலத்துக்கு முன்னான வரலாற்றுக் காலத்திலேயே கடல் கடந்த போர்களுக்காகவும், கடல்வழி வாணிபத்திற்காகவும் நெய்தல் மக்களை அரசுகள் நம்பியிருந்த காலம் பொற்காலம்.

ஒரு தேசத்து மக்களின் நம்பிக்கையை அடுத்த ஒரு தேசத்தில் விதைக்க வேண்டுமா அதற்கும் வலுவான வெள்ளந்தியான நெய்தல் மக்கள் தேவைப்பட்டார்கள். ஆனால் அடுத்து வந்த காலனிய மனப்பான்மையில் தொடரும் சுதேசி அரசியல், எல்லைக் காவலர்களான நெய்தல் மக்களை வெற்று வாக்கு வங்கிகளாக மாற்றிவிட்டது. என்னுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய உணர்வு இது. நெய்தல் வாழ்வை, அதன் விழுமியங்களைப் பதிவு செய்து, மற்ற நிலத்து மக்களோடு உரையாடிப் புரிதலை



ஏற்படுத்த முடிவு செய்தேன்.

**"ஆழிசூழ் உலகு" திடகாத்திரமாக அடுத்த சந்ததிக்கு ஆவணமாக இருப்பதற்கான முக்கிய காரணமென எதனை நினைக்கிறீர்கள்?**

ரத்தமும், சதையுமான வாழ்க்கைப் பதிவு. அடிப்பது வலிக்கிறதாம் என்பதைவிட வலிக்கிறது என்ற நேரடிக் குரல். அக்கறையான வாசகர்கள் நெய்தல் வாழ்வைப் புரிந்துகொள்வார்கள். அன்றாடம் இயற்கையை எதிர்த்துப் போராடும் நெய்தல் மக்களின் வாழ்வு சமவெளி மக்களின் புரிதலுக்குள் வரும் என்ற நம்பிக்கை.

**உலகம் முழுவதும் கடலோடிகளின் வாழ்வில் நடக்கும் சம்பவத்தை உயிரோட்டமாகக் கொற்கையில் பதிவு செய்திருப்பீர்கள். சிறுவயதில் கடற்கரையில் அமர்ந்து கடலுக்குள் நடப்பதை மூத்த கடலோடிகள் சொல்லக் கேட்டதே இதற்குப் பின்புலமாக இருந்ததா?**

முழுமையை நோக்கிய முற்றுப் பெறாத பயணம்தான் இந்த வாழ்வு. இந்த உலகம் பலரது பங்களிப்பால் நாளும் முன்னேறியபடியே இருக்கிறது. பங்களிப்புச் சமூகங்களைப் புறம்தள்ளிய அரசுகள் நிலைத்ததாகச் சரித்திரத்தில் குறிப்புகள் இல்லை. அதற்காக சுயநலத்தின் உச்சத்தில் மனிதத்தைத் தொலைத்து விட முடியாது. மாற்றம் தேவை, ஆனால் மனிதம் மறந்த மாற்றம் அல்ல. இயந்திரமயமான இந்த உலக வாழ்வை எதிர்கொள்ள நடைமுறையில், பழக்க வழக்கத்தில் மாற்றம் வந்தே ஆகவேண்டும். அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாமல், வாழ்வின் நெருக்கடியில் திணறும் நெய்தல் மக்களை நோக்கிய அறைகூவல்தான் கொற்கை.

வாழ்வின் பிரச்சினைகளுக்கான தீர்வு எப்போதும் உண்மையின் அருகிலேயே இருக்கிறது. அந்த உண்மையைக் கண்டுகொண்டவர்கள் தீர்வை நோக்கிப் பயணிக்கிறார்கள். மூத்தோர் சொல் மந்திரம் என்பார்களே, அதுபோல அனுபவப் பாடம் நம் பிரச்சினைகளுக்கான தீர்வை நோக்கிப் பயணிக்க வைக்கும்.

**கொற்கை நாவல் எழுத 2005இல் இருந்து 2009 வரை எடுத்துக்கொண்டீர்கள்!**

பரந்த தளத்தில் வாழ்வைச் சொல்ல ஆய்வுகள் கண்டிப்பாகத் தேவை. முதல் கட்டத் தகவல்களான நேர்காணல், வாய்வழிப் பாடல், கள ஆய்வு போன்றவற்றிற்காகப் பெருமளவில் காலத்தையும், உழைப்பையும் கொடுக்க வேண்டியிருந்தது. உனக்கு எது தேவையோ அதற்கு நீ தேவை என்பதே அது.

**இந்தியாவின் பரந்து விரிந்த கடற்கரையின் எல்லைக் காவலர்கள் நெய்தல் நில மக்கள். இந்தப் புரிதல் சமவெளி மக்களுக்கு இருக்கிறதா!**

இல்லை என்பதுதான் உண்மை.

**ஒரு எழுத்தாளனாக எழுதுவதைத் தாண்டியும் மீனவர்களின் இன்னல்களை ஆவணப்படுத்தும் முயற்சியிலும் உங்கள் பங்கு அளப்பரியது. தமிழக மீனவர்கள் பற்றி ஆவணப்படம் மெனக்கெடலோடு எடுப்பதற்கு எது காரணமாக இருந்தது?**

பிரச்சினையைப் பொதுத்தளத்தில் புரியவைக்க வேண்டும் என்ற அக்கறைதான் காரணம். 'விடியாத பொழுதுகள்' என்ற முதல் ஆவணப்படமும், அதன் பின்னான 'விடியலை நோக்கி [Towards Dawn]', 'எனது சனமே', 'இனயம் கள நிஜங்கள்' போன்ற ஆவணப்படங்களும் கடலோரச் சமூக மக்களின் வாழ்வியல், வாழ்வாதாரம், வாழ்வாதாரப் போராட்டம் குறித்துப் பேசுபவை.

**நூறு ஆண்டுகள் கடந்து வந்த கதையைக் கொற்கை நாவலாகப் படைத்திருக்கிறீர்கள். இதற்கான தரவுகளை எங்கிருந்து பெற்று அதனை நாவலாக ஆக்க முடிந்தது..**

மக்களிடமிருந்துதான்...

**சமூகத்தில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டும்போது, வெறுப்பையும் விரோதத்தையும் சம்பாதிக்க வேண்டியிருக்கும். அதை எவ்வாறு எதிர்கொள்கிறீர்கள்?**

நான் யாருக்காக எழுதினேனோ அந்தச் சமூகத்தின் படித்தவர்களிடமிருந்தே பொது இடங்களில் அலட்சியத்தையும் அவமானத்தையும் எதிர்கொள்கிறேன். பொறாமையில் செய்கிறார்கள் என்று தெரிகிறது. இளநகையோடு அவற்றைக் கடந்துவிடுகிறேன். கல்லடியால் காயப்பட்டாலும், காலம் கனி கொடுத்தவர்களையே நினைவில் வைத்திருக்கிறது.

**ஒரு எழுத்தாளன் தன் நிலத்தையே எப்போதும் எழுதுகிறவன். ஆனால் நீங்கள் உங்கள் நினைவுகளோடு உங்கள் நிலத்தையும் சுமந்து அலைகிறீர்கள். அது உங்கள் எழுத்துக்களில் உயிர் வாகை சூடுகிறது. இது எப்படி..**

யதார்த்தமான நில வாழ்வைப் பதிவு செய்து, கனவுகளோடு அலைபவன் படைப்பாளி. அவனது கனவு நேரடிக் கூற்றாகவோ, மறைமுகமாகவோ அல்லது பகடி கலந்தோ வெளிப்படலாம். அக்கறையான வாசகர்கள் கண்டுகொள்வார்கள்.

**ஒரு கவிஞனை நினைவுகூர்வதே அரிதான சூழலில் பத்தினிப்பாறை சென்று கவிஞர் பிரான்சிஸ் கிருபா கல்லறைக்குச் சென்று திரும்பியிருக்கிறீர்கள். அந்தக் கவிஞனை நினைவுபடுத்திச் சென்றதற்கான காரணம்?**

அவன் மனிதத்தின் காதலன் என்பதால்.

**தனது முன்னோர் மரபைக் கண்டுவிடத் துடிக்கும் சிறுவனின் தேடல், அவனுடைய முதுமையிலும் அயராமல் தொடர்வதோடு, மத வணிக நிறுவனங்களால் அல்லல்படும் மக்களின் வாழ்வை அக்கறையோடு சொல்கிறது. ஆனால் அங்கு வாழும் மக்களிடையே மாற்றம் ஏற்பட்டு இருக்கிறதா?**

யாத்திரை நாவலைப் பற்றியான கேள்வியாக இதை நான் புரிந்துகொள்கிறேன். திருக்குறள் எழுதப்பட்டு பல நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. சமூக மாற்றம் வந்துவிட்டதா? இல்லையே. அந்த மாற்றத்துக்காகக் காத்திருக்கிறோம்.

யாத்திரை ஒருவகையிலான ஆன்மீகத்





தேடல். கொரானாக் காலத் தனிமை எல்லோரையும் போல என்னையும் வாட்டியது. இராமேஸ்வரம் தீவில் அக்காமடம் கடற்கரையில் தனித்து விடப்பட்டிருந்தேன். அது கடற்கரை என்பதால், பொறுமையாய்க் கடலையே அவதானித்தபடி இருந்தேன்.

கண்முன்னே விரிந்து கிடக்கும் கடல், பல நிறங்களில் காட்சியளிக்கிறது. அமைதியாய்க் கரைகளில் தன் விளிம்பு மடக்கும் அதே கடல், சில வேளைகளில் ஆக்ரோஷமாய்க் கரைகளை அறைகிறது. மீன்கள், பூச்சிகள், புழுக்கள், பாசிகள் என எத்தனையோ ஜீவராசிகளின் வாழ்விடமாய், வாழ்வாதாரமாய் இருக்கும் கடலின் மேல் காற்று கரைவதை என் கண்முன்னே பார்க்கிறேன். தனித்து, பொறுத்து வாழ்வை அவதானித்தபடியே இருந்தேன்.. பலன் யாத்திரை.

**தற்போது எழுதிக்கொண்டிருக்கும் படைப்பு..**

அலையடிப்பது போல வாழ்வை எதிர்கொண்டபடியே இருக்கும் என்னால் பட்டியல் போட்டுப் படைப்புகள் தர இயலாது. மனிதத்தை ஆய்வு செய்தபடியே இருக்கிறது இலக்கியம். ஒரு பூ முகிழ்வதைப் போல, பழம் கனிவதைப் போல இலக்கியம் கனிய வேண்டும், அதுவே வாழ்வின் முகிழ்வாக இருக்கும். இந்தக் கணத்தில் அப்படி எதுவுமில்லை, அடுத்த நொடியே சூழல் மாறலாம், படைப்புக்கான கரு உருக்கொள்ளலாம்.

**உங்கள் மனதைப் பெரிதும் பாதித்த தற்போது எழுதும் இளம் எழுத்தாளர்களின் படைப்பு அல்லது படைப்பாளர் பற்றிக் கூறுங்கள்..**

நடுநாட்டுப் படைப்பாளி கண்மணி குணசேகரன். அவருடைய அனைத்து நாவல்களையும் வாசித்திருக்கிறேன். அஞ்சலை அற்புதமான படைப்பு. அங்கீகாரம் கிடைக்கிறது, கிடைக்கவில்லை என்ற எந்தப் பாதிப்பும் இல்லாமல் தனது போக்கில் வாழ்வைப் பதிவு செய்தபடியே இருக்கிறார். நினைவில் நிற்கும் எத்தனையோ படைப்பாளிகள் இருக்கிறார்கள் ஆனாலும் என்னுடைய தேர்வு கண்மணிதான்.

# வாசிப்பு 2022

## 2. கவிஞர் வசுமித்ரா


2022இல் நான் வாசித்தவற்றுள் இந்த இரண்டு புத்தகங்களும் குறிப்பிடத்தக்கவை.




**1.ஜென் சதை ஜென் எலும்புகள்**

- பால் ரெப்ஸ், நியோஜென் சென்ஸகி

மனதால் வாழுபவர்கள் யதார்த்த உலகை எப்படிப் பார்க்கிறார்கள்.. யதார்த்தம் அவர்களை எப்படிப் பார்க்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டான ஒரு முறையியல்தான் ஜென் சதை ஜென் எலும்புகள். ஜென் மாணவனாகவும் மாணவன் ஜென்னாகவும் காட்சி தருவதுண்டு. பிரிவை மிகப் பிரியத்துக்குரிய பொருளாய்க் கையாளும் வழியாக ஜென்னைக் கருதலாம். 'அப்படியா' வார்த்தைக்குள் ஒரு ஜென் வாழ்ந்துவிட முடிகிறது. ஜென்னே வார்த்தையாகவும் இருக்கிறது.. ஜென்னே அர்த்தமாகவும், ஜென்னே சூன்யமாகவும்.




**2. மூச்சே நறுமணமானால்**

- அக்கமகாதேவி

ஆண்டாளை நினைக்காமல் அக்கமகாதேவியைப் படிக்க முடியாதுதான். மாறாக ஆண்டாளின் கைத்தலம் பற்றக் கண்ணன் கைகள் நடுங்குவதில்லை. மாறாக அக்கமகாதேவியின் கரம் பிடிக்கையில் மல்லிகார்ச்சுனனுக்கு உள்ளங்கையில் வியர்வை அரும்பும். சிவனின் உடுக்கையை முலையால் வருடுபவளை வேறென்னதான் சொல்ல முடியும்.

"உள்ளே கணவன் வெளியே காதலன்
இரண்டையும் நடத்த முடியவில்லை அம்மா
சென்ன மல்லிகார்ச்சுனனே
வில்லையும் விளாம்பழத்தையும்
ஒன்றாய் பிடிக்க முடியவில்லை ஐயா"

என்கிறாள் அக்கமகாதேவி. அவள் முறையிடுவது அம்மையிடம் அல்ல. காதலனிடம்.

## ❧. எழுத்தாளர் தமிழ்நதி

2022இல் தமிழில் வெளியான புதிய புனைவுகளை வாசித்ததைவிட, கிளாசிக் நாவல்கள், மொழிபெயர்ப்புகள், தஸ்தயேவ்ஸ்கி, டால்ஸ்டாய் இன்ன பிறரது படைப்புகளையே மீள்வாசிப்பு செய்தேன். வாசித்த எல்லாமும் நினைவில் இல்லை. நினைவில் இருப்பவற்றைப் பகிர்ந்துகொள்கிறேன்.

1. தனது மனைவியைத் தொப்பியாக நினைத்துக்கொண்ட மனிதர், ஆலிவர் சேக்ஸ், தமிழில்: ச.வின்சென்ற், 2. கரமசோவ் சகோதரர்கள், தஸ்தயேவ்ஸ்கி, தமிழில்: கவிஞர் புவியரசு, 3. என் நினைவில் சே, அலெய்டா மார்ச், தமிழில்: அ.மங்கை, 4.அறியப்படாத தீவின் கதை, ஜோசே சரமாகோ, தமிழில்: ஆனந்த், 5. மானக்கேடு, ஜே.எம்.கூட்ஸி, தமிழில்: ஷஹிதா, 6. பிராப்ளம்ஸ்கி விடுதி, டிமிட்ரி வெர்ஹல்ஸ்ட், தமிழில்: லதா அருணாச்சலம், 7. கடல், ஜான் பான்வில், தமிழில்: ஜி.குப்புசாமி, 8. ஸரமாகோ: நாவல்களின் பயணம், எஸ்.வி.ராஜதுரை, 9. கோபல்ல கிராமம், கோபல்லபுரத்து மக்கள், கி.இராஜநாராயணன், 10. இரண்டு உலகங்கள், வண்ணநிலவன் சிறுகதைகள், 11. யாத்திரை, ஜோ.டி.குருஸ், 12. நிலம் எனும் நல்லாள், சு.வேணுகோபால், 13.பனி, ஒரான் பாமுக், தமிழில்: ஜி.குப்புசாமி, 14. விருந்து, கே.என். செந்தில், 15. விலாஸம், பா.திருச்செந்தாழை, 16. கதையும் புனைவும், பா.வெங்கடேசன், 17. அனுபவங்களின் நிழல் பாதை, ரெங்கையா முருகன் - வி.ஹரிசரவணன், 18. ஆர்தேமியா க்ருஸ்சின் மரணம், கார்லோஸ் புயந்தஸ், தமிழில்: ஸ்ரீதர் ரங்கராஜ், 19. நீர்வழிப்படூஉம், தேவிபாரதி, 20. இடைவெளி, எஸ்.சம்பத், 21. அந்தரத்தில் பறக்கும் கொடி, சுந்தர ராமசாமி, 22. ஐயாவின் கணக்குப் புத்தகம், அ.முத்துலிங்கம், 23. பாத்துமாவின் ஆடு, வைக்கம் முகம்மது பஷீர், தமிழில்: குளச்சல் யூசுஃப், 24. கரைந்த நிழல்கள், அசோகமித்திரன், 25. மணல் கடிகை, எம்.கோபாலகிருஷ்ணன், 26. கறுப்பு விளக்குத் தெரு, சிகா உனிக்வே, தமிழில்: மாயா, 27. மோகப் பெருமயக்கு, சுகுமாரன் (தி. ஜா.படைப்புகள் பற்றிய கட்டுரைத் தொகுப்பு), 28.பீடி, தக்ஷிலா ஸ்வர்ணமாலி, தமிழில்: ரிஷான் ஷெரிப், 29. அபி கவிதைகள், 30. சுகுமாரன் கவிதைகள் (1974-2019),




வாசித்தவற்றுள் எனக்கு மிகவும் பிடித்த நூலென்றால், லதா அருணாச்சலத்தால் மொழிபெயர்க்கப்பட்ட ப்ராப்ளம்ஸ்கி விடுதியே. ஆசிரியர்: டிமிட்ரி வெர்ஹல்ஸ்ட், வெளியீடு காலச்சுவடு. பக்கங்கள்: 120. பெல்ஜியம் நாட்டில் அமைந்திருக்கும், புகலிடம் தேடுவோர் மையமொன்றில் நடைபெறும் சம்பவங்களை உள்ளடக்கிய குறுநாவல் இதுவாகும். அகதி வாழ்வின் அவலங்களைச் சித்தரிப்பதெனினும், கசப்பான அங்கதம் கலந்த அந்நாவலின் மொழிநடையானது ஒரே அமர்வில் வாசித்து முடித்துவிடத் தூண்டுவதாகும். பிறமொழி நாவலொன்றை வாசித்துக்கொண்டிருக்கிறோம் என்ற உணர்வேயற்று அதனோடு ஒன்றிப்போகவைக்குமளவிற்கு மிகச்சிறப்பாக மொழிபெயர்த்திருந்தார் லதா அருணாச்சலம். ●●

## எழுத்தாளர் லஷ்மி பாலகிருஷ்ணன்

இந்த ஆண்டு என் வாசிப்புப் பட்டியலில் அதிக நூல்கள் இல்லாமல் போனதற்குக் காரணம் நான் ஒரு சுழலில் மாட்டிக்கொண்டதுதான். எனது அடுத்த நாவலான மானசா மகாபாரதத்திலிருந்து உருவான ஒரு துளி என்பதால் அது சார்ந்த மீள் வாசிப்பே என் நேரத்தைப் பெரும்பாலும் எடுத்துக்கொண்டது. கிடைத்த குறைந்த நேரத்தில் வாசித்த புத்தகங்கள் இவை...


கடசல் - ம. காமுத்துரையின் நாவல். ஜீரோ டிகிரி வெளியீடு.

கடசல் எனும் தலைப்பு பல அடுக்குகளில் அர்த்தம் கொள்ளத்தக்கது.. நாவல் நிகழும் லேத் பட்டறை, அதை நம்பி வாழும் நடுத்தர வர்க்கத் தொழிலாளிகளின் தனி வாழ்வு, பட்டறைத் தொழிலில் ஏற்படும் சுழலில் சிறு பட்டறைகள் மூடப்பட்டு பெரிய தொழிலகங்களின் ஒரு பகுதியாக மாறுவது போன்ற சுழல்களுக்குள் குழந்தைத் தொழிலாளர்களின் வாழ்வு, களவொழுக்கம், அது தரும் மன அழுத்தங்கள் பேய் பிடித்தல் எனும் விதத்தில் வெளிப்படுவது எனப் பல அடுக்குகளில் சுழன்று வெளிப்படும் கதை சிறுவர்களின் விளையாட்டு, பெண்களின் அவ்வையாரம்மன் பூசை, குழந்தைகளின் மீதான பாலியல் சுரண்டல்கள் எனப் பல புள்ளிகளைத் தொட்டுச் செல்கிறது. பல்வேறு வண்ணப் பூக்களை இறுகக் கட்டிய செண்டு போன்ற கட்டமைப்போடு மிளிரும் நாவல் இது.

உடல் வடித்தான் - அபுல் கலாம் ஆசாத் எழுதிய இந்நாவலும் ஜீரோ டிகிரி வெளியீடுதான்.

அப்துல் எனும் ஆட்டோ ஓட்டுனர் உடற்பயிற்சிகளின் மீது ஆர்வம் கொண்டு ஆணழகன் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிகளை ஈட்டுவது பற்றிய கதை. ஆற்றொழுக்கான நடையில் சொல்லப்பட்டுள்ள ஒரு மனிதனின் வெற்றிக் கதை. படிப்பிலும், பொருளாதாரத்திலும் மிகவும் பின் தங்கிய நிலையிலிருந்து கிளம்பி தான் எண்ணியதை எண்ணியாங்கு எய்துமொரு திண்ணிய உள்ளத்தானின் கதை இது.





சி.எம். முத்துவின் மிராசு, அனன்யா பதிப்பக வெளியீடு.


சுதந்திரத்திற்குப் பின்னான காலகட்டத்தில் வாழ்ந்த நிலவுடைமைச் சமூகத்தின் கதை. இது சேதுகாளிங்கராயர் எனும் மிராசுவின் வாழ்வு மட்டுமல்ல, அவரைச் சுற்றி இருந்த விவசாயச் சமூகத்தின் வாழ்வும்கூட. குத்தகைக்கு நிலம் எடுத்துப் பயிர் செய்பவர்கள் தொடங்கி, கூலித் தொழிலாளர்களின் சேரி வாழ்க்கை வரை பல்வேறு விஷயங்களைப் பேசுகிறது. கிராமத்து நிலவுடைமை வாழ்விலிருந்து நகர்ந்து கல்வி கற்று நகர வாழ்விற்கு மாறினால் மட்டுமே தப்பிப் பிழைக்க முடியும் என்பதை உணர்ந்துகொண்ட ஒரு தலைமுறையின் வாழ்க்கைப்பாடுகளைப் பேசும் இந்நாவல் நான் பிறந்து வளர்ந்த பாபநாசத்திற்கு அருகிலுள்ள கிராமத்தைக் கதைக்களனாகக் கொண்டது என்பதாலும், விவசாயப் பின்னணி நான் நன்கறிந்த ஒன்று என்பதாலும் மனதிற்கு மிக நெருக்கமானதாகிப் போனது ••

## கவிஞர் கலாப்ரியா

*2022இல் நான் வாசித்த நூல்கள்:*

*மிளகு - பெரு நாவல், இரா.முருகன் எழுதியது. மேற்குக் கடற்கரையின் கொங்கணப் பிரதேசத்தை ஆண்ட மிளகு ராணியைப் பற்றிய, ஐரோப்பிய வர்த்தகர்களை இந்தியாவுக்கு இழுத்து வந்த மிளகின் சுவை பற்றிய சுவையான நாவல்.*






*ஈர்ப்பின் பெருமலர் – கவிதைகள், எஸ்.சண்முகத்தின் படைப்பு. கவிதையும் கவிதையியல் பற்றிய கருத்துக்களும் நன்கு கை வரப்பெற்றவரின் முக்கியமான தொகுப்பு.*

*காலாபாணி - மு.ராஜேந்திரன் நாவல். இந்திய சுதந்திரப் போராட்டம் தமிழ்நாட்டில் மருது சகோதரர்களால் முன்னெடுக்கப்பட்டு அவர்கள் தண்டனைக்குள்ளாகி அவர்களது வாரிசுகள் கடல் கடந்து நாடு கடத்தப்பட்ட சோகக் கதை.*

*இஸ்தான் புல்: நிலவறைக் கைதிகளின் நிலவறைக் குறிப்புகள் - தமிழில்: முடவன் குட்டி முகம்மது அலி. மிக முக்கியமான நாவல்.*

*மாயவரம் - சந்தியா நடராஜன் எழுதியது. மாயவரம் நகர், அதன் மைந்தர்கள், அவர்களது சமூகப் பங்களிப்பு ஆகியவை சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளன. ஒரு ஊரைப் பற்றிய விவரணைகள் அடங்கிய இந்த வகை நூல்களில் இது முன்னோடியும் முக்கியமானதுமாகும்.* ●●

## எழுத்தாளர் மீரான் மைதீன்


*2022இல் நான் வாசித்த நூல்கள்:*

*கடல் பழகுதல், கையறுநதி, ஸலாம் அலைக், தம்பான், கிறுக்கி, தீவாந்திரம், மராம்பு, 1001 அரேபிய இரவுகள், பெருக்கு, ஆதிலா, மயில் பற்றிய குறிப்புகள்...*

*இவற்றுள் வறீதையா கான்ஸ்தந்தின் "கடல் பழகுதல்" நூல் பற்றிச் சொல்லியாக வேண்டும்.*

*கரையிலிருந்து கடலைப் பார்க்கும் மேம்போக்கான பார்வை இல்லாமல், கடலுக்குள்ளிருந்து கடலைப் பார்க்கிற மிக முக்கியமான ஒரு அவதாரம். பேரிடர்களையும், பெருந்துயரங்களையும் பெண்களின் கண்கள் வழியாகப் பார்க்கத் தூண்டுகிற மிக முக்கியமான கருத்துக் கட்டமைப்பை இந்த நூல் செய்கிறது.*






*கடல் பற்றிய அடிப்படை அறிவை நமக்குக் கற்றுத் தருகிறது. கடல் சார்ந்த சூழலியல் முக்கியத்துவத்தை உணர்த்தி, நமது அபிப்பிராயங்களை மறுகட்டமைப்பு செய்கிறது. கடல், கடல் வாழ் உயிரினங்கள், மீனவர்கள், அவர்களின் ஈடில்லா உழைப்பு ஆகியவை பற்றிய புரிதலைத் தருகிறது. மீனவர்கள் மீதான அரசுகளின் சுரண்டல்களைப் பேசுகிறது. அவசியம் வாசிக்க வேண்டிய நூல்.* ●●

## எழுத்தாளர் லஷ்மி சரவணகுமார்

2022இல் நிறைய புத்தகங்கள் வாசித்திருந்தாலும் அதில் முக்கியமானதாக நான் கருதுவது, "பெய்ரூத்திலிருந்து ஜெருசலேம் வரை" என்ற நூல். இஸ்ரேல் எனும் ஒரு நாடு தன்னுடைய எதேச்சதிகாரத்தை நிரூபிப்பதற்காக எவ்வளவு கொடூரமாக, கருணையேயில்லாமல் பாலஸ்தீனிய மக்களைப் படுகொலை செய்கிறார்கள் என்பதைத்தான் புத்தகம் முழுக்கப் பதிவு செய்திருக்கிறார்கள்.






இதை ஏன் முக்கியமானதென்று கூறுகிறேனென்றால் இன்றைக்கு வரைக்குமே அரபு மக்களைப் பற்றிய புரிதல் என்பது ரொம்ப மேலோட்டமானதாகவும், ஊடகங்களால் உருவாக்கப்பட்டதாகவும்தான் இருக்கிறது. அதற்கு வெளியில் அரேபியர்களைப் பற்றிப் புரிந்துகொள்வதற்கு இந்தப் புத்தகம் உதவுகிறது. நூலாசிரியர் ஒரு சீனர். அவரின் அம்மாவும் அப்பாவும் இரண்டாம் உலகப்போர் காலகட்டத்தில் ஜப்பானின் கொடுமைக்கு ஆளாகி, அதிலிருந்து வெளியில் வந்து திருமணம் செய்துகொண்டவர்கள். தாய் தந்தையைப் போலவே தானும் ஆறு ஆண்டுகள் இந்த போர்ச் சூழலில் வாழ்ந்து ரத்தசாட்சியாக எழுதப்பட்ட புத்தகம். ••

## கவிஞர் நரன்

வாசித்தவற்றுள் நிறைய விருப்பமான புத்தகங்கள் உள்ளன. அதிலிருந்து ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால்... நிவேதிதா லூயிஸ் எழுதிய "அறியப்படாத கிறிஸ்தவம்" பாகம்1&2 வாசித்தேன்.



மிக முக்கியமான ஆய்வு நூல் இது. கிறித்துவத்தைத் தூக்கிப் பிடிக்காமல், எந்தப் பக்கமும் சாய்வில்லாமல் கிறித்துவத்தை அணுகியிருக்கும் விதம், அதிலிருக்கும் விசயங்களைத் தீர்க்கமாகப் பேசியிருப்பது என மிக மிக முக்கியமான ஒரு ஆய்வு நூல். ••




## எழுத்தாளர் மானசீகன்

நான் நாவல் எழுதும் பணிக்காக, 1990களுக்குப் பிறகு 2020 வரை எழுதப்பட்ட நாவல்களில் பலவற்றை வாசித்தேன். கிட்டத்தட்ட ஜெயமோகனின் அனைத்து நாவல்கள், கோபாலகிருஷ்ணனின் மணல்கடிகை, மனைமாட்சி, சு. வேணுகோபாலனின் நுண்வெளி கிரகணங்கள், ஜோ டி குருஸ்-இன் ஆழிசூழ் உலகு, சு. வெங்கடேசனின் காவல்கோட்டம், யூமாவாசுகியின் இரத்தஉறவு, பிரான்சிஸ் கிருபாவின் கன்னி.. இப்படி பல நாவல்களை மீண்டும் படித்தேன். சில நாவல்களை முதன்முதலாகப் படித்தேன்.



மொழிபெயர்ப்பு நாவல்களில் டால்ஸ்டாயின் அன்னா கரீனினா-வை மீண்டும் வாசித்தேன். ஒரு நூற்றாண்டுக்குப் பிறகும் அது ரொம்ப உயிர்ப்போடு இருந்ததை நான் உணர்ந்தேன். அது ரொம்ப ஆச்சர்யமாக இருந்தது. அந்த நாவல் இன்னும் பழசாகவேயில்லை. அன்னா கரீனினா எழுதப்பட்ட பிறகு உலகத்தில் பல நாவலாசிரியர்கள் தோன்றியிருக்கிறார்கள். நாவல்களின் வடிவங்கள் மாறியிருக்கின்றன. ஆனால் 90 களுக்குப் பிறகு 2020 வரைக்கும் எழுதப்பட்ட தமிழ் நாவல்களுக்கு நிகராக, சில நேரங்களில் சில நாவல்களைவிட ஒருபடி மேலாக டால்ஸ்டாயின் நாவல் ஒரு வாசகனாக என்னைத் தொட்டது மிகப்பெரிய ஆச்சர்யம். எப்போதோ சிறுவயதில் வாசித்ததை மீண்டும் வாசித்தபோது அது என்னை ஆச்சர்யப்படுத்தியது என்று சொல்லலாம்.




## சரவணன் மாணிக்கவாசகம் - புத்தக விமர்சகர்


சென்ற வருடம் வாசித்த புத்தகங்களில் மனம் கவர்ந்தது நொய்யல். நாவலை வாசிக்கையில் எழுதிய அவருமில்லை, வாசிக்கும் நானுமில்லை, பள்ளி முடித்து நேராகப் பாதி படித்த புத்தக நினைவில் வீடு திரும்பும் சிறுவனாகிப்போனேன் நான்.

நாவலின் காலகட்டத்தில் ஜமீன், வெள்ளையர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள். நொய்யல் ஒவ்வொரு வீட்டின் வாசலுக்கும் சென்று குசலம் விசாரிக்கும் அளவிற்குப் பெருக்கெடுத்து ஓடியிருக்கிறது. நாவலின் முதல் மூன்று அத்தியாயங்கள் தொன்மத்தில் தோய்ந்தெடுத்து நகர்வதால் அந்த மனநிலையைச் சற்றுநேரம் விட்டுவிலக முடியாது போகிறது. இடையில் மறக்கக்கூடாது என்பதற்காகவே காரிச்சி கதாபாத்திரம். நொய்யலே பெண்ணுருவில் வந்தது போல. பேரழகும் அவள்தான் அவலட்சணமும் அவள்தான்.



நொய்யல் கரை வாழ்க்கை இது. வாய்மொழியாகச் சொல்லப்பட்ட நாட்டார் கதைகளின் சாயல் கொண்டது இந்த நாவல்.

மேற்பார்வைக்கு, ஒரு குடும்பத்தின் மூன்று தலைமுறைக்கதை போலத் தோற்றமளித்தாலும் இது ஒரு நதிக்கரையின் வாழ்க்கையைச் சொல்லும் கதை. சாதிக்கட்டுமானங்கள், நம்பிக்கைகள், புரளிகள், சடங்குகள், சிறுவயதில் நாம் கேட்ட எத்தனையோ விஷயங்கள் என்று ஏராளமானவற்றை உள்ளடக்கிய கதை. இதில் வரும் பெண்கள் அவர்கள் தரப்பைச் சொல்லவில்லை, குமரப்ப பண்டிதனின் குடும்பம் போல் பெரிய மூப்பன் போன்ற மற்ற முக்கியமான கதாபாத்திரங்களின் கதைகள் வரவில்லை, பாரு ஏன் சாமியாத்தாள் போல் இருக்கிறாள் என்பது காரிச்சியால் ஒரே வரியில் சொல்லிக் கடக்கப்படுகிறது... இவை எல்லாம் சேர்ந்தால் நாவல் இரண்டாயிரம் பக்கங்களைத் தொட்டிருக்கும்.




சாயலைக் கடைசியில் கொண்டிருந்தாலும் நாவலின் உள்ளடக்கம் எந்த ஒரு சிறிய வட்டத்திலும் நுழைக்க முடியாமல் பரந்து விரிந்தது. வட்டார வழக்கு இந்த நாவலுக்குக் கூடுதல் அழகைச் சேர்க்கிறது. வெள்ளியின் விசாரம், நம் வாழ்க்கை குறித்தும் சில கேள்விகளைக் கேட்கத் தூண்டுதலாக இருக்கும். தேவிபாரதியின் முதல் நாவல், அதன் பின்னர் இரண்டாம் நாவல்தான் அவருடைய மாஸ்டர்பீஸ் என்று சொன்னவர்களைக் கேலி செய்கிறது இந்த நாவல். மோகமுள், காகிதமலர்கள் போலவே இதுவும் முழுமையான நாவல். நொய்யல் இறந்து விட்டாள். அவளுக்கு இதை விட அற்புதமான *Tribute*ஐ இனி வேறுயாரும் தந்துவிட முடியாது என்று எனக்குத் தோன்றுகிறது. ■

மதுமிதா

# இலக்கியத்தில் சுழித்தோடிப் பாயும் உயிர்நீர் கோ.லீலா






எழுத்தாளர் கோ.லீலா அவர்களின் ஆறு நூல்களைக் குறித்த படைப்பு நுவல் நிகழ்வு 4.12.2022 மாலை 4. 45 மணியிலிருந்து 9.15 மணி வரை டிஸ்கவரி புக் பேலஸ் பிரபஞ்சன் அரங்கில் நடைபெற்றது. புத்தக வெளியீடு, புத்தக அறிமுகம், விமர்சனக் கூட்டம் என எத்தனையோ நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இந்தப் படைப்பு நிகழ்வு புதிய வரலாற்றைப் படைத்திருக்கிறது என்பதே இதன் தனிப்பெரும் சிறப்பாகும்.

அந்தச் சிறப்புக்கு வழிகாட்டிய படைப்புக் குழும நிர்வாகி ஜின்னா அஸ்மி தனது வரவேற்புரையைக் கலகலப்பாகத் துவக்கிவைத்தார். கவிஞர் யூமா வாசுகியின் தலைமையில் நடந்த விழாவில் கலந்துகொண்ட அனைவருமே படைப்பாளுமைகளாகவேதான் இருந்தனர்.

நிகழ்ச்சியின் தொகுப்பாளர் அப்துல் பாக்கி, ஒவ்வொரு உரையாளரைப் பற்றிய விபரங்களுடன் அவர்களை அழைத்து, நிகழ்வு முழுக்கத் தகவல்களை அளித்துக்கொண்டே தொகுப்புரையைத் தகவல் களஞ்சியமென நிகழ்த்தினார்.

'வரையாட்டின் குளம்படிகள்' நூல் குறித்துக் கவிஞர் பிருந்தா சாரதியை முதலில் பேச அழைக்கும்போதே, தன்னைப் பற்றிய குறிப்புகள் போதும் என்று தொகுப்பாளரை இடைநிறுத்திப் பேச வந்தார் பிருந்தா சாரதி. அவை முழுக்க அப்போது ஆரம்பித்த ஆத்மார்த்தமான சிரிப்பின் அலை ஓயாது முடிவு வரையிலும் தேர்ந்த இசையென ஒலித்துக்கொண்டிருந்தது. இவரின் உரையின் ஆரம்பத்தில் இவர் ஏற்றி வைத்த உற்சாக தீபம் சிந்தனையைத் தூண்டிவிடும் பேச்சில் ஒளிர ஆரம்பித்தது. தம் நூலை வாசித்து லீலா எழுதிய நூலை வாசித்துத் தான் வியந்ததையும், வரையாட்டின் குளம்படிகள் நூலில் இருக்கும் கட்டுரைகளின் நுட்பமான தன்மைகளைப் பற்றியும் பேசினார். தன்னம்பிக்கையும், சுய எள்ளலும், சமூக அக்கறையும், படைப்பின் மீதான ரசனையும், புதுமையினை வரவேற்கும் எத்தனிப்பும் எனத் தம் உரையைக் கேட்பவர்களைப் படைப்பாளிகளாகவே மாற்றிவிடும் தன்மை நிறைந்த இவரின் உரையில் ஒன்றிய பார்வையாளர்களின் கவனம் சிதறும் முன்பே உரையினை முடித்துக்கொண்டார்.

'ஷின்டோ' நூல் குறித்துக் கவிஞர் முருகேஷ் ஆற்றிய உரை ஒரு ஆய்வுக்கட்டுரையின் தரம் மிகுந்தது. தம் வாழ்நாள் பணி குறித்தும் தான் பயணப்பட்டு இயங்கிய பாதையில் சரியான தடத்தில் வந்திருக்கிறோம் என்பதை உணர்ந்தும் அவர் நிகழ்த்திய உரையில் ஹைக்கூ வரலாற்றின் பதிவு இருந்தது. கவிஞர் அமுதபாரதியைப் பற்றிய கருத்துக்களைப் பேசுகையில் எதிரே படைப்பாளியே அமர்ந்து அந்த உரையைக் கேட்க அமைந்தது சிறப்பு. பல புது



யத்தனிப்புகளை லீலா இந்தப் புத்தகத்தில் நிகழ்த்திப்பார்த்திருப்பதையும், பெயர்களைத் தேர்ந்தெடுத்த சிறப்பம்சத்தையும், ஒவ்வொரு கட்டுரையையும் எழுதத் தேர்ந்தெடுத்த பாணியையும், கட்டுரைகளின் உட்பிரிவுகளையும், அறிவியல், உளவியல், இயற்கை எனப் பல்வேறு கூறுகளை இணைத்து அளித்ததின் முக்கியத்துவத்தையும் சொல்லி, ஹைக்கூ ஆய்வுக்கட்டுரையில் இது மூன்றாவது தொகுப்பு என்பதைக் குறித்தும் பேசினார்.

கவிஞர் தமிழ் மணவாளன் அடுத்து, 'ஹைக்கூ தூண்டிலில் ஜென்' புத்தகம் குறித்துப் பேச வந்தவர், நல்லவேளையாகத் தனக்கு இந்தப் புத்தகம் பேசக் கிடைத்தது என்று ஆரம்பித்தவர், வந்து நின்றதிலிருந்து உரை



முடியும்வரை தம்மையும் நண்பர்களையும், உரை நிகழ்த்துபவர்களையும் சிரிக்க வைத்துவிட்டு, புத்தகத்தை வாசித்துதான் வந்திருக்கிறேன் என்று குறிப்புகளுடன் பேசிச் சிந்திக்கவும் வைத்தார். தாம் மறை நீர் நூலுக்காக லீலாவுக்கு அளிக்க விரும்பிய விருது, கோவிட் கால ஊரடங்குப் பிரச்சினையினால் வழங்க முடியாமல் போன வருத்தத்தையும் குறிப்பிட்டார். நூல் தலைப்புப் பெயர்களைக் குறிப்பிட்டுப் பேசியவர் மற்றொரு தலைப்பினைப் பின்னால் பேச வரப்போகும் நண்பருக்காக விட்டுவிடுவதாகச் சொல்லி விடைபெற்றார்.

'சுகிமி' நூல் குறித்துப் பேச வந்த கவிஞர் அமிர்தம் சூர்யா வந்த உடனேயே, நூலின் உரைக்குப் போவதற்கு முன்பு, புத்தகங்களுக்கு முன்னுரை எழுதுபவர்களை, நிகழ்வுகளில் உரை நிகழ்த்த நேரம் அளித்து வரும் படைப்பாளிகளின் சிரமங்களை, தன் முன்னுரைக்குக் கிடைத்த முதல் அன்பளிப்பு என்று வீட்டுக்கு வந்து சிறப்பு செய்த படைப்பாளரைக் குறிப்பிட்டு ஆரம்பித்தார். லீலா உரை நிகழ்த்திய அனைவருக்கும் ஒரு கிராம் தங்கக்காசு நினைவுப்பரிசாக அளித்ததையும் மகிழ்வுடன் குறிப்பிட்டார். இந்த முக்கியமான விஷயத்தைத் தன் குடும்பத்தினரின் எதிர்வினைகளின் வசனத்தோடு முன்வைத்தார்.

பார்வையாளர் வரிசையில் இருந்து ஒரு குரல், ஆறு உரையையும் நானே நிகழ்த்தி ஆறு கிராம் வாங்கி இருக்கலாம் என்று கேட்டதும் மீண்டும் சிரிப்பலை. அந்தக் குரல் கவிஞர் ஆண்டன்பெனியுடையதுதான். தான் அமர்ந்திருந்த இடத்திலிருந்து மெல்லிய குரலில் இது போல் எழுப்பிய அதிரடி வசனங்கள் நிகழ்வு முழுக்கச் சிரிப்பை எழுப்பியபடி இருந்தன.

அமிர்தம் சூர்யா தன் உரையில், தலைப்பின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டு, தான் குறிப்பில் எடுத்து வந்திருந்த ஏழு ஹைக்கூக்கள்




குறித்தும் சின்னச்சின்ன கதைகளுடன் விரிவாகப் பேசினார். அரங்கம் கவிதைகளிலும் சூழலியலிலும் ஆழ்ந்துவிட்டது. ஒரு குடும்பத்தின், நண்பர்களின் சந்திப்பு போன்று நிகழ்ந்த விழாவின் முக்கியத்துவம் இவரின் உரையின் சுவையினால் நிறைந்தது. நிகழ்வு முழுக்கத் தொடர் மணம் பரப்பியது.

இவர்கள் அனைவருமே கவிஞர்கள், இவர்கள் சூழலியலுக்கு முக்கியத்துவம் அளித்துப் பேசினர். கவிதைகளையும் சூழலியலையும் இணைத்துப் பேசினார்கள்.

ஆம் நண்பர்களே, வந்திருந்தவர்களுக்குச் சிறப்பு செய்ததும், தேநீர் இடைவேளையில் சத்துமிக்க சுண்டல் அளிக்கப்பட்டதும், நண்பர்கள் இணைந்து தங்களுக்குள் புகைப்படங்கள், சுயமிகள் எடுத்துக்கொண்டதும், புத்தகங்களைப் பரிசளித்துக்கொண்டதும் இயல்பாக மகிழ்வுடன் நடந்தேறின.

சூழலியலாளர் கோவை சதாசிவம், ‘மறைநீர்’ குறித்து உரையாடலைத் துவங்கினார். நம் அடுத்த தலைமுறையினருக்கு நாம் நம்முடைய விழிப்புணர்வின்மையினால் இயற்கையை அழித்தபடியே என்னென்ன தீங்குகளைச் செய்திருக்கிறோம் என்னும் எதிர்காலம் குறித்த அக்கறையை நம் முன் எடுத்து வைத்தார். அவரின் உரையில் இருக்கும் உண்மை எப்போதும் நம்மைச் சுட்டெரித்துக் குற்ற உணர்ச்சிக்கு ஆளாக்கும். நாம் என்ன செய்ய வேண்டும் என்னும் யோசனையையும் முன்வைப்பது அவரின் பாங்கு.

இதுவரையிலும் உரையாற்றியவர்கள் சிரிக்கவைத்து நம்மைச் சிந்திக்கவைத்தனர். இப்போது இவரோ நம்மைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கி, நிகழ்காலத்துக்கு வாங்க என்னவெல்லாம் செய்யலாம் என்று சிந்திக்க வைத்துச் சிரிக்கவும் வைத்தார். மறை நீர் நூலின் கட்டுரைகள் எந்தவிதமான முக்கியத்துவம் நிறைந்தன என்பதைத் தம் மொழியில் நம் மனதில் ஆழ விதைத்தார். இவற்றை நாம் பின்பற்றினாலே சிறந்த சமூகமாக மகிழ்வுடன் வாழ்வோம். இவர் சூழலியலாளர் என்பதால் சூழலியலையும் கவிதைகளையும் இணைத்தும் கவிதை படைத்தும் பேசினார்.



என்பதை அமைதியான ஆற்றோட்டமான நடையில், நேரம் கருதித் தம் உரையில் சுருக்கென்று ரத்தினச் சுருக்கமாக விவரித்தார்.




ஏற்புரையாற்ற வந்த லீலா சிறந்த பேச்சாளராக உருவெடுத்த விந்தையையும் இந்த அரங்கம் கண்டது. உரை நிகழ்த்திய ஒவ்வொருவரையும் பஞ்ச பூதங்களான இயற்கையுடன் ஒப்பிட்டுச் சொல்லிக்கொண்டே வந்தவர், இவையனைத்தும் இணைந்த பிரபஞ்சமான ஆக இயற்கையும், சூழலியலும், ஜென் கவிதையும் ஒற்றைப் புள்ளியில் அந்த நன்னாளில் ஒருங்கிணைந்து சமூக அக்கறையைப் பிரதிபலித்ததை அரங்கம் முழுக்க நிறைந்திருந்த காற்று அசைந்தசைந்து மகிழ்ந்துணர்ந்து கேட்டபடி எங்கும் பரப்ப மகிழ்ந்தெழுந்து பரவியது.




இப்போது தலைமையுரையாற்ற வந்த சாகித்திய அகாதமி விருது பெற்ற கவிஞர் யூமா வாசுகி, மிகச் சிறப்பான அதி பிரபஞ்சன் அரங்கில் இந்த நிகழ்வு நடக்கிறது என்றபோது அரங்கமே அதிர்ந்தது. சிறுவயதிலிருந்து இப்போதைய காலம் வரையிலான தன் வாழ்வின் குறுக்குவெட்டுத் தோற்றத்தைப் பிரித்தெடுத்து நம் கண்களுக்கு முன்னே காட்சிப்படுத்தினார். இயற்கை என்னைக்கொண்டு தன்னை எழுதிக்கொள்கிறது என்று இயற்கையை ரகசியாவாக நேசிக்கும் லீலாவின் படிப்பின்





அற்புதமான யானை கதை, மீன் கதை என இரு கதைகளைக் கூறி நம்மை நெகிழவைத்தார். அவை கதைகளல்ல நம் வாழ்க்கை சார்ந்த நுண்ணிய ஆத்மவிசாரம். அவரின் இந்த மனம், பார்வையாளர்களின் மனதில் எப்போது, எதை விதைக்கிறோம் என்று அறிந்து அளிக்கும் நேர்த்தி ஆகியன தனித்துவம் பொருந்தியன. ஒரு படைப்பாளியாக எழுத்தாளனின் கடமை என்ன, சூழலியல் அக்கறையுடன் நம் மக்களைக் காண வைக்க வேண்டிய தரிசனம் என்ன



காலத்திலும் பணிக்குப் போன காலத்திலும் சந்தித்த சவால்கள், அதை அவர் எதிர்கொண்ட விதம், சமூக ஏற்றத்தாழ்வுகள் தனக்குள் தேடல்களை நிகழ்த்தி, தன்னை இப்போதைய படைப்புக் காலத்துக்கு அழைத்து வந்த விதத்தைக் குறிப்பிட்டு அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இயற்கை வாழ்வியல் வானவன் அவர்கள் லீலாவை வாழ்த்தி, விதைப் பொட்டலங்களை இலவசமாக வந்திருந்தவர்களுக்கு வழங்கினார்.

நிகழ்வின் முத்தாய்ப்பாக, மதுமிதாவின் காற்றுவெளி சேனல் சார்பாக, கவிஞர் மதுமிதா, கோ. லீலாவுக்கு, 'பூலோக கங்கை' என்னும் விருது வழங்கினார். லீலாவின் 'மறை நீர்' நூல் அரசின் பார்வையில் நிச்சயம் மாற்றத்தை நிகழ்த்தும், அந்த விழிப்புணர்வில் சமுதாயம் பெறும் பலன் கண்டு, இந்தப் புத்தகம் மாநிலம் கடந்து தேசம் கடந்து அனைத்து மொழிகளிலும் உலகம் முழுக்கப் பரவ வேண்டும்; பரவும் என்றார்.

இனிவரும் காலங்களில் 'படைப்பு நுவல்' நூல் அறிமுகம், நூல் ஆய்வு, நூல் விமர்சனக் கூட்டங்களை நடத்தும் என்று ஜின்னா அறிவித்தார்.

படைப்பினை எழுத ஊக்கம் அளித்து, அதை நூலாகப் பதிப்பித்து, அந்த நூல்களைக் குறித்து உரை நிகழ்த்த ஒரு விழாவினை ஏற்பாடு செய்து அந்த விழா சிறக்க அனைத்துப் பணிகளையும் செய்த படைப்புக் குழுமத்திற்குப் பாராட்டுக்கள். ■


உலக சினிமா

தொடர் – 36

● கவிஜி

# ஆதி பாம்பெனச் சூழும் நிஜம்






**திரைப்படம் : Beyond the clouds**

தாரா தான் சிறையில் இருந்து தப்பித்துச் செல்வதற்காகத்தான் தன் மோதிரத்தை லஞ்சமாகக் கொடுக்கிறாள் என்று நினைப்போம். ஆனால் நடப்பதே வேறு. தாயில்லாத அந்தச் சிறு குழந்தை சோட்டுவுக்கு நிலா என்றாலே என்னவென்று தெரியவில்லை. அந்தச் சிறைச்சாலையிலேயே பிறந்த குழந்தை அவன். தன் கணவனைக் கொலை செய்துவிட்டு உள்ளே வந்த அந்த அம்மா உடல்நிலை சரியில்லாமல் இறந்த பிறகு அம்மாவைக் கேட்டுச் சாப்பிட அடம் பிடிக்கிறான் சோட்டு. சக கைதியாக இருக்கும் தாரா அந்தக் குழந்தைக்கு நிலாவைக் காட்ட கொஞ்சூண்டு கதவைத் திறந்துவைக்கச் சொல்லித்தான் சிறைக் காவலருக்கு லஞ்சமாகத் தன் மோதிரத்தைத் தருகிறாள்.

வெளியே மழையும் மின்னலும்... எதற்கோ அங்கலாய்த்துக்கொள்கின்றன. விளையாட ஏங்கும் அந்தக் குழந்தையின் கை மழையைப் பிடித்துவிட வெளியே நீள்கிறது. அதன் பின்னால் விடுதலைக்கு ஏங்கும் ஒரு தாயின் கையாக இப்போது தாராவின் கையும் மெல்ல வெளியே நீண்டு அந்தக் குழந்தையின் கைக்குக் கீழே தாங்கிப் பிடிக்க ஆரம்பிக்கிறது.

மழை இன்னும் வேகமெடுக்கிறது. நமக்கு மனம் இன்னும் தாகமெடுக்கிறது.

"மஜித் மஜிதி" என்ற மகா கலைஞனின் இன்னொரு மனம் உலாத்தும் படைப்பு இந்தப் படம்.

மானுட மனங்களுக்குள் மஜித் மஜிதியினால் வெகு நுட்பமாகப் பெரிய பெரிய ராட்டினங்களை எல்லாம் சுழற்றிவிட முடிகிறது. அன்பென்ற வடிவத்தைத்தான் நாம்

கோபமாக ஆங்காரமாக வன்மமாக தனிமையாக எல்லாமுமாக மாற்றி வைத்திருக்கிறோம். இந்த வாழ்வு சக மனிதர்களால் ஆனது என்று மிக மெல்லிய குரலில் மஜித் மஜிதி பேசிக்கொண்டே இருக்கிறார். கேட்க அதிரும் அழுகையை நாம் அடக்கவே முடியாது.

“நான் உங்க அப்பாவ வெறுக்கிறேன்... உங்களை வெறுக்கிறேன். இந்த உலகத்தை வெறுக்கிறேன்.. உங்கப்பா எங்க அக்காவை ரேப் பண்ணிட்டான். அவனைக் கொல்லணும். ஆனா நான் காப்பாத்திட்டு இருக்கேன்..” என்று தன் அக்கா ரகசியமாக வளர்க்கும் புறாக்களை எல்லாம் எடுத்து எடுத்து வெளியே வீசிக்கொண்டே அந்த அறையையே அடித்து உடைத்துக் கத்தி அழும் ஆமீருக்குத் தேவையெல்லாம் தலை வருடும் அவன் அக்காவின் கைகள்தான். பறந்துபோன புறாக்கள் மறுநாள் அதே வீட்டு வாசலில் அமர்ந்திருப்பதுதான் வாழ்வின் சூட்சுமம். விதைபட்ட அன்பு வேறெப்படியும் முளைக்காது.. அன்பாய் முளைப்பதைத் தவிர. அவனோடு சேர்ந்து நாமும் உணர்கிறோம்.

தன் குடிகாரக் கணவன் தன்னை விட்டுச் சென்ற பிறகு தம்பிக்கும் தெரியாமல் வாழ்வாதாரத்துக்கு அவ்வப்போது பலான தொழிலில் ஈடுபடும் தாரா மீது அங்கே துணி துவைக்கும் வேலை செய்யும் அக்சிக்குக் காதல்.. காமம்.. பாசம்.. அன்பு.. எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம்.

அவன் திட்டுகிறான். “நீ எனக்குத்தான் நீ எனக்குத்தான்” என்று உள்ளே ததும்பும் பேரியக்கத்தின் குழப்பத்தில் அவளை வன்புணர்வும் செய்துவிடுகிறான். அவள் அந்த நேரத் தடுமாற்றத்தில்... தள்ளுமுள்ளில் கிடைத்ததை எடுத்துத் தலையில் தாக்கிவிட அக்சி பலத்த காயத்தோடு சாகக் கிடக்கிறான். போலீஸ் தாராவைக் கைது செய்கிறது. `அவன் பிழைத்தால் உனக்கு விடுதலை. இல்லையெனில் ஆயுள் தண்டனைதான்` என்கிறார்கள் மெத்தப் படித்த மேதாவிகள்.

என்ன நடந்தது என்று யோசிப்பதற்குள் சிறைக்குள் வந்த தாரா தடுமாறுகிறாள். அழுகிறாள். கதறுகிறாள். எப்படியாவது தன்னை வெளியே கொண்டு போய்விடுமாறு தன் தம்பி ஆமீரிடம் கெஞ்சுகிறாள்.


பெண்கள் அடைபட்டிருக்கும் அந்தச் சிறைச்சாலையின் தோற்றம் நம்மை அச்சுறுத்துகின்றது. ஆசுவாசமற்ற இயலாமை அங்கே தானாக அடுக்கடுக்காய் அமைந்திருக்கும் படுக்கையில் மேய்ந்துகொண்டிருப்பதைக் காணுகையில் விடுதலை என்பதன் விரிவாக்கத்தை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறது. ஒரு வேகத்தில் குற்றம் இழைத்துப் பிறகு வாழ்நாளெல்லாம் கம்பிகளுக்குள் சிக்கிக்கொள்ளும் பெண்கள் கூட்டத்தில் அன்புக்கு ஏங்கும்.. விடுதலைக்கு ஏங்கும் கண்கள் ஒருபோதும் தூங்குவதேயில்லை.

சக சிறைவாசியின் குழந்தை சோட்டுவின் மீது அன்பு வைக்க ஆரம்பிக்கிறாள். இந்த மனம் அலைவதெல்லாம் சக மனிதனின் ஆறுதலுக்குத்தான் என்று நாம் உணரத் தொடங்குகிறோம்.

சிறுவயதிலேயே அம்மா அப்பா விபத்தில் இறந்துவிட அக்காவால் வளர்க்கப்பட்டு 13 வயதிலேயே வீட்டை விட்டு ஓடி.... ஆதரவற்ற சிறுவனின் வாழ்க்கை மும்பை இருள் தேசத்தில் எப்படி இருக்குமோ அப்படி மாறிய ஒருவனாக அக்காவிடம் திரும்புவதாக இருக்கிறது ஆமீரின் வாழ்வு.

போதைப் பொருள் கை மாற்றுவதுதான் அவன் வேலையாக இருக்கிறது. அப்படி ஒருமுறை போலீஸ் விரட்டுகையில் அவனைக் காப்பாற்றுவது அக்சிதான். அதே அக்சிதான் அவன் அக்காவை வன்புணர்வு செய்து அடிபட்டு மருத்துவமனையில் இருக்கிறான். அவன் சாகவும் கூடாது.. ஆனால் வாழவும் கூடாது என்ற இடைவெளியில் பரிதவிக்கும் அவனால் அப்போதைக்கு அக்சியைக் காப்பாற்றத்தான் முடிகிறது. மருந்துகள் வாங்கிக் கொடுத்துக்கொண்டு மருத்துவமனையிலேயே துணையாக இருக்கிறான். யாரைக் கொல்ல வேண்டும் என்று நினைக்கிறோமோ அவனைக் காப்பாற்ற வேண்டிய நிலைதான் மஜித் மஜிதியின் காலம் சொல்லும் பாடம்.

அந்த நேரத்தில்தான் தமிழ்நாட்டில் இருந்து அக்சியின் அம்மாவும் இரு மகள்களும் அக்சியைத் தேடி வருகிறார்கள்.




அவர்களுக்கு ஹிந்தி தெரிவதில்லை. அந்தப் பாட்டி தமிழ்தான் பேசுகிறாள். வறுமை சூழ்ந்த வாழ்வில் பிடியற்ற பொழுதுகளைத் தூக்கி அலைகிறார்கள் அம்மூவரும்.

மருத்துவமனையில் முகவரி வாங்கிக்கொண்டு ஆமீரின் வீட்டைத் தேடி வந்துவிடுகிறார்கள். காலையில் நேரத்திலேயே மருந்து வாங்க வேண்டும் என்று நர்ஸ் கூறியதாகக் கூறுகிறார்கள். சரி என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் சென்று கதவை அடைத்துக்கொள்கிறான். வெளியே இருள். மனதிலும் இரவு. அவர்கள் அந்த வீதியில் ஒரு திண்ணையில் படுத்துக்கொள்கிறார்கள். அவன் வீட்டுக்குள் செய்வதறியாது உழன்றுகொண்டிருக்கிறான்.

இதில் மழை வேறு. ஜன்னல் வழியே எட்டிப் பார்க்கிறான். அக்சி மீதுள்ள வெறுப்பு அவர்கள் குடும்பம் மீதும் இருப்பதால் முடிந்தளவு அவர்களைக் கண்டுகொள்ளாத மாதிரி நடந்துகொள்கிறான். ஆனால் அவனின் உண்மை அதுவல்ல. அவன் அன்புக்கு ஏங்கும் தனியன். அக்காவை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என்று கிறுக்கு பிடித்து அலைபவன்.

தன் மகன் செய்த, தன் அப்பா செய்த பிழைக்காக அவர்கள் மூவரும் சிலுவை சுமப்பதுதான் எதிர் வினையின் முனையில் அன்பு சொல்லும் நீதி. சரியும் தவறும் மாறி மாறி நிகழும் நித்தியத்தில்தான் இந்த நிஜம் நம்மை ஆதி பாம்பெனச் சூழ்ந்துகொண்டிருக்கிறது.

மழை அதிகமாக.. மனம் கூடிய சூட்டோடு ஓடிச் சென்று அவர்களை வீட்டுக்குள் அழைத்து வருகிறான்.

பெரிய சிறுமி ஆங்கிலம் ஓரளவுக்குப் பேசுவதால் ஓரளவுக்கு சம்பாஷணைகள் நிகழ்கின்றன. பிறகும் பேரன்பின் சுவடுகளுக்கு மொழிகள் எதற்கு? புன்னகை... பார்வை... கண்கள்... போதுமே. அதுவும் ஏகத்துக்கும் நிகழ்கிறது.

விடிந்ததும் அக்சியைக் காணச் செல்கிறார்கள். திரும்பவும் வீட்டுக்கு வருகிறார்கள். அந்தச் சிறுமிகளில் சிறியவள் ஐந்து வயது குட்டிப் பெண். அவளோடு விளையாடுகிறான். அவளுக்குப் பென்சில் பேப்பர் வாங்கித் தந்து எழுத வரைய வைக்கிறான். அந்தப் பாட்டிக்கு உடம்பு சரி இல்லாதபோது கவனித்துக்கொள்கிறான். பிறகு மெல்ல மெல்ல அவர்கள் ஒரு குடும்பம் போல நடந்துகொள்கிறார்கள்.

அந்த இன்னொரு பெண் வயது வந்த சிறுமி. அவள் மீது தனித்த பார்வை ஆமீருக்கு இருந்துகொண்டே இருக்கிறது. அவள் பாட்டி மருத்துவச் செலவுக்குக் கொடுத்த கொஞ்சம் காசையும் அவளின் ஒரு காது வளையத்தையும் அவளிடம் திருப்பித் தரும் அந்த ஒரு காட்சி.. மிகு மெல்லிய பூனைப் பாதங்களால் அவர்களின் நெருக்கத்தை உயிர்ப்பிக்கிறது.

'என்ன இது...?' திரை தாண்டி கை மட்டும் வருகிறதே என்று அவள்கூடப் பயந்து உடலைச் சற்று பின்வாங்குவாள். ஆனால் அவன் அந்தப் பண முடிச்சைப் பொத்தினாற்போல நீயே வைத்துக்கொள் என்பதற்குத்தான் கையை மட்டும் நீட்டிக் கொடுத்துவிட்டு எடுத்திருப்பான். அதிலிருந்து அந்தத் தோட்டை மட்டும் அவள் எடுத்துக்கொள்ளும் காட்சி...

இயலாத மனிதர்களின் கடைசி ஆயுதமென இன்னமும் காது தோடும் மூக்குத்தி மின்னலும் இருப்பதை வெளிச்சம் போட்டு அமைதியாகக் காட்டுகிறது.

ஒரு கட்டத்தில் அவளை விற்பதற்குக் கூட முன்பணம் வாங்கிவிடுவான். நாமும் திடுக்கிட்டுத் தவித்திருப்போம். அவள் அவன் மீது கொண்ட நம்பிக்கை அவனை மீண்டும் மீண்டும் சுய பரிசோதனை செய்துகொண்டே இருக்கச் செய்யும். சட்டென மாறிய முடிவோடு அவளைக் காப்பாற்றவும் செய்வான்.

ஒரே நேரத்தில் சாத்தானாகவும் கடவுளாகவும் மாறி மாறித் தன்னை உணரும் போக்கில் அவன் வாழ்வின் நிதானமற்ற தவிப்புகளை நாம் உணர்கிறோம்.

சிவப்பு விளக்குப் பகுதிக்குள் அனாயாசமாகச் சென்று போதைப் பொருள் தொழில் செய்யும் ஆமீர் ஓர் இடத்தில்கூட தன் நிலை மறப்பதில்லை. தன்னைக் காட்டிக் கொடுத்த பெட்டிக்கடைக்காரனை நிதானமாகக் கையில் குத்திவிட்டுச் செல்லும்போது அவன் செய்வது என்னதென்று தெரிந்தேதான் செய்கிறான்.

தன் நண்பனால் காட்டிக் கொடுக்கப்பட்டபோது மனம் உடைந்து தடுமாறுகையில்.. இந்த உலகத்தின் மீதிருந்த எந்தப் பற்றுதலையும் அவன் பற்றவும் இல்லை விடவும் இல்லை என்பது போன்ற சிந்தனைதான் அவன் உடல்மொழியில். விரக்திக்கும் வீம்புக்கும் இடையே சதா வீணை வாசிக்கும் அவன் குற்ற உணர்வுகளை நாம் செய்வதறியாத திகைப்பில் காணுகிறோம்.

அவளைக் காப்பாற்றும் நீட்சியில் அடிபட்டுத் துவண்டு வருகையில்.. பாட்டியும் சிறுமிகளும் அவனைக் கவனித்துக்கொள்வதில்.. சாப்பாடு ஊட்டுவதில்.. மனமாற்றம் நெகிழ்வித்த தன்மையோடு அந்த வீடெங்கும் அரங்கேறுகிறது. அறையைப் பிரிக்கும் திரைக்குப் பின்னால் முக்காபுலா பாடலுக்கு ஆடிக் காட்டி இந்தப் பக்கம் அமர்ந்து இவர்கள் மூவரும் படம் பார்ப்பது போலப் பார்க்கும் காட்சியில் நிழல் செய்யும் நேர்த்தியாக உன்னதமான உள்ளார்ந்த மன வெளிப்பாட்டை



மஜித் மஜிதி நிகழ்த்திவிடுகிறார்.

மிகத் தொன்மையான அன்பின் நீளத்தை அளவாகக் காட்சி வடிவத்திலேயே நிஜத்தின் நடுவில் நின்று மஜித் மஜிதி பேசுவதெல்லாம் நம்மோடு நாமே பேசுவதுதான். நாம் நம்மையே புரிந்துகொள்வதுதான்.

சிறைச்சாலையில் சோட்டு தாராவுக்கு ஆதரவாகிறான். இங்கே அக்சியின் குடும்பம் ஆமீருக்கு ஆதரவாகிறது. யாருக்கு எது நடந்தாலும் ஊரின் கொண்டாட்டங்களுக்குக் கவலையில்லை. ஹோலி பண்டிகை ஜாம் ஜாம் என்று நடக்கும் ஒரு முடிவில் அவர்கள் கரைந்துபோகிறார்கள்.

அக்சி பிழைத்தானா செத்தானா என்பது இப்போதைக்கு இங்கு முடிவிலி.

மும்பை மாநகரத்தில் அத்தனைப் பெரிய ஜியோ நெட்ஒர்க் விளம்பர பேனர் இருக்கும் பாலத்தின் அடியே விறகடுப்பில் வாழ்வு வெந்துகொண்டிருக்கும் மும்பையின் இன்னொரு முகத்தின் பாவனைகள் நாம் கனவிலும் நினையாதது.

மஜித் மஜிதி ஒரு காட்சியில் பளிச்சிடும் மும்பையைக் காட்டுவார். அங்கே கீழே ஓரத்தில் குடிசை நீள் வரைபடம் இந்தியாவை இருட்டிக்கொண்டு காட்டும்.

**இயக்குநர் : *Majid Majidi***

**மொழி : *Hindi***

**ஆண்டு : *2017***

சிறுகதை

அல்லி பாத்திமா
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்



# பேசாப் பெரும்பொருள்

இந்த ஆறு இன்று ஏன் என்னுடன் எதுவுமே பேசாமலே ஒழுகிக்கொண்டிருக்கிறது? நான் கரையில் அமர்ந்திருப்பதைக் கவனிக்கவில்லையோ? மனக்குமுறல்களை மறைக்கப் பாடுபடும் என்னிடம் சலசலக்காமல் எப்போதும் அலைகளைக் கரை நோக்கி எறிந்து பழகியதை மறந்து இன்று ஏன் மௌனங்களின் பச்சை விரிப்பைப் போர்த்திக்கொண்டு வழிகிறது. உன்னைப்போலவே பெரும் அழுத்தக்காரிதானோ இதுவும்?

வாய் ஓயாமல் பேசிக்கொண்டும் என்னைத் திட்டிக்கொண்டும் உன்னுடனான வாழ்க்கையை எத்தனை முறை திகட்டவும் தித்திக்கவும் வைத்திருக்கிறாய். ஆனால் என்னை விட்டுப் போவதாய்ச் சொல்லாமலே நீயும் ஆழமான மௌனத்தை மிச்சம் வைத்துவிட்டுத்தானே விலகினாய். என்னோடு என்ன பேசி என்னவாகப் போகிறது என்றுதானே நினைத்துக் கிளம்பிப்போனாய்? நீ என்னை விலகிப் போய்விட்டாய்.

போ.. எனக்கென்ன ஆனது..? திமிர் பிடித்தவள் நீ... போனால் போ...! இப்போது நான் என்ன கரைந்தாபோனேன்? இந்த உலகிற்கு முன் தனியாக நான் எப்படி வாழ்ந்து காட்டுகிறேன் பார். பெரும் கவிஞன் என்று அத்தனைப் பேரும் போற்றிப் புகழும்போதும் ஒரு வார்த்தை பாராட்டிப் பேசமாட்டாய். “தலைக்கனமா உனக்கு?” என்று கேட்டதற்கு அன்று என்ன சொன்னாய்.. “காணும் பெண்களின் கண்ணையும் இதழையும் மார்பையும் வர்ணித்துத்தானே நீங்க கவிஞனானிங்க” என்று தலையணையை எடுத்து என் முகத்தில் எறிந்துவிட்டு எட்டிப் படுத்துக்கொண்டாய்.

நீ என்னைச் சுற்றிச்சுற்றி வந்தாலும் வசீகரிக்கும் உன் உடல் வளைவுகளில் நான் கண்களைக் கோர்த்துக்கொள்ளவில்லை. எல்லோரையுமே பூரித்துப்போக வைக்கும் உன் மயில்தோகைக் கண்களில் நான் கவிதைகள் வாசிக்கவில்லை. சிரிப்பு துள்ளும் சிவந்த இதழ்களிலும் நான் மயக்கம் கொள்ளவில்லை. ஆனால் உன்னையும் என்னையும் திருமணப்

பந்தத்தில் பிணைத்ததால் மட்டுமல்ல வேறு ஏதோ ஒன்றுதான் நம்மைக் கட்டி இழுத்துக்கொண்டு காலங்கடத்தியது. ஆனாலும் என் கடைசி வரை என்னுடன் வாழ உனக்குத் தோன்றவில்லையே..

ஆறு இப்போதுதான் லேசாக அலை காட்ட ஆரம்பித்திருக்கிறது. மௌனம் கலைந்து வீசிய ஈரக்காற்று என் விழிகளின் ஈரத்தை மெதுவாக உலரவைத்து என் உடலையும் குளிர்விக்கின்றது. நாமிருவரும் மாலை நேரங்களில் ஒன்றாக அமர்ந்திருக்கும் அதே மூன்றாவது படிக்கட்டில்தான் இப்போதும் அமர்ந்திருக்கிறேன் ஆனால் தனியாக. நடைபயிற்சி நண்பர்கள் நின்று தயங்கித் தயங்கி என்னைக் கடக்கின்றனர். நீ எங்கே என்றால் என்ன பதில் சொல்வேன்?

அன்று ஒருநாள் மீன்களுக்குப் பொரி வாங்க நான் ஒரு மலருக்காக எழுதி வைத்திருந்த கவிதைக் காகிதத்தை எடுத்துக்கொண்டு ஓடிப்போனாய். நீ அள்ளி இறைத்த இரைக்கு ஆர்ப்பரித்த மீன்களுடன் ஆசை தீரப் பேசினாய். நானோ கிழித்துப்போட்ட காகிதத்திற்காய்க் கத்தினேன். "என்னுடன் பேசாமல் எழுதிக்கொண்டே இருந்தால் அப்படித்தான் செய்வேன்" என்றாய். என் நண்பர்களையும் உனக்கு ஆதரவாய்க் கூட்டுச் சேர்த்துக்கொண்டாய். அவர்களுக்கு நீ ஒரு அப்பாவிக் குறும்புக்காரி. உன் திமிர் எனக்கல்லவா தெரியும். ஆமாம் பெரும் கவிஞனின் மனைவி என்ற அகந்தை என்று என்னிடமே எத்தனை முறை கூறி என் வாயைக் கட்டிப்போட்டிருக்கிறாய்.

காகிதங்களுடனே பேசிக்கொண்டும் புத்தகங்களுடனே உறவாடிக்கொண்டும் இருந்துவிட்டேனோ..? நீ சலித்துப்போயிருப்பாய். இல்லை என்றால் போயிருக்க மாட்டாய். இன்றும் காகிதங்களும் பேனாவும் கையில் வைத்திருக்கிறேன். ஆனால் கவிதைகள் தொலைந்துபோய் விட்டன.

ஆற்றில் மீன்களுக்கு யார் யாரோ இரை அள்ளி வீசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். எனக்கு நீ மட்டும்தான் வரிகளை அள்ளி வீசியவள் என்பது தெரியாத முட்டாளாய் இருந்திருக்கிறேன். இருவரும் குழந்தையாகப் பல பொழுதுகளில் மாறியிருக்கிறோம். இருந்தபோதும் நமக்கோர் மழலை? போகட்டும், அது நமக்கிடையே என்றுமே பிரச்சினை ஆனதில்லை. ஆனாலும் உன்னிடம் சொல்ல மறைத்ததாய் ஒன்றை நினைத்துக்கொண்டிருந்தேனே.. என் அத்தை மகள். என் கவிதைகளைப் பைத்தியமாக இரசிப்பவள். அவளை எனக்குக் கட்டிவைக்க என் அம்மா ஆசைப்பட்டாள். நாம் ஒரு மழலைக்குரல் கேட்காமலே கழித்த நான்காம் ஆண்டின் ஒருநாளில் இரண்டாம் தாரமாக வர அவளும் சம்மதித்தாள். இரவு நடுநிசி நேரம் வரை நீண்ட விவாதத்தில் உன்னிடம் அதைப் பற்றிப் பேசிவிடுவதென்ற முடிவோடுதான் வந்தேன். தூக்கம் ததும்பிய மருண்ட விழிகளோடு பதற்றத்துடன் நீ காத்துக்கிடந்து என்னை எதிர்கொண்டதும் "என்னாச்சு இவ்வளவு நேரம் பதறிப்போயிட்டேன் தெரியுமா.. சாப்பிட்டிங்களா.. கூட்டம் முடிய லேட்டாச்சா.. சாப்பிட்டிருக்க மாட்டிங்களே.. இதோ வாரேன்" என்று எதையோ எடுத்து வந்து அவசர அவசரமாக எனக்கு ஊட்டினாய். அன்று அந்த உணவோடு நான் எல்லா முடிவுகளையும் மொத்தமாய் விழுங்கிவிட்டேன். உன்னைப்போல ஒன்றை உன்னால் மட்டும்தானே உருவாக்க முடியும்? இனிமேல் அந்தப் பேச்சை எடுக்கவே கூடாதென எல்லோரையும் எச்சரித்தும் வைத்தேன்.

ஒருநாள் விளையாட்டாக "நீ ஒரு மக்கு" என்று சொன்ன நாளில் என் நீண்ட கவிதை ஒன்றைக் கடகடவென்று ஒப்பித்து அதன் கடைசி வரி இப்படி இருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று எடுத்துச்சொன்னாய். திகைத்துப்போன என்னைப் பார்த்து வாய்பொத்திச் சிரித்தாய்.. அன்று மாலை உனக்காக ஒரு சேலை வாங்க நான் எத்தனைக் கடைகளுக்கு கால் நோக நடந்தேன் தெரியுமா.. அந்த ஊதா நிறச்சேலை அணிந்த நாட்களில் எல்லாம் ஓடி ஓடி வந்து என்னைக் கட்டி அணைத்து முத்தமிடுவாய். "இனி இதையே எப்போதும் கட்டிக்கொள்கிறாயா?" என்று குறும்பு செய்த என்னிடம் "அத்தை பொண்ணைக் கட்டிக்க நினைத்தவர்தானே நீங்க?" என்று உனக்குத் தெரியாமல் நான் இரகசியமாய் மறைத்ததாக நினைத்த ஒன்றைப்

பத்து ஆண்டுகளுக்குப் பின் போட்டு உடைத்துச் சிரித்தாய்.

இப்படி எத்தனை முறை என்னைத் தோற்கடித்துச் சிரித்திருக்கிறாய்..! கருவை உருவாக்க முடியாத உன் கருப்பையில் கட்டிகள் உருவானதென்று கதறிய உன் உதடுகளில் புன்னகையைப் பற்றவைக்க "நீ மட்டும் போதுமடி என் செல்லமே" என்ற ஒற்றைக் கொஞ்சலே போதுமானதாக இருந்தது. ஆனாலும் அந்தக் கொஞ்சலைப் பின்னர் காணவில்லை என்று கோபம் கொள்வாய்.

கொஞ்சத் தோன்றினால்கூட இரங்கி வருவதாய் நினைத்த நான்தான் திமிரானவனாய் வாழ்ந்திருக்கிறேன். ஊர் போற்றும் கவிஞனின் கம்பீரத்தை உன்னிடமும் விட்டுக்கொடுக்கக் கூடாதென்ற என் கர்வத்தைப் புரியவைக்கத்தான் போய்விட்டாயா? நீ இருக்கும்போது உன்னை யோசித்துப் பார்த்ததில்லை. ஆனால் மறந்து போனதாய் நினைவிலும் இல்லை.

பாராட்டு விழாக்களும், விருதுகளும் என் கவிதைகளின் வாசிப்பும் உன் நினைப்பை மயங்க வைத்துவிடும். காணும் பலதிலும் கண்களும் மனமும் ஊடுருவிப் புத்தம் புதுச்சிந்தனைகளை வரிகளாக்கி அடங்கும். உலகில் நடக்கும் அத்தனைப் பிரச்சனைகளையும் நண்பர்களோடு மணிக்கணக்கில் பேசுவேன். உன்னிடம் இன்னும் கொஞ்சம் பேசியிருக்கலாமோ..? எல்லாம் முடிந்துவிட்டது.

உன் பிரிவின் வலிகளில் எதுவும் தங்க மறுக்கிறது. எங்கும் ஊடுருவாமல் மனம் கசக்கிறது.. இந்த ஆற்றங்கரையைத் தவிர எங்கும் என் பாதங்கள் நடந்திட முயலவில்லை. இங்கு அமர்ந்திருப்பதைத் தவிர எதிலும் அமைதியில்லை. பரபரப்பாக அலையும் பாதங்களை இந்த ஆற்றின் படிக்கட்டுகளுள் ஒட்டி வைத்துக்கொண்ட பின்தான் சுவாசம் சீராக வருகிறது.

நீ இவ்வளவு அதிகமாக என்னில் கலந்திருந்தாயா..? உன் ஆளுமை என்னை இத்தனை அதிகம் இழுத்துக்கொண்டு போனதா..? என் படைப்புகளும் பாராட்டுகளும் உன்னால்தான் உருவானதா..? நாமிருவரும் பகல் பொழுதுகளில் அதிகம் பேசிக்கொள்வதே இல்லை. எனக்குப் பயணங்களும் வெளி வேலைகளுமே சரியாக இருந்தன.

ஒரு விடியலின் பனி தூவிய அழகிய பொழுதில் நான் ஒரு கவிதைக் காவியத்தைப் படைத்துக்கொண்டிருந்தேன். நீ காப்பியோடு வந்தாய். "உன்னை ஏன் அதிகம் படிக்க வைக்கவில்லை...?" என்ற என் கேள்விக்கு "அஞ்சாவதாப் பொறந்த போதும் பெண் நான்" என்று சிரித்தாய். "நீ அதிகம் படித்திருந்தால் ஒருவேளை என்னை மிஞ்சியிருப்பாய்" என்றேன். "ஏன் இப்பவே மிஞ்சவா.." என்று என் கையிலிருந்த காகிதத்தில் "என் கன்னச் சுருக்கங்களில் கடைசி வரை உன் முத்தங்களைத் தேக்கி வைத்துக்கொள்ளத்தான் விரும்புகிறேன். அதற்கு உன் இதயச்சுருக்கங்களில் நான் வழிந்துவிடாமல் நிறைந்திருக்க வேண்டுமல்லவா..!" என்று எழுதி நீட்டினாய். அப்போது உன் விழிகள் கலங்கி நின்றன. நான் எழுதுவதை நிறுத்திவிட்டு உன்னை மார்போடு அணைத்துக்கொண்டேன்.

மறக்கவே முடியாத எத்தனைப் பொழுதுகளை மனதோடு இப்படி தைத்து வைத்துவிட்டுப் போய்விட்டாய். இப்படி என்னைத் தவிக்க விட்டதில் உனக்கு அப்படி என்னதான் என்மேல் கோபம்?

இந்த ஆறு எதை நோக்கியோ வேகமாக ஒழுகிக்கொண்டிருப்பது போல் என் மனம் உன்னை நோக்கி ஒழுகிக்கொண்டிருக்கிறது. நீ போய்விட்டாய். என்னதான் ஆனாலும் தாழ்ந்து போகக்கூடாதென்று ஆணவத்துடன் ஒரு தடுப்பைப் போடுகிறேன். ஆனால் ஆர்ப்பரிக்கும் எண்ண அலைகளே அந்த தடுப்பைப் படகாக மாற்றி என்னை இழுத்துக்கொண்டு உன்னை நோக்கிப் பாய்கின்றன.

நீ உடன் இருக்கும்போது உன்னைக் கண்டுகொள்வதே இல்லை என்று புலம்பிக்கொண்டேயிருப்பாய். புலம்பாதே என்று காதைப் பொத்திக்கொண்டால் தேம்பித்தேம்பி அழ ஆரம்பிப்பாய். அப்போதெல்லாம் எனக்கு வந்த ஆத்திரம் கொஞ்சமல்ல. என் சிந்தனைகளைச் சுருட்டி என் இரசனைகளைக் கொன்று போடவே நீ இப்படியெல்லாம் செய்வதாகத் தோன்றும்.

உனக்குத் தேவையாக இருந்தது என்னிடமிருந்து அன்பான சில வார்த்தைகள் தானோ..? அதில் எனக்கேன் அவ்வளவு கஞ்சத்தனம் இருந்தது..? என்னை எனக்குப் புரியவைக்க உன் பிரிவுதான் தேவைப்பட்டதோ..?

"இப்படி என்னுடன் தூங்கும்போது உங்களுக்கு எப்படி இருக்கு?" ஓர் இரவில் லேசாக அணைத்தபடி கேட்டாய். "தூய்மையான ஆடைகள் அணிந்துகொண்டு சுதந்திரமாகத் தூங்குவதைப் போல்." காதலின் மயக்கத்தில் நான் முணுமுணுத்தேன். "நான் கேட்கிறேன் நீ எப்படி உணர்கிறாய்..?" நான் உன்னை ஆவலுடன்தானே கேட்டேன். ஆனால் உன் முழுத் திமிரையும் உள்ளுக்குள் அடக்கிய ஆத்திரத்தையும் கொட்டித் தீர்ப்பது போல் அப்போது நீ இறக்கிவைத்தாய். "நீங்க வர்ணித்து எழுதும் பெண்களெல்லாம் என்னைச் சுற்றிலும் படுத்துக்கிடப்பதைப்போல.." உன் பதிலால் எரிச்சலான எனக்கு நீ பேச்சற்றவளாக இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று சொல்லத் தோன்றியது. ஆனால் நறுமணத்தின் குளிர் இரவில் அன்பைப் போர்த்திவிடுவதைப் போல் ஒரு பார்வை பார்த்தாய். உன் இதழ்களின் பேச்சுக்கும் உன் பார்வைக்கும் பல நேரங்களில் தொடர்பே இருப்பதில்லை. என்னதான் பேசினாலும் மார்போடு நீ சாய்ந்துகொள்ள மகிழ்ச்சியின் மலர்களை விடுவித்துத்தானே அந்த இரவு துளித்துளியாக உதிர்ந்தது.. ஆனாலும்.

எதையுமே எண்ணிப்பார்க்காமல் விட்டுப் பிரிந்து தொலைவில் போய்விட்டாய். நானொரு அறிவிலி. எத்தனைப் பேரை எழுதினாலும் அதை எல்லாம் உன் சாயலாய் உன் மையலாய்ப் பார்த்துதான் எழுதினேன் என்ற உண்மையைச் சொல்லத் தவறிவிட்டேன். என் தூண்டலே உன் காதல்தான் என்று வெட்கத்தை விட்டுச் சம்மதித்திருந்தால் போயிருக்கமாட்டாயோ? இயற்கை எல்லாம் பெண்ணுருவாய்ப் பார்த்து அதன் அசைவுகளை வர்ணித்து எழுதி நிறையும்போதெல்லாம் உன் அழகிய முகம் இதயமெங்கும் நிறைந்து நிற்கும். ஆனால் அதை ஒருபோதும் உன்னிடம் ஏன் சொல்லவில்லை..?

இப்போது உன் பிரிவிற்குப் பிறகு கவிதைகள் வரவில்லை. கவிஞன் நான்



என்ற எண்ணமும் இல்லை. எப்படிச் சொல்வது.. வறண்டுபோன சிந்தனைகளால் உன் பிரிவைக்கூட வலிகளோடு எழுத இயலவில்லை. விழி நிரம்பி வழிகின்ற கண்ணீரில் எவையெல்லாமோ வழிவதைத் தடுக்கவும் முடியவில்லை. நீ என் கவிதைகளை இரசிக்காதவள் அல்ல. காடு மலை கடல் காற்று மலர் என்று எதை எழுதினாலும் பெரும் வியப்பினை இதழைச் சுழித்துக் காட்டிப்போவாய். பெண்ணை எழுதினால் மட்டும் பெரும் பாவம் செய்துவிட்டது போல் பேசாமலே போய்விடுவாய். உன்னைச் சீண்டவே நான் பெண்ணை எழுதி உன் முகம் சிவப்பதை உள்ளுக்குள் எத்தனை முறை இரசித்திருக்கிறேன்.

என்னைப் பிரிந்து போவதற்கான முதல் நாள் இரவு தாமதமாக நான் வந்தபோது அலங்கோலமாக அரைகுறை ஆடையுடன் கிடந்தாய். சைகையில் தண்ணீர் எடுத்து வரச் சொன்னாய். அந்தக் கணம் நான் பதறிப்போனேன். கண்களை இறுக மூடி வேகவேகமாகப் பாத்திரத்தோடு உன் இதழ்கள் ஒட்டிக்கொண்டது போல அடங்காமல் நீர் பருகிக்கொண்டே இருந்தாய். குடிக்கும் தண்ணீர் எல்லாம் விழிகள் வழி கண்ணீராய் வழிந்துகொண்டேயிருந்தது.

என்ன நினைத்தாய் அப்போது? உனக்கு நான் வேலைக்காரன் போலவும் நீ எனக்கு எஜமானி போலவும் ஒரு பாவனையுடன்

என்னைப் பார்த்தாய். எல்லாம் மறந்து உன்னைக் கட்டி அணைத்தேன். உன் தலையை வருடினேன். தாயைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் அவ்வளவு பாசத்தோடு அணைத்ததில்லை. நீ என்னை இறுகக் கட்டி அணைத்து அழத் துவங்கினாய். “நான் ஒருத்தி இருக்கிறேன் என்ற நினைவு இல்லாமல் அப்படி என்ன ஊர்சுற்றல்?” எப்போதும் கேட்கும் வழக்கமான கேள்விதான் என்றுதானே நினைத்தேன். உன் மூச்சு திணறத் திணற என்னை அணைத்துக்கொண்டாய்...

அத்தனை நாளாய் நீ அழுதாலும் அழாத நான் அன்று ஏன் சுமந்துகொண்டிருந்த கண்ணீர் முத்துக்களின் கட்டு அவிழ்ந்து சிதறியது போல் அழுதேன்? அடங்காமல் சிரிக்கும் சிரிப்பு தராத ஓர் ஆறுதலை அழுகை எப்படித் தந்தது..? ஆனால் அப்போதுதான்... அப்போதுதான்.. என் ஆவியைக் கழுவித் தூய்மை செய்தது போல் ஒரு தெளிவு! அழுக்குப் படிந்த மனதை அலங்காரப் பொருளாய் உயிரில் உட்கார்த்திவைத்ததுபோல் என் உள்ளுணர்வில் ஒரு அமைதி. உன் உடலெங்கும் நான் முத்தம் பதித்தேன்.. நீ அதை மறுக்கவில்லை. அமைதியான புன்னகையுடன் ஏற்றுக்கொண்டாய். வாசம் மிகு வண்ண மலர்களை உனக்கு நான் முத்தங்களாய் வழங்கினேன். நடக்க முடியாமல் தடுமாறி வேர்வை ஊற்றெடுக்க ஆரம்பித்த உன்னை மெதுவாக அழைத்து வந்து நீராட்டினேன். மஞ்சள் நிறத்துடன் மினுமினுக்கும் உன் உடலெங்கும் பலவித வண்ணங்கள் சிவப்பும் கருப்பும் பொன்னிறமும் திட்டுத்திட்டாய்ப் பதிந்து கிடந்தன. உன் நிர்வாணம் என்னை ஏதும் செய்யவில்லை. என் ஆண் என்ற உணர்வின் அற்புதத்தில் ஒரு தாய்மை துளிர்விட்டது. அப்போது நீ எனக்கொரு குழந்தையாய்ப் பிறந்தாய். ஆனாலும் கொஞ்சம்கூட நன்றியில்லாதவளாய் இரக்கமற்றவளாய் அப்போதே என்னை விட்டுப் போக முடிவெடுத்துவிட்டாயே.


எத்தனைக் குற்றச்சாட்டுகளை முன்வைப்பாய். உன்னைப் பார்ப்பதில்லை, நினைப்பதில்லை, உன் பேரன்பைப் புரிந்துகொள்ளவில்லை, என் புகழுக்காக எழுதிக் குவிக்கிறேன், உன்னுடன் சரியாகப் பேசுவதில்லை, சமையலைப் பாராட்டுவதில்லை, அழகை இரசிப்பதில்லை... அப்பப்பா ஏகப்பட்ட உன் குற்றச்சாட்டுகளில் நான் தடுமாறிப்போயிருக்கிறேன். நீ இல்லாத ஒரு கணம் எத்தனை நிம்மதியாக இருக்கும் என்று எண்ணியிருக்கிறேன். ஆனால் அதைச் சொன்னால் நீ தாங்க மாட்டாய் என்று மௌனமாக நகர்ந்திருக்கிறேன். ஆனால் நீ நான் அலட்சியப்படுத்துவதாக எண்ணிக் கோபப்படுவாய்.

ஆறு லேசாக திரும்பிப் பார்ப்பதைப் போலத் தோன்றியது. அலைகளும் மடிப்புகளை அடுக்கிப் படிக்கட்டுகளில் மோதித் திரும்புகின்றன. துருத்திகளில் பூத்திருக்கும் புற்களின் பூக்களை லேசாக வருடி வருடி ஆறு மென்மையாவதைப் போல் தோன்றியது.

“சார் உங்ககூட ஒரு போட்டோ எடுத்துக்கலாமா? உங்க கவிதைகள் அவ்வளவு ஆழமும் அற்புதமும் சார். முப்பது வருசமா உங்க இடத்துக்கு யாரும் வரமுடியலையே சார்..” ஒரு அழகான பெண் வந்து பேசிவிட்டால் முட்டைக் கண்ணை உருட்டி மிரட்டும் நீ என் பக்கத்தில் இல்லை என்றாலும் கலகலத்து நிற்கும் அந்தச் சின்னப் பெண்ணின் சிரிப்பிலிருந்து துளியைக்கூட தொட்டுக்கொள்ள என்னால் முடியவில்லை. “இல்லம்மா இன்னொரு நாள் பாப்போம்மா.” “ப்ளீஸ் சார்!” “தூரப் போம்மா...!” எனக்கு ஏன் இத்தனைக் கோபம்?

ஆறு இப்போதுதான் திரும்பிப் பார்க்க ஆரம்பித்திருக்கு.. இவள் வேறு வந்து... சரியான தொல்லைகள். அலையின் வேகம் கொஞ்சம் நிதானமிழந்திருக்கிறதே. நீ என்னிடம் திரும்பி வந்துவிட்டாயா..? உற்றுப்பார்க்கிறேன். மாலை இரவாகிக் கொண்டிருக்கிறது. ஆறு பச்சை நிறத்திலிருந்து கருப்பு நிறத்திற்கு மாறத் துவங்கிவிட்டது. நீரின் கருப்பு நிறம் என்னைக் கலங்கவைக்கிறது.. இந்த நிறம் ஏன் என்னைப் பரிதவிக்கவைக்கிறது. எனக்குள் இருட்டு கவ்வுகிறது. தலைசுற்றுகிறது அன்று.. அன்று.. ஒரு சிறு கலயத்தில் சாம்பலாக அள்ளி எடுத்து வந்து நான் கரைக்க அலைகளைக் கருப்பாக்கி நீரில் கலந்தது நிச்சயமாக நீ இல்லையே..! ■

● மு.முருகேஷ்



# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

*90களில் கவிஞர் மீராவை அவரது சிவகங்கை அன்னம் பதிப்பகத்தில் நான் சந்திக்கிற வாய்ப்பு கிட்டியது. அதுவொரு அறிவொளிக் காலம். எப்போதுபோனாலும் வாசிக்க எனக்குப் புத்தகங்களை வழங்குவது கவிஞர் மீராவின் வழக்கம். அப்படியாக அன்றைய சந்திப்பில் என் கைக்கு வந்தது 'ஆகாசம் நீல நிறம்.' எழுதியவர் – விக்ரமாதித்யன். 1982இல் வெளியான நூல்.*

*எளிய கவிதைகளடங்கிய சிறிய நூல். பேருந்தில் ஏறிய 30 நிமிடத்திற்குள்ளேயே வாசித்து முடித்துவிட்டேன். ஆனாலும் புதுக்கோட்டை வருகிற வரை என் சிந்தனை முழுவதும் ஆகாசத்தின் நீல நிறத்திற்குள்ளேயே சிக்கிக் கிடந்தது. எளிய மொழி வாசக மனதை எவ்வளவு ஆழமாகக் கவ்விப் பிடிக்கும் என்பதை எனக்கு உணர்த்திய நூல்களுள் இதுவுமொன்று.*

*பின்னர் கவிஞர் விக்ரமாதித்யனின் கவிதைகளுக்குள் பயணிக்கத் தொடங்கினேன். ஊரும் காலம் (1984), உள்வாங்கும் உலகம் (1987), எழுத்து சொல் பொருள் (1988), திருஉத்தரகோசமங்கை (1991) ஆகிய நூல்களைத் தேடிப் படித்தேன்.*

*நம் பள்ளிக்கால நண்பனொருவன், பல ஆண்டுகால இடைவெளிக்குப் பின் சந்திக்கையில், நம் அருகே அமர்ந்து, நம் கைவிரல்களைக் கோர்த்துக்கொண்டு பேசுவது போலொரு நெருக்கம் உண்டானது.*

**'விரும்பியது நதிக்கரை நாகரீகம்**
**விதிச்சது நகர நாகரீகம்'**

*- என்று மனதில் தோன்றுவதை அப்படியே பாசாங்கின்றிச் சொல்லும் கவிதை மொழியே கவிஞர் விக்ரமாதித்யனைத் தனித்து அறிய வைத்தது.*

*மெல்லிய குரலில் நம்மோடு உரையாடும் விக்ரமாதித்யனின் கவிதைகளில் அங்கங்கே சில பொறிகளும் சட்டென வெடித்து, நம்மை உலுக்கும். அப்படியான பல வரிகள்,*

இப்போதும் என் நினைவிலிருக்கின்றன.

**'நான்**
**யாருடைய தற்கொலைப் படையிலும்**
**இல்லை'**

- என்பார். அடுத்த வரி நோக்கிச் செல்ல விடாமல், நம்மை ஒரு கணம் நிறுத்தும் வரிகளை இடையிடையே பொதிந்து வைத்திருப்பார் கவிஞர்.

**'இருளில் புதைந்திருக்கிறது**
**ஏராளமான நட்சத்திரங்கள்'**

- என்று எழுதி, மண்ணிலும் நம்மைத் தேட வைப்பதே கவிஞரின் இயல்பு.



**'சாமி மலை ஏறி**
**எங்கே போகும்?'**

- என்று கேள்வியை எழுப்பி, அடுத்த வரியில் சட்டெனப் போட்டுடைப்பார்.

**'தேவி மடியில்**
**விழுந்து கிடக்கும்.'**

தனக்கான வாசகர்களைத் தனது கவிதை மடியில் சுமந்து திரியும் கவிஞர் விக்ரமாதித்யனைத் தமிழின் அபூர்வ கவிஞரென்பேன்.

தாமிரபரணி பாய்ந்தோடிய நெல்லையிலுள்ள கல்லத்தி முடுக்கு எனும் நகர்ப்புறத்தில் பிறந்தவர் நம்பிராஜன். 1947ஆம் ஆண்டு செப்டம்பர் 25 அன்று பிறந்த நம்பிராஜன், சில காலம் குற்றாலத்தில் வசித்தார். தலைநகர் சென்னைக்கு வந்து சில காலம் பத்திரிகையாளனாக மேற்கு மாம்பலம், கலைஞர் கருணாநிதி நகர், அசோக் நகர் ஆகிய இடங்களில் இருந்துள்ளார்.

கவிஞர் நா.காமராசன் நடத்திக்கொண்டிருந்த 'சோதனை' எனும் இலக்கிய இதழில் முதன்முதலாக ஒரு பத்திரிகையாளராகத் தனது பணியைத் தொடங்கினார். விசிட்டர், அஸ்வினி, மயன், இதயம் பேசுகிறது, தாய், தராசு, நக்கீரன் ஆகிய இதழ்களிலும் பணியாற்றினார்.

வெகுசன இதழ்களில் பணியாற்றியபோதும், சிறு பத்திரிகைகள் மீதான ஈர்ப்பும் தொடர்பும் விக்ரமாதித்யனுக்கு என்றுமே குறையவில்லை. தமிழகத்திலிருந்து வெளிவரும் அநேக இதழ்களுக்கும் அவரது படைப்புகளை அனுப்பிவைப்பார். கையில் தாளொன்றினை எடுத்து, மனம் போன போக்கில் அப்படியே கவிதையாக்கியிருப்பார் என்றே அவரெழுதிய கவிதைத்தாள்களைப் பார்க்கையில் நமக்குத் தோன்றும். ஆனாலும், அந்தக் கவிதைகளுக்குள் தென்படும் ஓரிரு வரிகள், நம்மை மிகுந்த ஆயாசத்திற்கு உட்படுத்திவிடும்.

எவர் மீதும் கோபமோ, குற்றச்சாட்டோ, புகாரோ இல்லாத கவிதைகளை எழுதிய விக்ரமாதித்யன், எல்லோருக்கும் பிடித்த கவிஞராகவே வலம் வருவதில் வியப்பென்ன இருக்க முடியும்..?

**'முளைவிட்டு**
**வருகிறது வன்மம்**
**சின்னப்பிள்ளைகள்போல**
**சண்டை போட்டு**
**குழந்தைகள்போல**
**சேர்ந்துகொண்டு**
**எனினும்**
**என் மனசில் இப்பொழுதெல்லாம்...**
**நீ எப்படியோ**

*நான் வளர்ந்துவிட்டேன்.'* (நீயும் நானும்)

'உன்போல் இல்லை நான்' என்பதைத் தனக்கான மொழியில் லாவகமாக விக்ரமாதித்யன் சொல்லுகையில், நாமும் 'சரி'யென்றே ஆமோதிக்கிறோம்.

வாழ்க்கை என்பது எல்லோர்க்கும் ஒன்றுபோல் இருப்பதில்லை. ஆனாலும் பல படைப்பாளிகளை வறுமை எனும் பிடிக்குள் வைத்திருக்கவே இந்த வாழ்க்கை விரும்புகிறது போலும். பாரதி, பட்டுக்கோட்டை, தமிழ்ஒளி எனத் தொடரும் வரிசையில் கவிஞர் விக்ரமாதித்யனும் வறுமையின் கைப்பற்றிய குழந்தையாக இருந்தார்.

குடும்பம் தென்காசியில்; கவிஞரோ சென்னையில். போதிய வருமானம் இல்லை. ஆன போதிலும் குடிக்குப் பஞ்சமில்லை. எப்போதும் பணத்தேவையோடு குனிந்தபடியே நடந்துசெல்லும் கவிஞர் விக்ரமாதித்யனைப் பலமுறை நான் சந்தித்திருக்கிறேன் என்றாலும் அந்த முதல் சந்திப்பை என்னால் மறக்க முடியாது.

1995இல் தென்காசியில் தமுஎச நடத்தும் 'கலை இரவில்' கவிதை படிக்க, புதுக்கோட்டையிலிருந்து கவிஞர் கந்தர்வன் தலைமையில் ஒரு கவிஞர் படை புறப்பட்டுச் சென்றோம். தென்காசி என்றதுமே எனக்குக் கவிஞர் விக்ரமாதித்யனைப் பார்க்க வேண்டுமென்கிற ஆசை வந்தது.

எல்லோரும் குற்றாலத்திற்கு ஒரு குளியல் போட்டுவர, கிளம்பிச் சென்றனர். நான் கவிஞரைத் தேடிச் சென்றேன். சரியான முகவரி என்று எதுவுமில்லை என்னிடம். ஆனாலும் சிலரிடம் விசாரித்தேன். பலரும் தெரியவில்லை என்றனர்.

ஒருவர் மட்டும், "நம்ம நம்பி அண்ணாச்சியைத்தான் அவர் கேட்கிறாரு..!" என்று சொல்லிக்கொண்டிருக்கையிலேயே, சற்று தொலைவில் தளர் நடைபோட்டு, கைகளைப் பின்பக்கமாகக் கட்டிக்கொண்டு, குனிந்தபடியே வந்துகொண்டிருந்தார் விக்ரமாதித்யன். என் மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஓடிப்போய்க் கட்டிக்கொண்டேன்.





ஒடுங்கிய முகம், அடர்ந்த தாடிக்குள்ளிருந்து ஒரு வெள்ளிச்சிரிப்பை உதிர்த்தார் கவிஞர். அந்த மாதத்தில் வந்திருந்த எல்லாச் சிற்றிதழ்களையும் வாசித்திருந்தார். பல இதழ்களில் வெளிவந்திருந்த எனது கவிதைகளைச் சொல்லி, "நல்லா இருக்கு. எழுதுங்க..." என்றார். அந்தத் தேநீர்க் கடையின் பலகையில் அமர்ந்து, தேநீர் சுவைத்தபடியே ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம். அதற்குள் இருமுறை புகைக்கத் தொடங்கிவிட்டார் கவிஞர்.

எதையோ தீவிரமாக யோசித்துக்கொண்டே இருப்பது போன்ற நிலையிலேயே இருந்தார். எதையாவது சொல்லிவிட்டு, 'க்ளுக்'கென வெடித்துச்சிரித்தார். எதைச் சொன்னாலும் நீட்டி முழக்காமல், கவிதை போலவே சுருக்கமான வார்த்தைகளில் சொன்னார்.

"சென்னையில பத்திரிகை வேலை எதுவும் சொகப்படலே. ஊருக்கு வந்துட்டேன். ஆனாலும் விடமாட்டேன். சென்னைக்குத் திரும்ப வருவேன்..." என்று சொல்லிவிட்டுச் சிரித்தார். கொஞ்ச நேரம் என் கைகளைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

“இந்த கவிதைப் பேய் நம்மை ஒரு போதும் விடாது. அதோடு சேர்ந்து நாமும் ஆடிக்கிட்டே இருந்துடணும். இல்லாட்டி நம்மை விட்டுப் போயிடும்...” என்றார். நேரமாகிவிட்டது. அறைக்குத் திரும்பி வந்தேன். நின்ற இடத்தில் இருந்தபடியே நான் தெரு வளைவில் திரும்பும்வரை என்னையே பார்த்துக்கொண்டிருந்தார் கவிஞர். அந்தப் பார்வை இன்னும் விலகவில்லை. எங்கு நின்றாலும் கவிதை எழுதுபவர்களைப் பார்த்தபடியே இருக்கிறார் கவிஞர். கால ஓட்டத்தில் எதிர்வரும் உருவங்கள்தான் மாறி மாறிப் போகின்றன. கவிஞரின் பார்வை எப்போதும் நிலைத்திருக்கிறது.




கவிஞர் விக்ரமாதித்யன் எழுதிய ஏதாவது ஒரு நூல், என் மேசையில் இருக்கும். எதுவுமே புரிபடாத கணத்தில் சட்டென நான் கையில் எடுத்துப் படிப்பேன். நம் துயரத்தை, ஆற்றாமையை இன்னும் கொஞ்சம் அது கூட்டிப்போகும். கலங்கினால்தானே தெளிவுபெற முடியும்..!

கவிஞன் என்றும் தனிமரமல்ல; குடும்பம், குழந்தைகளை வளர்க்கப் பொருளாதாரம் தேவையன்றோ..! அதிலும் தன்னோடு வாழ வந்த பெண்ணை, பட்டினியில் தள்ளும் கொடுமை எந்த மனிதனுக்கும் வாய்த்துவிடக் கூடாது.

2001 மே மாதத்தில் மருதா பதிப்பக வெளியீடாகக் கவிஞரின் ‘கல் தூங்கும் மரம்’ கவிதை நூல் வெளிவந்தது. அதிலுள்ள எல்லாக் கவிதைகளுமே வாழ்வின் வலியை, அதுதரும் அனுபவத்தைச் சொல்லிச் செல்பவையாக உள்ளன. ‘கூடவந்தவள்’ (பக்கம்: 62) என்றொரு கவிதை;

**‘திருடலாம்**
**கொள்ளையடிக்கலாம்**
**கூட்டிக்**
**கொடுக்கலாம்**
**காட்டிக்**
**கொடுக்கலாம்**
**கொலையும்**
**செய்யலாம்**
**கூடவந்தவள் மனசை**
**ஜெயிக்க வேண்டும்.’**

உண்மைதான் அண்ணாச்சி. இங்கு வாழ்க்கையென்பது வெற்றியா, தோல்வியா என்று போட்டியின் முடிவுகளை அறிந்துகொள்ளும் தேடலிலேயே பலரின் வாழ்வு முடிந்துபோகிறது. ஆனால், தன்னோடு வாழும் சக ஜீவியின் மனதில் இடம்பெற வேண்டும் என்கிற எண்ணம் ஏனோ பலருக்கும் வருவதில்லை. அதனால்தான் இல்லறங்கள் பல, இன்றைக்கு நல்லறங்களாக இல்லாமல் நீதிமன்ற வாசலில் பிரிவினைக்காகக் காத்திருக்கின்றன.

தமிழின் நவீன கவிஞர்களில் பரவலான வாசகர்களைப் பெற்றவர் கவிஞர் விக்ரமாதித்யன் என்பதில் இருவேறு கருத்திருக்க முடியாது. நவீன கவிதை என்றாலே ‘இறுக்கமான - சட்டெனப் புரிந்துவிடாமல் - கெட்டித்தட்டிப்போன மொழி நடை’ கொண்டதாக இருக்க வேண்டுமென்கிற இலக்கண வேலியைத் தகர்த்தெறிந்த நவீன கவி விக்ரமாதித்யன். எளிய வாசகரும் புரிந்துகொள்ளும் கவிதைகள் என்பதோடு நில்லாமல், படித்துவிட்டு மனதில் ஓரிரு வரிகளை இருத்தி, மீண்டும் அதைச் சொல்லும்போது ஓர் உணர்வெழுச்சியை

உண்டாக்கும் வல்லமை பொருந்திய கவிதைகளைப் படைத்துள்ளார் கவிஞர் விக்ரமாதித்யன். சங்க இலக்கியம் தொடங்கி, சம காலம் வரை எழுதிவரும் அனைத்துக் கவிஞர்களின் கவிதைகளையும் வாசித்துவிட்டு, அவற்றைப் பற்றிய தனது எண்ணங்களையும் அவ்வப்போது பதிவுசெய்து வருகிறார்.

"அன்றைய காலத்தில் திருநெல்வேலி டவுனில் வசதியுள்ள வீடுகளில் ரேடியோ இருக்கும். சத்தமாக வைத்திருப்பார்கள். சிலோன் வானொலியில் கம்பதாசனின் வரிகளான, 'கனவு கண்ட காதல் கதை கண்ணீர் ஆச்சே', 'கல்யாண ஊர்வலம் வரும் / உல்லாசமே தரும் / மலர்ந்து நான் ஆடிடுவேன்' போன்றவைதான் முதலில் என்னை ஈர்த்தன. கம்பதாசன் என்ற பெயர் பின்னால்தான் தெரியும். மருதகாசியின் பாடல் வரிகளும் அப்போது என்னை ஆட்கொண்டன. உடுமலை நாராயண கவி, கு.மா.பாலசுப்ரமணியம், கு.சா.கிருஷ்ணமூர்த்தி, தஞ்சை ராமையா தாஸ், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கண்ணதாசன் ஆகியோரின் பாடல்கள் என் கவிதையின் ஞாபகங்களாக உள்ளன. தேவதாஸ் பாடல்களைத் திரும்பத் திரும்பக் கேட்டிருக்கிறேன். 'விந்தியம் குமரியிடை விளங்கும் திருநாடே/ வேலேந்தும் மூவேந்தர் ஆண்டிருந்த தென்னாடு எங்கள் திராவிடப் பொன்னாடு / கலை வாழும் தென்னாடு' என்பது போன்ற கண்ணதாசனின் வரிகளின் வழியாகவே கவிதையின் ருசியை அறிந்துகொண்டேன்."

'இந்து தமிழ் திசை' (2020 ஜனவரி-13) நாளிதழின் நேர்காணல் ஒன்றில் கவிஞர் விக்ரமாதித்யன், தனக்குள் கவிதைக்கான ருசி அரும்பிய அந்த நாட்களை இப்படியாகப் பகிர்ந்துள்ளார்.

தமிழ்நாட்டின் ஏதாவது ஒரு ஊரில் நடக்கும் இலக்கிய நிகழ்வுகளில், சென்னையின் ஏதாவது சாலையில், எப்போதாவது தொலைபேசிவழி கவிஞரோடு எனது உரையாடல் தொடர்ந்துகொண்டே இருந்தது.

2009இல் இயக்குநர் பாலாவின் 'நான் கடவுள்' திரைப்படம் வெளியானது. அந்தப் படத்தில் கவிஞர் விக்ரமாதித்யனும் நடித்திருந்தார். அதை நடிப்பு என்பதைவிட, அவரது இயல்பில் அவராகவே வந்துபோனார் என்பதே பொருத்தமாக இருக்கும். 2012இல் கவிஞரைச் சந்திக்கையில், "ரெண்டொரு படத்திலே நடிச்சிக்கிட்டு இருக்கேன்..." என்றார். அந்தக் குரலில் எவ்விதப் பெருமிதமுமில்லை.

15க்கும் மேற்பட்ட கவிதை நூல்கள், 2 சிறுகதை நூல்கள், 7 கட்டுரை நூல்களையும் எழுதியதோடு, பத்துக்கும் மேற்பட்ட திரைப்படங்களிலும் நடித்திருக்கும் கவிஞர் விக்ரமாதித்யன், தனது படைப்புகளுக்காகப் பல்வேறு விருதுகளையும் பெற்றிருக்கிறார். 2014ஆம் ஆண்டிற்கான சாரல் விருது, 2008ஆம் ஆண்டிற்கான விளக்கு விருது, 2021ஆம் ஆண்டிற்கான விஷ்ணுபுரம் விருது அவற்றுள் சில.

கவிஞர் விக்ரமாதித்யனைப் பற்றி நினைக்கையில் கூடவே வந்து ஒட்டிக்கொள்ளும் கவிதையிது..

தலைப்பு: சித்தனுக்கும் கோட்டிக்காரனுக்கும்

**'காலைப்பொழுதில்**
**நண்பர்கள் வீட்டில்**
**நீயும் நானும்**
**வேண்டாத விருந்தாளிகள்**
**காலஓர்மை அழித்துவிடும்**
**சித்தபிரமை**
**கவிஞனுக்கும்**
**வாய்க்கத்தான் செய்கிறது**
**அபூர்வமாக**
**தாம்பரம் வரும்பொழுதே**
**தலைநகர் மனமும்**
**கூடவந்து சேர்ந்துகொள்கிறதே**
**பசி தூக்கம் ஞாபகம்**
**துறந்து போகும் பாக்யம்**
**எல்லோருக்கும் கிடைத்துவிடாது**
**அலைநனைக்கும் பாதங்களுக்கு**
**அலைச்சலிலிருந்து நிச்சயம்**
**விடுதலை கிடைக்கும்**



**சித்தனுக்கும்**
**கோட்டிக்காரனுக்கும்**
**சிறுவித்யாசம்தான் இல்லையா...’** *(கல் தூங்கும் மரம் – பக்: 79)*

*2001 நவம்பரில் அகரம் வெளியீடாக வந்த கவிஞர் விக்ரமாதித்யனின் ‘வீடு திரும்புதல்’ கவிதை நூலிலுள்ள சில கவிதைகள், குட்டிக் கதைகளைப் போல் ‘நறுக்’கெனக் கதையொன்றினைச் சுமந்துநிற்கின்றன. இந்திரவிலாஸ், பிறந்த நாள் வாழ்த்து, எதார்த்தத்தின் குடிமகன், என்னுடைய காட்டில், விரல் நுனியின் வித்தை, நான் இல்லாதபோது என் வீடு ஆகியன கவிதையாய் அமைந்த கதைகளாயினும், எனக்கு மிகவும் பிடித்த கதைக்கவிதை இதுதான்;*

*தலைப்பு: வீடு திரும்புதல் (பக்கம்: 86-88)*

**‘எதற்காக வீடு**
**திரும்ப வேண்டும் நாம்**
**யார் எதிர்பார்த்துக்**
**கொண்டிருக்கிறார்கள் நம்மை**
**சொந்த வீடு**
**உண்டா நமக்கு**
**வீடென்பது இடமா...’**

*- இப்படியாகக் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போகும் கவிஞர், அம்மா, மனைவி, குழந்தைகள், தோட்டத்துக் கனகாம்பரம், முற்றத்துக் கொடிப்பசலி, பூனைக்குட்டி, நாய்கள், இசக்கியம்மன், சுடலை மாடசாமி, ஆதிசிவன் என வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கும் அனைத்தையும் சொல்லிச் செல்லும் கவிஞர் இப்படியாகத் தொடர்கிறார்.*

**‘ஊருக்குள்**
**இருக்கிறது வீடு**
**வீட்டுக்குள்**
**இருக்கிறார்கள் பிரியமானவர்கள்**
**பிரியப்பட்டவர்களைத்தாம்**
**தேடுகிறது உள்மனசு**
**வீடு கிட்டத்தில்**
**இருக்க வேண்டும்**
**வேண்டியவர்கள்**
**பக்கத்தில் இருக்க வேண்டும்’**

*- என்றெழுதுகையில், கவிஞர் விக்ரமாதித்யனும் நம் பக்கத்திலேயே இருக்க வேண்டுமென்கிற ஆசை வருகிறது. கரை வந்து கரை வந்து திரும்பிச் செல்லும் அலையைப் போல, அலைந்தலைந்து செல்லும் திரும்பும் இக்கவிதை, இப்படியாக நிலைகொள்கிறது..*

**‘வீடற்றவர்களை எப்பொழுதாவது**
**நினைத்துப் பார்த்திருக்கிறாயா**
**அப்பன் விரட்டி**
**அம்மை விரட்டி**
**அடுத்து பிள்ளைகளும்**
**இரக்கமில்லாமல் விரட்டி**
**வெறுத்துப்போய்த் தனிவீடு**
**உண்டாக்கிக் கொண்டான்**
**கவிதையில் இவன்**
**அந்த வீடுதான் இவன்**
**இவன்தான் அந்த வீடு**
**நிழல் இருள் பாடல்’.**

*பாடுக... எங்கள் கவியே... உங்களின் நிழல் படர்ந்த இருளின் பாடலில்தான் எங்களுக்கான மனவெளிச்சம் விரிந்து கிடக்கிறது.*

- இன்னும் வரும் ■

**ஆழ்மனத் தேடல் – 28**

**பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்**

● ஜின்னா அஸ்மி



# சரியான தவறு

என்ன குழப்பத்தில் இருக்கிறாய்
என்றபடியே வெளியே வந்தான் அவன்

தவறு செய்பவர்கள்
தண்டிக்கப்படுவதே இல்லையே என்றேன்

தவறு செய்பவர்களைத் தண்டிப்பதைவிட
மன்னிக்கப் பழகிக்கொள்
அதுவே மிகப்பெரிய தண்டனைதான்
அவர்களுக்கு... என்றான்

தாம் செய்வது தவறே அல்ல என்பவரிடம்,
'மன்னிப்பதே மனித குணம்'
என்பது மட்டும் எப்படி சரியாகும் என்றேன்

சரி செய்ய முடியாத சரியும்
தவறுதானே என்றான்

தவறு செய்தால் தண்டனை இல்லை எனில்
தவறுகள் எப்படி குறையும்?
முட்டாள்தனமானது உன் வாதம் என்றேன்

பிறந்தால்
ஒருநாள் இறந்துதான் ஆக வேண்டும்
எனப் புரியாதவர்களும்,
இறந்த பின்பு
பிணம் என்ற பொதுப் பெயர்தான் மிஞ்சும்
எனத் தெரியாதவர்களும்தான்
தவறு செய்வார்கள்
மரணம் என்பது விடுதலை
அதைத் தண்டனைக்குள் கொண்டுவந்து
கைதியாக்கி விடாதீர்கள் என்றான்

அவன் மேலும் சொன்னான்
நீ மன்னிக்காவிட்டால்
நிரபராதிக்குக்கூட மரண தண்டனை
கிடைத்துவிடலாம்
ஆனால்
நீ மன்னித்தாலும்
தவறு செய்தவனுக்கு
மரணமே தண்டனையாகத்தான் இருக்கும்
என்று சொல்லிவிட்டு மறைந்தான்

அவன் இன்னும் சொல்வான் ■

த.செயபிரகாசு,
வேதியியல் முதுநிலை மாணவர்,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி

# இனிப்பை நோக்கிய நகர்தல்




**நூல் : கழிமுகம் - பெருமாள் முருகன்**

நிகழ்காலப் புத்தாக்கத்தைப் பற்றிய அதீத கற்பனை கலந்த பயத்தால் ஒருவருக்குள் உருவாகும் பிரச்சனைகள் அவரிடம் அவரது குடும்பத்தினரிடம் எவ்விதமான பாதிப்புகளை உருவாக்குகின்றன என்பது பற்றிய விரிவான கதைக்கருவைக் கொண்டு முன்நகர்கிறது பெருமாள் முருகனின் கழிமுகம்.

முன்னுரையில் புனைவு புனைவாகவே இருக்க வேண்டும் என்பதால் அசுர உலகத்தைக் கதைக்களமாகக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் உள்ளே வருகின்ற செய்திகளைப் பார்த்தால், நிகழ்வுகளைப் பார்த்தால் மனித குலத்தையே அரக்க குலமாகப் பகடி செய்வதாகத் தோன்றுகிறது.

சொல்ல வருவது எல்லாமே இங்கே நடப்பதுதான். ஆனால், என்னுடைய வீட்டில் இல்லை பக்கத்து வீட்டில் என்பது போல அசுர குலத்தை முன்வைக்கிறார். இது யாருக்கும் பங்கம் இல்லாத ஒன்றுதானே.

தற்போது சமூகத்தில், சாதாரணக் குடும்பத்தில் நடக்கின்ற சாதாரணமானவைகளே கதையாகிறது. அதையே அரக்க பாணியில் சொல்லும்போது தொப் தொப் என்று அரக்கர்கள் நடக்கும் சத்தமும் கேட்கிறது.

புதிது புதிதாக மாறி வரும் தலைமுறையில் தனது மகன் எப்படி வாழப்போகிறான் என்று பயந்து நடுங்கும் கதாபாத்திரமாகக் குமராசுரர் கதாபாத்திரம் இருக்கிறது. குமராசுரர் என்றாலே பயந்து நடுங்கும் ஒருவராகவே தென்படுகிறார். இல்லாத ஒன்றை இருப்பதாகவே கற்பனை செய்து வாழ்ந்து பார்க்கும் விநோதப் பிறவி. தற்காலத்தில் நமது மனித குலத்தில் இது போன்ற பல விசித்திரப் பிறவிகளைப் பார்க்க முடிகிறது. கற்பனையாலே ஒன்றுமில்லாமல் போவோரும் உண்டு. தன்னுடன் மட்டும் பேசும் தனிமை விரும்பிகளும் உண்டு. அவர்களில் ஒருவராகவே குமராசுரர் காணப்படுகிறார்.

பாவம் ஆரோக்கியப் பித்தினாலும் அவர் பாதிக்கப்பட்டுள்ளார். ஆரோக்கியப் பித்து நல்ல சொல்லாடல். இதை உருவாக்கப் பல நீகுழாய் (யூடியூப்) நண்பர்கள் பல பாடு படுகிறார்கள் (தற்காலத்தில்).

அவருடைய அந்தக் கவிதைப் பித்து, அவரது சிங்கமே தங்கமே என்பது போன்ற பல எதுகை மோனைக் கவிதைகளையும் அதன் மூலம் அவர் வீட்டுக்குப் பொருள்களை மூடி வைக்கும் பொன்னாடைகள் கிடைத்தது பற்றியும் சொல்வதன் மூலம் ஒரு காலத்தில் அவர் ஒரு இரசனை உள்ளவர் என்பதை எடுத்துக் காட்டுகிறது. அதன் எச்சம்தான் தங்கமே சிங்கமே எல்லாம்.

மிகவும் நெருங்கிய ஒருவருடன் பல காலம் பேசாமல் இருந்தால் அவர்களுடன் பேசுவதற்கு ஒன்றும் இல்லாமல் போகும் என்பதற்கு உதாரணமாகக் குமராசுரர்க்கும் அவர் மகன் மோகாஷ்க்கும் இடையேயான பேச்சு மற்றும் உறவு திகழ்கிறது.

குமராசுரர் தனது மகனுடன் பேசுவதற்காகத் தயார் செய்து வைத்திருக்கும் அந்த ஏழு கேள்விகள், அதற்கு அவனது பதில்கள், அதனுடைய மாத்திரை அளவுகள்

எல்லாம் நிகழ்காலத் தகப்பன் - மகன் உறவுகளைப் பற்றிய பல தகவல்களைப் பதிவுசெய்கின்றன.

மோகாஷ் பிறந்த நேரத்தில் அவனுக்குப் பெயர் வைக்கும் நேரம் நவீன பெயர் வைக்கும் இலக்கணத்தை எளிதாகச் சொல்லி நகர்கிறது. நீட்டி இருக்கும் பழைமை வாய்ந்த பெயரின் வாலை வெட்டிச் சுருக்கினால் நவீன பெயர்.

தற்போதைய தமிழ் ஆசிரியர்களின் தகுதி பெயர் வைப்பதும், கவிதை எழுதத் தெரிவதும் என்று சொல்லி நகர்வது தற்போதைய தமிழ் ஆசிரியர்களின் நிலையை அவர்களைப் பற்றிய சமூகத்தின் குறுகிய மனப்பான்மையோடு வெளிக்காட்டுகிறது.

தற்போதைய பெற்றோர்களின் தங்கள் மகன் பற்றியதான வருங்காலக் கனவுகள் (நீட்.. மருத்துவர் கனவு) குமராசுரர் மங்காசுரிக்கு இருப்பதில் எந்தவித ஆச்சரியமும் இல்லை.

மோகாஷ் பிறந்து 2 வயதில் பள்ளியில் சேர்ப்பது, அவன் பள்ளிப் படிப்பின் நேரத்தில் காட்டப்படும் கொடிய காட்சிகள், மதிப்பெண்கள் சார்ந்து மாணவனை வகைப்படுத்தி வதைக்கும் பள்ளிகள், கண்களைக் கட்டிச் செக்கில் மாட்டப்பட்ட மாடு போல மாணவர்களை வதைக்கும் பள்ளிகளின் கேடு கெட்ட வழிமுறைகள், பள்ளிகளில் மாணவர்கள் இறக்கும் வரை செய்யப்படும் கொடுமை, அதை மறைக்கப் பள்ளிகளின் உள்ளேயே அமைக்கப்பட்ட மயான பூமி.. அனைத்தும் மனதைப் பதைபதைக்க வைக்கின்றன.

பள்ளி முடித்து வந்த மோகாஷ் பள்ளியின் சீருடையை எரித்து மகிழும் நேரம் ஆடிய வெறி ஆட்டம், வீட்டுக்கு வந்து பல நாட்கள் தன்னையே மறந்து தூங்கியவை ஆகியவை மாணவர்களுக்கு நடந்த கொடுமைகளின் வெளிப்பாடாக வெளிப்படுகிறது.

இது போன்ற அரிய வாய்ப்புகளை அவர்களுக்கு ஏற்படுத்தித் தருபவர்கள் அவர்களின் பெற்றோர்களே என்பது இங்கும் எங்கும் நிலைக்கும் உண்மை.

கல்லூரிகளில் சேரும் நேரம் கொடுக்கப்பட்ட இலவச கடிவாளம்... என்னது! மாணவர்களுக்குக் கடிவாளமா.. ஆம் அவர்கள் கண்களுக்குக் கடிவாளம். எதிர் பாலினத்தவரின் இடையே பின்பற்றப்படும் பிரிவு, மாணவர்களை வதைப்பதற்காக உருவாக்கப்பட்ட எந்திர அசுரர்கள் போன்றவை. இப்படி எல்லா நேரங்களிலும் மாணவர்களுக்குக் கல்விமுறையால் ஏற்படுத்தப்படும் ஒடுக்குமுறைகள் இங்கே தெளிவாகப் பதிவு செய்யப்படுகின்றன.

தற்காலக் கல்வி முறையை இதைவிட எதார்த்தமாக ஆழம் திருத்தமாகச் சொல்லிவிட முடியாது.

இவைகள் இங்கு நகைச்சுவையுடன் சொல்லப்பட்டாலும் நமது சமூகத்துடன் பொருத்திப் பார்க்கும்போது மிகவும் ஆபத்தான சிந்திக்கும் திறனற்ற செயல்களை மட்டும் பதிவேற்றம் செய்த எந்திரங்களை உருவாக்குவதாகவே தெரிகிறது. ஆசிரியர்களும் எந்திரங்கள். உருவாக்கப்படும் மாணவர்களும் எந்திரங்கள்.

ஒரு சமூகத்திற்குச் சிந்திக்கும் திறன் இல்லாமல் போனால் அந்தச் சமூகத்திற்கும் மற்ற விலங்குகளுக்கும் வித்தியாசம் இல்லை. மனித சமூகத்தையும் ஏனைய உயிர்களையும் வேறுபடுத்துவதே இந்தச் சிந்திக்கும் ஆற்றல்தான். அது இல்லாமல் போனால் மனிதர்கள் அரக்கர்கள்தான். இது போல இந்நூல் பல இடங்களில் இரகசியமாக எச்சரிக்கிறது.

தலைமுடி வேற எல்லா இடங்களிலும் பிரச்சனை ஆகிவிடுகிறது. இங்கும் ஆகிவிட்டது. தலைமுடியின் வடிவத்தை மாற்றி வீட்டுக்கு வரும் தனது மகனை யாரையா நீ என்பது போலக் கேட்கும் மங்காசுரியின் குரல் பல நபர்களின் குரல்களாக ஒலிக்கிறது.

குமராசுரரின் ஆருயிர் நண்பர் ரம்பத்தொண்டை கனகாசுரர் மற்றும் அவருடைய மனைவியின் வாயிலாக ஆண் குழந்தைகளை மட்டும் எதிர்பார்க்கும் குடும்பங்கள், அதனால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆண் பிள்ளைகளை எதிர்பார்த்து இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்த கனகாசுரர் தனது மனதைத் தேற்றிக்கொள்ளும் வண்ணமாக அனைத்து ஆண் பிள்ளைகளையும்

குறைத்துப் பேசுவதாகவும், குறைத்து மதிப்பிடுகிறவராகவும் மாறிப்போகிறார். இருப்பினும் அவரது கண்களில் அந்த வருத்தம் தெரிகிறது.

பெரிதாக ஒன்றும் இல்லை, அவருடைய மகன் குமராசுரரிடம் புதிதாக அதிக விலைக்கு எல்லா வசதிகளும் கொண்ட செல்பேசி கேட்டான், அவ்வளவுதான். அதைவைத்து அவர் செய்யும் கற்பனைகள்தான் நாவலின் முக்கால்வாசியை நிறைவு செய்கிறது. செல்பேசி பற்றி அவர் கேள்விப்படும் ஒவ்வொரு விசயமும் அவருடைய கற்பனையில் அவருடைய மகனைப் பலமுறை கொலை செய்யப் பார்க்கிறது, தவறான பாதைக்குக் கொண்டு செல்கிறது.

எல்லாம் கற்பனையில். உண்மையில் அப்படி இல்லை. அவனோ எதார்த்தமானவனாகவும் சாதாரணமானவனாகவும் திகழ்கிறான்.

குமராசுரர் பற்றி மங்காசுரி நினைக்கும் நினைவை இங்கே குறிப்பிடுவது நல்லது. எதையும் எளிதாகச் செய்யலாம், ஆனால் இவரோ எல்லாவற்றையும் கடினமாக்கி இருக்கிற எல்லாரையும் கடினப்படுத்திவிடுகிறாரே என்பது போல.

குமராசுரர் உண்மையான அவரை அதிகாசுரர் மூலமாகக் கண்டு பிடிக்கும்வரை ஆரோக்கியப் பித்து முதல் பல பித்துகள் கொண்டவராகவே திகழ்கிறார். ஆனால் அந்தக் கழிமுகம் அவரின் போலியை உரித்தபின் உண்மையான குமராசுரர் வெளிப்படுகிறார். அட இது நம்ம குமராசுரரா என்று சொல்லும் அளவிற்கான மாற்றமாக அது இருக்கிறது.

அந்த அதிகாசுரர் அப்படி என்ன செய்தார்?

அவருக்குச் சற்று ஓய்வைக் கொடுத்தார். தனக்குள் தன்னைத் தேடும் நேரத்தைக் கொடுத்தார், அவ்வளவுதான். தன்னை இறுக்கி வைத்திருந்த குமராசுரர் அவருக்குப் பிடித்தவைகளைச் செய்ய ஆரம்பிக்கிறார். புதிதாகவும் சிலவற்றைச் செய்ய ஆரம்பிக்கிறார்.

அதிகாசுரர் அவரைக் கழிமுகம் நோக்கி ஒரு பயணத்துக்குக் கூட்டிச் சென்றார். அந்தக் கழிமுகமே மற்றதைச் செய்து முடித்தது.

கழிமுகத்தில் நின்ற குமராசுரர் கடல் நோக்கி நின்று தண்ணீரைச் சுவைத்தார், பின் ஆறு நோக்கி நின்று தண்ணீரைச் சுவைத்தார். தன்னை மறந்தார் ஒரு கணம்.

தன்னுடைய வாழ்க்கையிலும் இதுபோன்ற கழிமுகம் இருப்பதை உணர்ந்த அவர் உவர்ப்பான அந்த பழைய வாழ்க்கையை விட்டு இனிப்பான பக்கம் நோக்கி ஓடினார்.

இனிப்பாகவே வாழ்வது எப்படி என்பதை அந்தக் கழிமுகம் அவருக்குச் சொல்லிக்கொடுத்தது.

இப்பொழுது குமராசுரர் சகலத்தையும் புரிந்துகொள்ளும் எளிதாக எடுத்துக்கொள்ளும் ஒருவராக மாறிப்போகிறார்.

*One line story* சொல்லவா.. மோகாஷ் பிறப்பு, வளர்ப்பு, பள்ளிப் பருவம், கல்லூரிப் பருவம், பள்ளி, கல்லூரிகளில் அவன் சேரும்போது நடைபெறும் சம்பவங்கள், அவன் செல்பேசி கேட்டது, இது தவிர குமராசுரரின் அரசுப் பணி, அவ்வளவுதான் இது தவிர ஒன்றும் இல்லை. ஆக ஒரு சாதாரண அசுரக் குடும்பத்தின் சாதாரண வாழ்க்கை முறை அவ்வளவுதான். இதில் நடைபெறும் ஒவ்வொன்றும் அந்தச் சமூகம் அசுர சமூகம் என்பதை நிருபணம் செய்கிறது. மனித சமூகம்!

இந்த நாவல் முழுவதையும் எளிதாகச் சொல்லிவிடலாம்.. ஆரோக்கியப் பித்து, பயம், கேடு கெட்ட கல்விமுறை!!!

இனிப்பான தண்ணீருக்கும் உவர்ப்பான தண்ணீருக்கும் இடையே சிறிய தூரம்தான் கழிமுகத்தில்.

அதுபோல, நாம் நம்முடைய வாழ்க்கையில், சமூகத்தில் காண்கின்ற ஒவ்வொரு உவர்ப்பானவற்றிற்கும் எதிரான இனிப்புச் சுவை சிறிய தூரத்திலே இருக்கிறது.

உவர்ப்பை நோக்கியே நகர விரும்பினால் என்றும் உவர்ப்புதான்.

இனிப்பை நோக்கி நகர விரும்பினால் என்றும் இனிப்புதான். நல்ல தண்ணீர்தான்!!

மகிழ்ச்சியைத் தேடி, சரியான பாதையில் பயணித்தால் என்றும் மகிழ்ச்சிதான்!!

இல்லை தேவையில்லை. அதே உவர்த்த பழைய முறைகள், அதே கல்வி முறைகள், புதியதை ஏற்க மறுத்து, தான் பிடித்த முயலுக்கு ஆறு காலு என்றால் ஒன்றும் செய்ய முடியாது. ■

கவிஞர் ஏகாதசி
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்



# அப்பாவப் போல இங்க யாரிருக்கா...

இங்கே அப்பாக்களுக்கு ஒரு சுதந்திரம் இருக்கிறது.. மூன்று நாட்கள் வேலைக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருக்கலாம்; மனைவி பிள்ளைகளிடம் திட்டு வாங்கிக்கொண்டேகூட சிரித்து மழுப்பியபடி சகல சுகங்களையும் அனுபவிக்கலாம்; இன்னும் சில அப்பாக்கள் குடும்பத்தை மிரட்டி உருட்டி என்ன வேண்டுமானாலும் சாதித்துக்கொள்ளலாம்; வீட்டில் ஏதோவொரு சின்ன பிரச்சனை என்றாலும் துண்டை உதறி ஊருக்குள் சென்று டீ, சிகரெட் முடித்துவிட்டு வீட்டிற்கு வரலாம் அல்லது மதுபோதை அருந்திவிட்டு வந்து மனைவியை இழுத்துப் போட்டு மிதிக்கவும் செய்யலாம்; இதன் இறுதிக்கட்டத்தில் அப்பாக்களின் உண்ணாவிரத நடிப்பும் அரங்கேறும். அப்போதும்கூட அவர்களைக் கெஞ்சிக் கூத்தாடிச் சாப்பிடவைத்துச் சமாதானம் செய்வது, அசிங்க அசிங்கமான வசவுகளை வாங்கிக் கட்டிக்கொண்டு வயிற்றில் மிதி வாங்கிய அம்மாக்கள்தான்.

இதற்கு அப்பாற்பட்ட அப்பாக்களும் இருக்கிறார்கள், ஆனால் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. இதற்கெல்லாம் காரணம் இது ஆணாதிக்கச் சமூகம். இந்த இழி செயல்பாடுகளை ஆண்கள் தங்கள் பிறப்பின் மேன்மையாக எடுத்துக்கொள்கிறார்கள். இது சாதி மத ஏற்றத்தாழ்வுகளைவிட மோசமானது. இங்கே நான் சுட்டிக் காட்டியிருப்பது ஆண்களின் அல்லது அப்பாக்களின் கொடூரமான நடவடிக்கைகளில் ஒரு சதவீதம் மட்டும்தான்.

இங்கே நான் அப்பாவின் பிரிவுத் துயர் தாளாத ஒரு மகளின் பாடல் பற்றிய கதையைத்தான் எழுதவந்தேன். ஆனால் ஆண்கள் மீதும் அப்பாக்கள் மீதுமுள்ள விமர்சனத்தைக் கொஞ்சமேனும் முன்வைக்காமல் அதற்குள் என்னால் நுழைய முடியவில்லை.

இந்தக் குற்றச்சாட்டுகளை ஆண்களின் தலையில் வைத்துவிட்டு அப்படியே ஓரம் நின்றுகொள்வது நியாயமற்றது. இந்தக் கிரீடம் இவர்கள் வாங்கி மாட்டிக்கொண்டதில்லை. பிறப்பிலிருந்தே ஒட்டிக்கொண்டு வந்தது. இதைச் சமூகம் வழிமொழிந்து வளர்க்கிறது. இதைத் தனக்கிருக்கும் கொம்பைப்போல அல்லது கூரான நகத்தைப்போல் பெருமையோடு ஏற்றுக்கொண்ட ஆண்களுக்கு இதன் உண்மையை வெளிப்படுத்தி அவர்களைக் குற்ற உணர்விற்கு ஆட்படுத்த வேண்டும் என்பது நேர்மைத் தன்மையாகும்.



இது இப்படி இருக்க, அத்தனைச் சாதாரணமாகக் கடந்தும் மறுத்தும் விடமுடியாதது அப்பாவின் இன்னொரு பக்கம்.

அம்மாவிடம் ஆயிரமாயிரம் முத்தங்கள் பெற்றும் அம்மாவிற்கு ஆயிரமாயிரம் முத்தங்கள் கொடுத்தும் வளர்கிறது ஒரு ஆண் குழந்தை. அதன் பின் வளர வளர இந்தக் கொடுக்கல் வாங்கல் குறைந்துபோய், திருமணம் முடித்த ஆண் அந்த முத்தங்களையும் தாய்மையையும் தன் மகளிடமும், பாட்டியாகிப்போன அந்த அம்மாவோ தனக்கான முத்தங்களையும் அன்பையும் தன் பெயரன் பெயர்த்தியிடமும் பெற ஆசை கொள்கின்றனர். தன்னை அறியாமலேயே எத்தனையோ பிற்போக்குக் குணங்களோடு அப்பா என்கிறவர் மகளிடம் நடந்துகொண்டாலும் பிள்ளைகளுக்காக அவர் சிந்துகிற வியர்வையும் ரத்தமும் அதை மகள்களிடம் அழியச்செய்து அப்பாவை ஒரு நாயகனாகவே ஏற்கச் செய்யும், அத்தோடு தன் தாயை மகளின் முகத்தில் தேடிப் பார்க்கிற அப்பாக்களின் அன்பில் எந்தப் பெண்தான் கரைந்துவிடாமல் இருக்க முடியும்.

கிராமப்புறங்களில் உழைப்பாளி மக்களின் உயிர் என்பது ஒரு காட்டுச் செடியைப் போல் மிகச் சாதாரணமாகப் பிடுங்கி எறியப்படுகிறது. நோய்வாய்ப்பட்டுவிட்டால் அவர்களின் கதை இறப்பில் போய்த்தான் நிற்கிறது. இவற்றுக்கு அவர்களின் பொருளாதாரமும் அதோடு அவர்களுக்குக் கிடைக்கிற மருத்துவ வசதி போதுமானதாக இல்லாததும் பெருங்காரணங்களாக இருக்கின்றன. எல்லாவற்றையும்விட அவர்கள் நிலத்தில் தம்மைக் கரைக்கின்ற தியாகம் இந்தப் பிரபஞ்சம் அறியாதது.

நான்கைந்து குழந்தைகளைப் பெற்றுவிட்டு ஒரு பெண் இறந்துவிட்டால், தன்

மொத்தச் சீவனையும் பணயம் வைத்து அந்தக் குழந்தைகளைத் தகப்பனே கரையேற்றுகிறான். அதே நிலைதான் ஒரு பெண்ணுக்கும். கணவன் தவறிப்போகிறபோது அந்தக் குடும்பத்தைச் சறுக்கிவிடாமல் நிறுத்த அத்தனைத் துன்ப துயரங்களையும் கடந்தேறுகிறாள். இந்தக் காலத்தோடும் காற்றோடும் தங்களின் உடலோடும் உயிரோடும் மண்ணோடும் மல்லுக்கட்டிப் பிழைக்கிற வாழ்வு உழைக்கும் வர்க்கத்தினுடையது.

நெருப்பிற்கு வழியற்ற ஆயிரம் இரவுகளின் அடுப்பு வாசனையோடும் இயலாத வாழ்வின் புன்னகையோடும் வளர்ந்த பிள்ளைகளில் ஆண்களுக்குப் பிரிவுத் துயரம் என்ற ஒன்று இல்லை. ஆனால் பெண்களுக்கு ஒரு நெடும் வாழ்வில் இடையறுத்து நிலம்பெயரும் கசப்பான சூழல் நடந்தேறுகிறது. திருமணம் முடித்து ஒரு பெண்ணை வெளியேற்றும் கடன் ஒரு குடும்பத்திற்கும், பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு தன் வீட்டிற்கு ஒரு அடிமையைக் கொண்டு வந்து சேர்க்கும் கடன் இன்னோர் குடும்பத்திற்கும் என்பது இங்கே காலந்தோறும் நிலவுகிற கடும்கொடுமை. வாழ்க்கைப்பட்ட பின்னர் ஒரு பெண் தன் தாய் தகப்பனுக்கோ, தன்னோடு பிறந்தோர்களுக்கோ ஒரு நன்மையும் செய்துவிட முடியாது, மாறாகத் தன் குடும்பத்தைத் துளைத்தெடுக்கிற அம்பாக அவள் மாற்றப்படுகிற பேரவலம் ஒரு பெண் தாங்கவியலாத சித்திரவதை ஆகும். இங்கே ஒரு பெண்ணின் வாழ்க்கை எத்தனைப் பேரால் சூறையாடப்படுகிறது என்கிற கேள்வி கையறிவாளாய்ப் பெண்களிடம் இல்லாமல் இல்லை.

திருமணம் முடித்துத் தூரத்து ஊர் போன ஒரு பெண் தன் தகப்பனை நினைத்து உறைவதைப் பாடலாக எழுதியிருக்கிறேன். ஒவ்வொரு பாடலும் உருவாக எனக்கு ஒரு கதை இருப்பதில்லை, அதன் சாயலில் ஒருநூறு கதைகள் இருக்கின்றன. என் அம்மாவுடன் பிறந்த பெண்களில்.. அம்மா மூத்தவர், மற்ற மூவரும் எனக்குச் சின்னம்மாக்கள். அம்மா பெயர் பூவாயி. சின்னம்மாக்கள் புஷ்பம், ரஞ்சிதம், பரமேஸ்வரி.

நான் பன்னிரண்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது என் அம்மாவைப் பெற்ற தாத்தா சொக்கர் அவர்கள் இறந்துவிட்டார். இது நடந்தது 1992 டிசம்பர் 28. அப்போதெல்லாம் போக்குவரத்து வசதிகளோ தொலைதொடர்பு வசதிகளோ பெரிதாக இல்லை. தாத்தா இறந்த செய்தியை உறவுகளுக்குச் சொல்வதற்கு நானும், என் உறவுக்காரர்கள் சிலரும் ஆளுக்கொரு திசையில் நடந்தும் பஸ்ஸிலும் சைக்கிளிலுமாய்ச் செல்கிறோம்.

நாங்கள் தாத்தா வீட்டின் அருகிலேயே இருந்தோம், சின்னம்மாக்கள் மூவரும் வெளியூர்களில் இருந்தார்கள். இதில் கருமாத்தூர் ஒத்தப்பட்டியில் இருந்த ரஞ்சிதம் சின்னம்மாவுக்கும், முத்துப்பட்டிக் குவாரியில் வசித்துவந்த பரமேஸ்வரி சின்னம்மாவுக்கும் இழவுச் செய்தி சொல்லுகிற பொறுப்பு என்னுடையது. சைக்கிளை எடுத்துக்கொண்டு ஒத்தப்பட்டியை நோக்கிச் செல்கிறேன். கால்கள் பெடல்களை மிதிக்கின்றன; கண்கள் தாத்தாவை நினைத்து அழுகின்றன. முதலில் போன இடம் 12 கிலோ மீட்டர். இரண்டாவது முத்துப்பட்டிக் குவாரிக்கு ஒரு 12 கிலோ மீட்டர் தூரம். மீண்டும் நான் திரும்பித் தாத்தா முகத்தைப் பார்க்க மதியம் ஆகிவிட்டது.

இரு சின்னம்மாக்களிடமும் இந்தச் செய்தியை நான் சொன்ன அவஸ்தையும் அதற்கு அவர்கள் தன் தகப்பனை நினைத்து வெடித்து அழுததையும் என்னால் இன்றும் மறக்கவே முடியவில்லை. தகப்பனின் மரணம் பெண்களுக்கு எத்தனைப் பெருந்துயரம் என்பதை எங்கள் குடும்பம் தொடங்கி எண்ணற்ற குடும்பங்களில் பார்த்திருக்கிறேன். அதிலும் பிள்ளைகள் குழந்தைகளாக இருக்கும் பருவத்திலேயே தாய் இறந்துபோகிற வீடுகளில் ஒரு தகப்பன் மொத்தப் பொறுப்பையும் தன் தோளில் சுமந்து படுகிற கொடுமை தாங்கவியலாதது. அப்படியான அப்பாக்களால் வளர்க்கப்படும் பெண்பிள்ளைகள் அப்பாக்களைப் பிரிந்து வாழ்வது எளிதல்ல. அப்பனுக்கு வக்கிருந்தால் திருவிழாவுக்கு மகள் குடும்பத்தை அழைப்பார்.

அதுவும் இல்லையென்றால் பெரும்பாலான குடும்பங்களில் அப்பா அந்தப் பக்கம்தான் மகள் இந்தப் பக்கம்தான். நான் என் சின்னம்மாவுக்குச் சேதி சொன்னதுபோல் ஒவ்வொரு மகளுக்கும் ஒருநாள் ஒரு சேதி தவறாது போகும்.

**பல்லவி**

அப்பாவப் போல இங்க
யாரிருக்கா மனுசன்
அடுத்தபடி யாகத் தானே
கட்டிக்கிடும் புருசன்

ஓடாத் தேஞ்சாரு
ஒலைக் கரிசி போட
ஒத்த வேட்டிதானே
மொத்த ஒடம்ப மூட

காச்சவந்து ஊசியெனக்குப் போடயில
கண்ணமூடி அழுதுக்கிட்டு நிப்பாரு
காசுதுட்டு என்னத்துக்கு வாழ்க்கையில
கடைசிவர எனக்கு வேணும் அப்பாரு

**சரணம் – 1**

நெத்திக்கு நேரா பொட்டு – அப்பா
வச்சு விட்டதில்ல
உச்சிபாத்து ஒழுங்கா – தல
வாரி விட்டதில்ல

ஆனாலும் அதுபோல அழகு
எப்போதும் இருக்காது
கார்காலம் முடிஞ்சாலும் பாசம்
கொஞ்சூண்டும் கருக்காது

திருவிழாத் தேரு எங்கவீட்டுத்
திண்ணையில உறங்கும் – அந்த
உறக்கத்தில் கூட அது
எம்பேர உளரும்

**சரணம் – 2**

தண்ணிப் பானைய அப்பா – என்ன
தூக்க விட்டதில்ல
மாத்துத் துணிக்கு – நானும்
மருகி நின்னதில்ல

கல்யாணம் கட்டிக்கிட்டேன்
கண்ணீரு ஆறாக
தூரத்தில அப்பாவப் பாத்தா
ஒடஞ்சுடுவேன் நூறாக

அப்பாவ நெனச்சா – கொல்லையில
அரளிப்பூ உதிரும் – கெட்ட
சேதிவரும் நாளில் – பொசுக்கின்னு
நின்னுவிடும் உசுரும்

இந்தப் பாடலுக்கு மெட்டமைத்தவர் தோழர் கரிசல்குயில் கிருஷ்ணசாமி அவர்கள். இதற்கு முறைப்படி இசையமைத்துப் பாடல் பதிவு செய்தவர் இசையமைப்பாளர் ஜெய கே தாஸ் அவர்கள். குரல் வழி உயிர் தந்தவர் மக்கள் இசைப் பாடகி ராஜலட்சுமி அவர்கள். இந்தப் பாடலைக் காட்சிப்படுத்தியபோது மகளாக ராஜலட்சுமியும், சிவதர்ஷினி என்கிற சிறுமியும் நடித்திருந்தனர். அப்பாவாக மாமா சிவமணி காட்சியின்வழி வாழ்ந்திருந்தார். இது போன்ற பாடல்கள் திரைப்படங்களில் வந்த காலம் ஒன்று இருந்தது. ஆனால் இப்போது அதற்கு வாய்ப்பில்லை. ஆனாலும் உழைப்பாளி மக்களின் வாழ்வை, உணர்வை எல்லாருக்கும் கொண்டுசெல்வதை எனது மகத்தான கடமையாகப் பார்க்கிறேன்.

கலிங்கப்பட்டி க.கருப்பசாமி



# ‘கதைகளைவிட இன்றைய காலத்தில் வேறு எது அறத்தைக் கற்றுத்தர உதவிடப்போகிறது..’

குறட்டை மாமா கணேசுபிரபுவுடனான சந்திப்பு

இணைய வழியில் சிறார்களுக்கான கதைகளைச் சொல்பவர்களில் தனித்துவமானவர் குறட்டை மாமா கணேசுபிரபு. பல்வேறு கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் தொடர் வருகைதரு கதைசொல்லியாக வலம்வந்தவர். பலகுரல் கலைஞராக, நடிகராகச் சென்னை வந்தவர். இதழ்களில் பணி செய்து, சிறுகதையாளராக உருவெடுத்தார். பின் நடிகராக வேண்டும் என இதழ் பணியைத் துறந்த இவரை எழுத்து மீண்டும் தனக்குள்ளேயே இழுத்துப்போட்டுக்கொண்டது. எழுத்தாளர்களைச் சந்தித்து அவர்களின் வாசிப்பு அனுபவங்களை நம்மோடு பகிர்ந்துகொள்ளும் பெப்பர்ஸ் தொலைக்காட்சியின் ‘படித்ததில் பிடித்தது’ நிகழ்ச்சியை நெறிப்படுத்தி வந்தார். சிலகாலம் உதவி இயக்குநராகவும் இருந்துள்ளார். திரைப்படங்களில் சிறு சிறு வேடங்களில் நடித்துக்கொண்டும் வலையொளியில் ‘குறட்டை மாமா’ என்ற பெயரில் சிறார்களுக்குக் கதைசொல்லியும் வரும் அவரை ஒரு மாலைப்பொழுதில் சந்தித்தபோது...

**‘படித்ததில் பிடித்தது’ நிகழ்ச்சிக்குப் பிறகுதான் வாசிக்க ஆரம்பித்தேன்.. என்கிறீர்கள். எழுத்தாளர்களை அதுவும் அவர்களின் வாசிப்பு அனுபவங்களைப் பற்றிப் பேசும் நிகழ்வில் நீங்கள் எப்படி?**

முதலில் தோற்றமும் குரல் வளமும்தான் காரணம். நண்பர் ஆனந்த் எனக்கு அப்போது இவ்வாய்ப்பினை வழங்கினார்.

வாசிப்பு என்பதற்குள் நுழைகிறவர்கள் இரண்டு வகையினர். ஒரு சாராருக்கு இயல்பாகவே வாசிப்பதற்கான சூழல்கள் அமைந்திருக்கும் அல்லது அவர்களுக்கு வாசிப்பதற்கான வாய்ப்புகளும் வழிகாட்டுதல்களும் கிடைத்திருக்கும். அடுத்த வகையினருக்கு அப்படியில்லை. பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் அல்லது ஏதாவது ஒரு வாசகரின் பேச்சைக் கேட்டு அதில் ஈர்க்கப்பட்டு நூல்களைத் தேடி வந்திருப்பார்கள். நான் இரண்டாம் வகை.

இதழில் பணிபுரிந்த அனுபவம் கொஞ்சம். சிறுகதைகள் எழுதி ராஜம் கிருஷ்ணன் நினைவு சிறுகதைப் போட்டியில் பரிசுகள் பெற்றிருக்கிறேன். நிகழ்வில் நான் கலந்துரையாடப் போவதில்லை, அவர்களின் அனுபவத்தைக் கேட்டுக்கொண்டிருக்கப் போகிறேன் என்பதே நான் பயமின்றி அந்நிகழ்ச்சியில் தொடரப் போதுமானதாக இருந்தது. கற்றுக்கொள்வோம் என்ற எண்ணமும் தயக்கம் இல்லாமல் தொடர உதவியாக இருந்தது.



வண்ணதாசன், ஜோ டி குருஸ் எனத் தொடங்கி இயக்குநர் பாலுமகேந்திரா, ஜெயமோகன் வரை பல்வேறு ஆளுமைகளின் வாசிப்பு அனுபவங்களை என்னுடைய நிகழ்ச்சியில் பகிர்ந்திருக்கிறோம். ஒவ்வொரு நிகழ்ச்சிக்குப் பிறகும் நூல்களை நோக்கி நான் பயணப்பட்டேன். அப்போதிருந்து வாசிப்பு என்னைக் கவ்விக்கொண்டுவிட்டது... கொரானாவுக்குப் பின்பான காலத்தில் வாசிப்பு நின்றுபோய்விட்டது. மீண்டும் தொடங்க வேண்டும். இப்போதைக்குக் குறட்டை மாமாவுக்காக மட்டுமே வாசிக்கிறேன்.

**இந்நிகழ்ச்சியினால் நீங்கள் வாசித்து உங்களுக்கு மிகவும் பிடித்துப்போன படைப்பு என்றால் எதைச் சொல்வீர்கள்...**

நிறைய்ய இருக்கிறது. ஆனால் அதில் மாண்டோவின் படைப்புகள் என்னை வெகுவாகக் கவர்ந்தன. கல்யாண்ஜியின் கவிதைகள்... இன்னும் பல.

**நீங்கள் இதழில் பணிசெய்தபோது நா.முத்துக்குமாருக்கும் உங்களுக்கும் ஏற்பட்ட நட்பு குறித்துக் கூறமுடியுமா?**

நா. முத்துக்குமாரின் கல்லூரிப் பருவம் அது. 1994 வாக்கில் அது நிகழ்ந்தது... நான் அப்போது நக்கீரன் இதழில் பணிசெய்து கொண்டிருந்தேன். எடிட்டர் அறையில் நான் மட்டும் இருந்த தருணங்களில் நா.முத்துக்குமார் வருவார்... கவிதைகளைக் கொண்டுவந்து தருவார். எல்லாக் கவிதைகளும் அருமையாக இருக்கும். இதழில் வெளியிடுங்கள் என்பார்.

ஆனால், இதழில் வெளியிட வேண்டுமானால் அதனை எடிட்டரோ ஆசிரியரோ முடிவு செய்வார்கள்... என்னால் பாராட்ட மட்டுமே முடியும்.. பாராட்டுவேன். அப்படித்தான் மலர்ந்தது எங்கள் நட்'பூ'. பிறகு ஏர்முனை திரைப்படத்தின் இயக்குநரிடம் உதவி இயக்குநராக என்னையும் அவர் சேர்த்துவிட்டார். சில காரணங்களால் அந்த இயக்குநரின் ப்ராஜெட் நின்றுபோக அடிக்கடி சந்திக்கும் நாங்கள் எப்போதாவது சந்திக்கும்படி ஆகிவிட்டது. நான் இதழிலேயே பணியைத் தொடர்ந்தேன். முன்பு கண்ணகி சிலை இருந்த இடத்தில் சில கட்டிடங்கள் இருந்தன. அங்கு மரத்தடிகளில் நிறைய நேரங்களை அவரோடு நான் செலவிட்டிருக்கிறேன். ரசனையும் கற்பனை வளமும் அள்ளக் குறையாத மகாகவிஞன் அவர். பின்னாளில் அவருக்குக் கிடைத்த பெரும் வரவேற்பு கண்டு மகிழ்ந்தேன். அவருடன் நட்பு பாராட்டியதற்காகவே நான் பெருமையடைந்தேன்.

**படித்ததில் பிடித்தது நிகழ்வில் உங்களுக்கு**

**மிக நெருக்கமாக அமைந்த ஆளுமை குறித்து ஏதாவது ஒரு நினைவு எனக் கேட்டால் நீங்கள் எதைச் சொல்வீர்கள்....!**

வாசிப்பைத் தாண்டித்தான் அதைக் குறிப்பிட்டாக வேண்டும். எழுத்தாளர்களில் சிலர் என் மனதுக்கு நெருக்கமானவர்களை நினைவூட்டியபடியே இருக்கிறார்கள். அதற்கு அவர்களுடைய மேனரிசம் அல்லது உருவ அமைப்புகள்கூடக் காரணமாக அமைந்திருக்கலாம். அப்படிச் சொல்ல வேண்டும் என்றால் எழுத்தாளர் வண்ணதாசனுடைய காதுகள் மற்றும் அவருடைய உருவ அமைப்பு என் தந்தையை நினைவுபடுத்தின.

இயக்குநர் பாலுமகேந்திராவின் கைவிரல் நகங்களும் கைகளும் என் தந்தையை நினைவுபடுத்தின... பாலுமகேந்திரா சாருடன் நான் சிலகாலம் பழகினேன். அவருக்கு மறதி வந்து என்னை அடையாளம் காண முடியாமல் யார் நீங்கள் என்று கேட்டபோது நான் அதிர்ந்தேன். அதிலிருந்து என்னால் வெளிவரமுடியவில்லை.

ஒரு எழுத்தாளரின் நூலில் இருந்தும் சரி... அல்லது ஒரு எழுத்தாளரிடமிருந்தும் சரி நாம் பெறும் அனுபவங்கள் என்பது ஒன்றுதான். நம் வாழ்வை அவர்களுக்குள் ஏதாவது ஒரு வகையில் சம்பந்தப்படுத்திக்கொள்கிறோம். அதன் பிறகே நம்வாழ்வில் படைப்பு அல்லது ஒரு படைப்பாளி வழிநடத்தத் தொடங்குகிறார்.

**படைப்பும் படைப்பாளியும் வாசகனின் இந்த மாதிரியான செயல்பாட்டின்போதுதான் வெற்றியடைந்துவிடுகிறார்கள் என்கிறீர்களா?**

ஆம்... வாசகனும் படைப்பும் படைப்பாளியும் சந்திக்கும் புள்ளி 'சம்பந்தம் கொள்ளுதல்' எனும் இதுதான் என்று நம்புகிறேன்.

**'குறட்டை மாமா' முயற்சி பற்றிச் சொல்லுங்கள்....**

நான் என் பிள்ளைகளுக்குக் கதைகள் சொல்லுவேன். அவர்களுடனான நேரம் செலவிடுதல் என்பதில் பெரும்பாலும் கதை சொல்வது முக்கிய இடம் பிடிக்கும். ஒரு சில நாள்களில் பணிப்பளு காரணமாகக் கதைகள் ஏதும் படிக்காமல், கதைகளும் சொல்லக் கிடைக்காமல் குரலை மாற்றி ஏதாவது உளறிக்கொண்டு இருப்பேன். பிள்ளைகள் கேட்டுக்கொண்டுதான் இருப்பார்கள்...

பிள்ளைகளைச் சமாளிக்கவும், நெருக்கமாக நேரம் செலவிடவும் கதைகள் பெருமளவில் பெற்றோருக்குக் கைகொடுக்கும். எல்லாப் பெற்றோருக்கும் சுவாரஸ்யமாகக் கதை சொல்ல வராது. என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். எனக்குத் தெரிந்த முறையில் நான் கதை சொல்கிறேன். அது குழந்தைகளுக்குப் பிடித்துவிடுகிறது அவ்வளவுதான். இந்தக் காரணங்களும் மற்றபடி பிள்ளைகள் யூடியூப்பில் கதை சொல்லுங்க அப்பா என்று பலமுறை சொல்லிக்கொண்டே இருந்ததின் விளைவாகவும்தான் தோன்றினார் குறட்டை மாமா. அதன்பிறகு எங்கள் குடியிருப்பில் உள்ள குழந்தைகள் அனைவருக்கும் பிடித்தமான நபர் குறட்டை மாமா கணேசுதான். இடையில் சில காலம் நின்றுபோன குறட்டை மாமா மீண்டும் தொடர்ந்து இயங்குவதற்குக் காரணமும் அவர்கள்தான்...

குறட்டை மாமா கொரானா காலத்திற்கு முன்பே பலரிடமும் வரவேற்பைப் பெற்றது... அதன் வளர்ச்சியில் ஏராளமான ஆளுமைகளின் ஆதரவு இருந்தது. அவர்களுக்கு இந்நேரத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**குறட்டை மாமா ஏன் கதை சொல்கிறார்..**

நம்முடைய குழந்தைப் பருவத்தில் நம் தாத்தா பாட்டிகள் கதையென எதைச் சொன்னாலும் கேட்டுக்கொண்டிருப்போம். கதை கேட்பது என்பதைத் தாண்டி தாத்தாவின் புகையிலை வாசமும் பாட்டியின் அரவணைப்பும் வியர்வை நாற்றமும் இப்போது நினைத்தாலும் கதையோடு மணமெடுத்து வீசும்...

அந்த அனுபவம். அப்படிக் கதை கேட்பது நெடுங்காலத்திற்குப் பிறகும் மணத்துடன் மனிதர்களை அவர்களுடனான நமது அனுபவங்களை நினைவுகூரவைக்கும். கதையை மறந்துபோனாலும் இம்மாதிரியான அனுபவங்களை நினைத்துக்கொண்டே





கதையை நினைவுக்குக் கொண்டு வந்துவிட முடியும்.

இந்த அனுபவம் இக்காலப் பிள்ளைகளுக்குக் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் எதை ஒன்றைச் சொல்லித் தர வேண்டுமானாலும் கதை தேவைப்படுகிறது. கதை வேகமாக குழந்தைகள் ஒன்றைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இந்தத் தேவையும் பழைய மாதிரியான ஏதாவதொரு அனுபவத்தைத் தரவும் குறட்டை மாமா கதை சொல்ல முயற்சிக்கிறார்.

**குழந்தைகளுக்குக் கதை சொல்வது என்பதே பெரும் சவாலானதுதான் ஆனாலும் கதை சொல்வதில் முக்கியமானது, கடினமானது என்றால் எதைச் சொல்வீர்கள்?**

சுவாரஸ்யம்... கதை... இரண்டையுமே சொல்லலாம். அந்தக் காலத்தில் பெரியவர்கள் எதைச் சொன்னாலும் சுவாரஸ்யமாகச் சொல்லுவார்கள். அதைத் தாண்டி அவர்கள் எதைவைத்து வேண்டுமானாலும் ஒரு கதையைச் சொல்லத் தொடங்கிவிடுவார்கள்... அது கேட்டுக்கொண்டே இருக்கத் தூண்டும்.

வானத்தைப் பார்த்துக்கொண்டு படுத்திருக்கிறோம். உயரத்தில் நட்சத்திரம் தெரிகிறது. உடனே நட்சத்திரக் கதை ஒன்று எப்படியோ வந்துவிடும். இருட்டாக இருக்கிறதா, வெளிச்சமில்லையா.. உடனே இருட்டைப் பற்றி ஒரு கதை. இப்படி ஆடு இருந்தால் ஆட்டைப் பற்றியும் மாடு இருந்தால் மாட்டைப் பற்றியும் கதை சொல்லிவிடுவார்கள். ஆனால் இன்று கதைக்கும் சுவாரஸ்யத்திற்கும் அதிகமாக மெனக்கெட வேண்டியிருக்கிறது.

**அப்படியென்றால் இன்று சுவாரஸ்யமான கதைகள் கிடைப்பதில்லையா?**

அதாவது சொல்லக்கூடிய வகைகளிலான குழந்தைகளுக்கான கதைகளில் சுவாரஸ்யம் கொஞ்சம் குறைவுதான். எல்லாக் கதைகளையும் சொல்லிவிட முடியாது... சில கதைகள் படிப்பதில் கிடைக்கும் சுவாரஸ்யத்தைச் சொல்லும்போது தருவதில்லை. அது கதை சொல்பவரைப் பொறுத்ததுதான் என்றாலும்கூட சுவாரஸ்யமாகச் சொல்லக்கூடிய வகையில் கதைகள் பெரிய அளவில் வெளிவருவதில்லை என்பதையும் கவனிக்கத்தான் வேண்டும். அல்லது என்னுடைய தேடுதலில் நான் கண்டடையாமலும் இருக்கலாம்தான்.

**குறட்டை மாமாவின் சிறப்பம்சம் கதையில் என்ன வருகிறதோ அதைத் தேடிச் சென்று அந்த இடத்தில் கதைசொல்வது... என்பதுதான். ஆடு, கழுதை, ஒட்டகம் என விலங்குகளின் கதைகள் சொல்லப்படும்போதெல்லாம் அந்த விலங்குகளையும் சேர்த்துக்கொள்கிறீர்களே! இந்த எண்ணம் எப்படித் தோன்றியது...**

என் பையன்தான் காரணம்... அவன்தான் என்னுடைய கேமரா மேன்.

ஒருநாள் ஒரு ஆட்டினைப் பற்றிய கதை சொல்லலாம் என முடிவெடுத்து ஒரு நல்ல இடத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். பையன் சொன்னான். அப்பா ஆடு இருக்கும் இடத்திற்குச் சென்றால் என்ன? இப்படி ஆரம்பித்ததுதான் விலங்குகளோடு சேர்ந்து கதை சொல்வது. சமீபத்தில் ஒட்டகத்தோடு கதை சொல்லியிருந்தேன். கதையைச் சொல்வதற்கு முன்பு அந்த ஒட்டகமும் நானும் பழகிக்கொள்வதற்கு ஒருமணி நேரத்திற்கும் மேலாகியது... தொடக்கத்தில் கடிக்க வந்த ஒட்டகம் நான் அன்போடு தொட்டுத் தடவிவிடுகையில் என்னைப் புரிந்துகொண்டு ஒத்துழைத்தது.

அப்போது எனக்குப் பாலுமகேந்திரா சார் என்னிடம் சொன்ன வார்த்தைகள்தான் நினைவுக்கு வந்தன. “உண்மையாக நீ எதைத்

தேடினாலும் அது உனக்குக் கிடைக்கும்.''

எனக்கு ஒட்டகம் ஒத்துழைத்தது.

**குறட்டை மாமா கதையை எப்படித் தேர்வு செய்கிறார்?**

கதைகள் நிறைய்ய இருக்கிறது. குறட்டை மாமாவின் எதிர்பார்ப்பு முயற்சி எல்லாமே கொஞ்சம் வித்தியாசமானது. என்னுடைய நண்பர் ஒருவர் ஒரு கதையை என்னிடம் சொன்னார். அந்தக் கதை நாம் ஆதியிலிருந்து கேட்டு வந்த காக்கா – ஆயா வடையைத் திருடிய கதைதான். ஆனால் வேறு மாதிரியாகச் சொன்னார்.

காக்கா வடையைத் திருட முயற்சிக்கிறது. பாட்டி, `நீ காட்டிற்குள் சென்று சுள்ளி பொறுக்கி வந்து தா... நான் உனக்கு, நீ செய்த வேலைக்காக வடையைத் தருகிறேன்` என்கிறாள். திருட நினைத்த காக்கை உழைத்து உண்ண முயற்சிக்கிறது. ட்ரெண்ட் மாறிப்போச்சு என்பது அப்போதுதான் புரிந்தது எனக்கு. பிறரை ஏமாற்ற நினைத்தால் நாமும் ஏமாறுவோம் என்பது பழைய அறம். உழைத்து உண்ண வேண்டும் என்பது புது அறம். ஆனால் கதை எல்லாம் ஒன்றுதான். இதைப் பிடித்துக்கொண்டேன்.

பிறகு நானே ஒரு கதை எழுதினேன். முயல் ஆமை கதை. தூங்கிவிட்ட முயலை



ஆமை எழுப்புகிறது. நண்பா! நீ எவ்வளவு வேகமாக ஓடக்கூடியவன்... இப்படித் தூங்கலாமா, சோம்பேறித்தனம் கூடாது என்கிறது. முயலும் எழுந்து ஆமாம் என்று கூறி வேகமாக ஓடுகிறது. ஆமை மெதுவாகக் கோட்டிற்கு வந்துகொண்டிருக்கிறது. அப்படி வரும்போது நண்பன் எப்படியும் இந்நேரம் வெற்றியடைந்திருப்பான் என நினைத்துக்கொள்கிறது. கோட்டிற்கு அருகில் வந்ததும் கோட்டைக் கடக்காமல் ஆமைக்காக முயல் காத்து நிற்கிறது. இருவரும் ஒன்றாகக் கோட்டைக் கடக்கிறார்கள்... இப்படிப்பட்ட கதைகளைவிட இன்றைய காலத்தில் வேறு எது அறத்தைக் கற்றுத்தர உதவிடப்போகிறது...

நற்பண்புகளைக் குழந்தைகளிடத்தில் விதைக்க, காலத்திற்கேற்ற நல்ல கதைகள் வேண்டும். அப்படியான கதைகளைக் குறட்டை மாமா தேடிச்சென்று குழந்தைகளுக்குச் சொல்லிவருகிறார்.

**பெற்றோருக்கும் வாசகர்களுக்கும் குழந்தைகளுக்கும் நீங்கள் எதாவது சொல்ல வேண்டுமா?**

புதிய முயற்சிகள், புதிய சிந்தனைகள், எதார்த்த வாழ்வைப் புரிந்துகொள்ளவும் அதற்கு ஏற்றபடி வாழவும் கற்றுத்தரும் கதைகள் குழந்தைகளுக்காக நிறைய வெளிவரவேண்டும். ஏராளமான கதைகளில் நிறைய வெறுமைகள் இருக்கின்றன. சிறுவர் மலர், குழந்தைகள் மலர் போன்ற நாளிதழ் இணைப்புகளையே பெரும்பாலான குழந்தைகள் எளிதில் படிக்கின்றனர். அவற்றில் வரக்கூடிய கதைகள் பெரும் கவனத்தோடு எழுதப்பட்டால் சிறப்பாக இருக்கும்.

நிறைய நண்பர்கள் என்னை அழைத்து அவர்களுடைய கருத்தை, ஆலோசனையை அளித்துவருகிறார்கள். அதில் பலரும் என்னிடம் மட்டுமின்றி வெளியில் பொதுத்தளங்களில் எவ்விதத் தயக்கமுமின்றிக் குறட்டை மாமாவைப் பற்றிச் சொல்கிறார்கள். அதனால் குறட்டை மாமாவிற்கு இன்னும் நிறைய குழந்தைகளின் அன்பு கிடைக்கிறது. அத்தனைப் பேருக்கும் குறட்டை மாமாவின் அன்பும் நன்றியும். ■

## உயிருடன் ஒரு உரையாடல்....

அது ஒன்றும்
அசாதாரண தருணமில்லை
சாதாரணமான தருணம்தான்
கண்ணெதிரே வெளியேறிய உயிர்
உரையாடத் தொடங்கியது என்னிடம்.

யாரென்றது என்னை;
உன் உடலென்றேன்
யாரென்றது தன்னை;
என் உயிரென்றேன்

வரையறை செய்யென்றது;
உயிரியல் வேதியியல் இயற்பியல்
என எல்லாம் கலந்த அறிவியல் என்றேன்.
ஆட்சேபனை செய்தது உயிர்;
அது குறித்துக் கவலையில்லை
என்றேன்.

அத்தனையும்
பாவம் புண்ணியம் கர்மம்
என நீட்டி முழங்கியது;
எல்லாம்... வாழ வழியற்றவன்
வகுத்தது என்றேன்.

கடவுள் என்பதற்கு
கற்பிதம் கேட்டது;
தன்னுடலில் என்னுடலை வளர்த்தெடுத்த
தந்தையும் தாயும்தான்
ஆக.. அவர்களுக்கே
பொருத்தம் என்றேன்.

எப்படி வசித்தேன்
உன்னில் என்றது;
குருதி நரம்பு எலும்பு
மூளை இதயம் சுவாசம்
இப்படியான கூட்டு முயற்சியில்
குடியிருந்தாய் என்றேன்.

உயிர் மீது பயமின்றி
உரையாடுவது
வீரமென்ற வீம்போ என்றது;
வீரமென்பது தசையில் இல்லை
விசையுறு மனதில் உள்ளதென்றேன்.

நான் வெளியேறியதில்
வேதனையோ வென்றது.
உயிரெனும் நீ வசிக்க
என்னுடலைவிட
ஏற்ற இடம் ஏதுமில்லை
என்று சிரித்தேன்.

கண நேரம் மவுனித்த உயிர்
மீண்டும் என்னுடல் புக எத்தனிக்கையில்
எழுப்பியது வினாவொன்று...
'மீண்டும் வருவேன் என்று
தெரியுமோ உனக்கு?!'

'தீதும்.... நன்றும்... பிறர் தர வரா'
என்பதை நன்கறிவேன் நானென்றேன்...

'யார் சொன்னது இப்படியெல்லாம்'
என்றபடியே என்னுடல் புகுந்த உயிரிடம்
பதில் பகர்ந்தேன்...
எல்லாம் என் போலொரு
பகுத்து அறிபவன்தான்
என்றேன்......!

– **வைகை சுரேஷ்**

## கருவேலக்கனவு

வறண்ட ஊரிலிருந்து
நீரள்ள நெடுந்தூரம் சென்று
ஊர் திரும்புகையில்
எதிர்பாராமல் பெய்கிற சிறுமழையை
ஏந்துவதற்கு ஏனம் இன்றி
நா நீட்டி ருசிக்கிற ஒருத்தியின்
சித்திரத்தை வரையத்தொடங்குகிறாள்,
செயற்கைக் கருத்தரிப்பு
சிகிச்சையின்
நுண்குழாய் மூலம் விந்தணு
ஏற்றப்பட்டுத் திரும்பியவள்

நத்தையின் உணர்கொம்புகளாய்
தன் முட்களைக் கற்பனைசெய்து,
வெம்மையைவிட்டு மெதுமெதுவாய்
நகர்கிற கனவுடன் நிற்கிறது
சித்திரத்தின் ஓரத்தில்
தீட்டப்பட்ட கருவேலம்

– **ரம்யா அருண் ராயன்**

எப்போதும் தேவதைகள்
வெள்ளுடைகளுடன் இருப்பதில்லை
அழுக்கேறிய கந்தல் துணிகளை
ஆடையெனப் பெயரிட்டு
அணிந்துகொள்கிறார்கள்
அந்நிய பாஷையில்லை
அவர்களுடையது
ஆச்சரியம்தான்
அவர்கள் பேசும் மொழியே
நமக்கும் தாய்மொழியாக இருக்கிறது
வாசனை திரவிய நெடியின்றி
வியர்வை வாசம் கமழ
வேலை செய்துவிட்டு
வெள்ளந்திப்பூச் சிரிப்பில்
சாக்கடைக் குழியிலிருந்து
வெளியேறுகிறார்கள்
சகாக்களுடன்
நேற்றைய கதை பேசி
அரட்டையடிக்கிறார்கள்
அம்மா குப்பையேதுமிருக்கா
என்றபடி
ஒவ்வொரு வீடாய்க் கடந்து
வீதி விட்டகல்கிறார்கள்
புரிதல் இல்லாதவர்கள்தான்
நாகரீகமற்ற தொனியில்
குப்பைக்காரியென்று
கூவியழைக்கிறார்கள்
தேவதைகளை

– **மகேஷ் சிபி**

தகப்பனை இழந்த
மகனொருவனை
இவ்வுலகுக்குக் கையாள
தெரிந்திருக்கவில்லை

அவனது உலகம்
பாட்டியம்மாவால்
அம்மாவால்
சித்திகளால்
அக்காவாலானது
அவன் அப்பாவின்
முகம் பார்த்த
ஞாபகம்கூட இராது
அத்தனை குட்டி அவன்

பெண்களின் அன்பாலான
அவனது நாட்கள்
புறவுலகின் சூத்திரங்களை
எதிர்கொள்ள பழக்கவில்லை

அவனது அப்பாவின் சாயலில்
சித்தப்பனுண்டு தாத்தாவும் உண்டு
இன்னும் சித்தப்பாக்கள் மாமாக்கள்
முதிர்ந்த தாத்தாக்களும் உண்டு

அவர்கள் அவனை எதிலும்
சேர்த்துக்கொண்டதில்லை
அவன் வாழ்வைத் தொடுமொரு
அன்பை வார்த்தையை
அனுபவத்தைத் தந்ததுமில்லை

வளரும் நாட்கள்தோறும்
எவ்விடத்திலும் போராடுகிறான்
தகப்பனில்லா மகனைக் கையாள
ஆசிரியர்களும் படித்திருக்கவில்லை

அவனைத் தேற்றவும் மாற்றவும்
அவனது பாட்டி மட்டுமே
அறிந்திருந்தாள்
தகப்பனில்லா மகனை
கையாளத் தெரியாதவர்களைப் பற்றி
அவள் பேசவில்லை

மாறாய் மனிதர்களைக் கையாள
அவனுக்குக் கற்றுத்தருகிறாள்
ஏனெனில் தகப்பனில்லா
ஏழு பிள்ளைகளை
அவள் தனியே வளர்த்து
முதிர்ந்திருந்தாள்.

– **தீபிகா சுரேஷ்**

பொழுதை
உரிக்க உரிக்க
கிடைத்த இரவில்
ஒன்றுமே இல்லை
வெற்றுடல்.

– **இரா மதிபாலா**

அம்மா பற்றிய கவிதைகளும்
அதிகபட்சமாய்
அவளின் சமையலறையோடு
முடிந்துவிடுகின்றன

– **யாழினி**

தொடர் - 7

ஆதிரன்




# வானவில் வண்ண மின்னல்

**விதைகள்(seeds) மற்றும் கூலங்கள்(grains)**

*'Learn from seeds; they don't die when you throw dirt at them; they grow.' - Matshona Dhliwayo.*

கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு
இந்நான் கல்லது உணாவும் இல்லை – 335:4-6.

– புறநானூறு.

பூமியில், தாவர விதைகளின் வயது ஏறக்குறைய 360 மில்லியன் வருடங்கள் (3,600 லட்சம் வருடங்கள்) என்கிறது ஆய்வு. 1970களில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு வகை விதையின் புதைபடிவம் (*Elkinsia polymorpha, a plant fossil found in Randolph County*) இதை உறுதி செய்கிறது. ஆனால் மனிதனுக்கும் விதைகளுக்கும் - வேளாண்மை வழியாக - இடையான நேரடி உறவு வெறும் பன்னிரெண்டு ஆயிரம் முதல் பதினைந்தாயிரம் வருடங்களே. அதற்கு முன்பு விதை என்பது ஒரு இயற்கைச் செயல்பாடு என்று புரிந்துகொள்ள முடிகிறது. மிக நீண்ட பரிணாம வரலாற்றை அது கொண்டுள்ளது. மாறாக, வேளாண்மை தொடங்கிய காலம் முதல் விதைகளும் கூலங்களும் இனம் பிரித்து உணரப்பட்டு அவற்றிற்கெனத் தனிவகைப் பெயர்கள் உருவாக்கப்பட்டது என்பது தெளிவு.

பூமி முழுதும் பரவியிருக்கும் விதைகளின் வரலாற்று விளைவே மனிதகுலம் என்றால் மிகையில்லை. மனித வாழ்வின் பிரதிநிதிகள்

அல்லது செயல்பாட்டுப் பணியாளர்கள் (*Staff of life*) என்று விதைகளை வர்ணிக்கிறார்கள் ஆய்வாளர்கள். மனித குலம் விதைகளின் உலகால் ஆனது. மனித அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகிய அனைத்திலும் தன் பங்கைக் கொண்டுள்ளன விதைகள்.

உலகம் முழுவதும் உணவு அடிப்படைகள், பொருளாதாரம் மற்றும் வாழ்வு முறைகள் அனைத்திற்கும் விதைகள் அவசியமானவை. பிரபஞ்சம், பூமி ஆகியவற்றில் இருக்கும் அனைத்து அற்புதங்களைப் போலவே விதைகளும் கற்பனைக்கு எட்டாத அதிசயமான வடிவமைப்பைக் கொண்டவை. அவை முழுக்க முழுக்க தற்சார்பு வகைப்பட்டவை. அவை முளைக்கும்போது அந்தத் தாவரத்திற்கு ஆரம்பநிலை உணவளிக்கும் திறன் பெற்றவை. விதைகளுக்குள் இருக்கும் முழுமையான செயல்திட்டம் அவற்றை உலகின் எந்த மூலைக்கும் தரம் கெடாமல் பரவிச் செல்ல வழிவகை செய்கிறது. போலவே விதைகள் இணைந்து செயலாற்றுகின்றன.

விதைகள் தோன்றும் முன்பு தாவரங்களின் பரவல் மிகவும் மெதுவானதாக இருந்திருக்கிறது. விதைகளின் தோற்றத்திற்குப் பிறகு மகரந்தச் சேர்க்கையானது பல மடங்கு வேகமாகப் பரவியிருக்கிறது. இருவேறு தாவரங்களின் மகரந்தத்தை ஒன்று சேர்த்து ஒரு விதை உருவாக இயற்கையின் பரிணாமம் தன்வழியே ஒரு பெரும் பயணத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளது எனலாம்.

மேலும், விதைகள் ஒருவகையான தாங்கும் ஆற்றலை (*endurance*) இயற்கையாகவே கொண்டுள்ளன. விதையின் உறங்குநிலை (*Seed dormancy*) என்பது விதைகள் முளைத்தலைக் குறிப்பிட்ட காலத்திற்குத் தள்ளிப்போடுவதாகும். இதனால் தகுந்த சூழல் காரணிகள் கிடைக்கும்போது தமது முளைத்தலை ஆரம்பிப்பதற்காக விதைகள் உறங்குநிலையில் இருக்கலாம். சிலசமயம் தகுந்த சூழல் இருப்பினும், முளைத்தலின் பின்னர் சந்ததிக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்காக முளைக்காமல் உறங்கு நிலையிலிருந்து குறிப்பிட்ட காலத்தின் பின்னர் முளைக்கலாம். முளைத்தலுக்கான அத்தியாவசியமான தேவைகள் கிடைக்காதவிடத்திலோ, மிகவும் கடுமையான குளிர் அல்லது கடுமையான சூடு போன்றதீங்கு விளைவிக்கும் சூழ்நிலைகளிலோ விதைகள் முளைக்காமல் இருத்தல் *Seed hibernation* எனப்படும்.

மேலும் இயற்கையில், விதைகள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் விதமாகப் பல்வேறுவிதமான தற்காப்புத் தன்மைகளைப் பெற்றுள்ளன. முட்கள், விசங்கள் போன்று அவை பல்வேறு இயற்கைப் பாதுகாப்பு விசயங்களைக் கொண்டுள்ளன. அதுபோல, விதைகள் பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்யத் தேவையான இயற்கைச் சூழலைப் பெற்றுள்ளன. சுற்றி அலையும் மிருகங்களின் மீது தொற்றிக்கொண்டு இடம்பெயர்வது, காற்றில் இலகுவான இறகுகள் / பஞ்சுகள் போன்ற அமைப்பின் வழியே மிதந்து செல்வது, காய்கள் மற்றும் பழங்களின் உள்ளேயே தன்னை இருத்திக்கொண்டு பறவைகளின் எச்சங்கள் மூலம் பரவுவது என்று பல்வேறு வகைகளில் இடம்பெயர்ந்து தமக்குத் தோதான இடத்தில் முளைத்துக்கொள்கிற திறனை அனைத்துத் தாவர விதைகளும் கொண்டுள்ளன.

மேலும் மிக முக்கியமாக விதைகள் சுயபாதுகாப்புத் திறனை அபரிமிதமாகக் கொண்டுள்ளன. மனிதன் வேளாண்மையைக் கைக்கொண்டதற்குப் பின் பல்வேறு நுணுக்கமான விதைப்பாதுகாப்பு முறைகளைக் கண்டறிந்து பயன்படுத்திக்கொண்டு இருக்கிறான். முக்கியமாக அரிசியின் பயிர்களுக்குத் தேவையான விதை நெல்லைப் பாதுகாக்க ‘கோட்டை கட்டுதல்’ முறையைக் காலங்காலமாகத் தமிழர்கள் பயன்படுத்திவருகிறார்கள்.

விதைகள் மிகச்சிறந்த அற்புதங்களை உருவாக்க வல்லவை. காட்டாக இன்றைய தினத்தில் உலகின் மிகப் பழைய மரமாகக் காணப்படும் பெரிய செம்மர வகை மரமான *Sequoiadendron giganteum (nicknamed “General Sherman”)* வெறும் ஆறு மில்லி கிராம் எடையான விதையால் உருவானது. தற்போதைய இம்மரத்தின் எடை ஏறக்குறைய ஆறு ஜம்போ

விமானங்களின் எடைக்குச் சமமானது. மேலும் இந்த மரத்தின் தற்போதைய வயது ஏறக்குறைய 2500 வருடங்கள்.

இவ்வாறாக விதைகளின் வரலாறு மிகமிக நீண்டதாகவும் நிதானமாகவும் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆனால் இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் மனிதகுலம் விதைகளை வேதியியல் முறையில் பலவகை வித்துக்களாக உருவாக்கும் வரைவுகளை



உருவாக்கிவிட்டது.

மரங்கள் பற்றி நாம் முன்னரே படித்தோம். விதைகளின் விளைவுகளில் மரத்தைப் போலவே கூலமும் ஒன்று. தானியம் என்பதன் வடமொழிச் சொல்லுக்குக் கூலம் என்பது சுத்தத் தமிழ் வழக்கு. பூமியின் நீண்ட வரலாற்றில் 'மனிதமைய பூமிக்காலம்' (Anthropocene) உருவாவதற்கு மூலக்காரணிகளில் கூலமும் ஒன்று என்று சொன்னால் மிகையில்லை.

மனிதகுலம் விவசாயத்தை உருவாக்கிக்கொண்டதும், படிப்படியாக வேளாண்மைச் செயல்பாடுகள் தன்னிறைவு பெற்றதும், குறிப்பிட்ட காலகட்டத்தில் 'மனித வணிக அமைப்பில்' கூலம் ஒரு பிரதான பங்கினை எடுத்துக்கொண்டதும் மனிதகுலம் பூமியின் மீது தனது பலமான வலுவத்தை (power) ஏற்படுத்தப் பயன்பட்டன என்பதே எனது புரிதல். எனவே, ஒரே நேரத்தில் பூமியின் மீதான பிணைப்பையும் தனிப்பட்ட மனிதப் பார்வையிலான உலகத்தையும் உருவாக்க விதைகளும் கூலமும் உதவின என்பது துணிபு.

.•.•

## தத்துவம்

*"Man is the only creature who refuses to be what he is."*

*- Albert Camus*

தத்துவங்கள் பற்றி நமக்கு ஆயிரக்கணக்கான அற்புத நூல்கள் கிடைக்கின்றன. தத்துவம் பற்றித் தெரிந்துகொள்ளும் ஆர்வமுடையோருக்கு நம் முன்னோர்கள் மிகச் சிறந்த புதிதாக எதுவும் சிந்திக்கத் தேவையற்ற வகையில் எழுதிக் குவித்திருக்கிறார்கள். ஒருவர் தனக்கான தத்துவத்தை, இருப்பவற்றுள் தமக்கென இருப்பவைகளைத் தேர்ந்தெடுத்தால் போதும்.

தத்துவம் வாழ்வை எல்லாமே அபத்தம் அல்லது எல்லாமே பொருள்வகை என்று அனைத்தையும் ஒரு வகை அர்த்தத்தில் விளக்கிக்கொள்ள முயல்கிறது. வாழ்வென்பது எவ்வளவு அபத்தம் என்று பல தத்துவ அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒரு மனிதர் வாழ்வென்பதை ஒரு குரூரமான அபத்தம் என்று புரிந்துகொள்ளும்போது ஏற்படும் உணர்வு பயங்கரமானது. எனது பணிச் சூழலில், விதவிதமான பிணங்கள், யாரென்றே தெரியாத பல உடல்களை எனது சகாக்களுடன் சேர்ந்து புதைத்துள்ளேன். புதைத்து எட்டு மாதம் கழித்து அடையாளம் காணப்பட்ட ஒரு பெண்ணின் தந்தையிடம் அவளது மண்டையோட்டைக் கொடுத்தபோது அவரின் முகத்தைப் பார்த்திருக்கிறேன். அபத்தம் முகத்தில் அறையும்போது மரணம் என்பது கேலிக்குரியதாகிவிடுகிறது.

மனிதர்கள் விடியும்போது உயிரோடு விழிக்கும் தருணம் அபாயகரமானது என்கிறான் காஃப்கா. உலகில் பல்வேறு இடங்களில் விதவிதமாகப் பல்வேறு போர்கள் நிகழ்கின்றன. தொடர்ந்து அது மனிதனின்



இருப்பைக் கேள்விக்குள்ளாக்குகிறது. 1828இல் புஷ்கின் 'பொல்டாவா' போர் பற்றி எழுதிய கவிதையில் ஒரு வரி; ஒரு உழவனைப் போல் ஓய்வெடுக்கிறது போர். கவிஞர்கள் அபத்தத்தைக் குரூரமாக மொழிபெயர்க்கிறார்கள்.

பூமியில் மனிதர்தாம் மதிப்புக் கூட்டப்பட்ட உயிரிகள். நமக்கு மட்டுமே மற்ற விலங்குகளில் இல்லாத ஒருவித பயம் பற்றிய அறிவு இருக்கிறது. ஏனென்றால் நாம் காலத்தையும் தூரத்தையும் பற்றி அறிந்து வைத்திருக்கிறோம். சுய மரணத்தைத் தெரிந்து வைத்திருக்கிறோம். மதிப்பு மிக்க மனிதர்களாகிய நாம் இறக்கிறோம். இன்று, நேற்று, போன வாரம், போன மாதம், போன வருடம், போன நூற்றாண்டு, போன ஊழிக்காலம் என இறக்கிறோம். அனைத்தையும் உயிரோடிருப்பவர்களின் நினைவில் ஏந்த விட்டு நாம் வெறுமனே இறந்துபோகிறோம். நமது நினைவுகளை, அறிவை, கலையை, இசையை நம்மிடமே விட்டுச் செல்லுகிறோம். மதிப்பு மிக்க மனிதர்கள் நாம் இன்று, நாளை, அடுத்த வாரம், அடுத்த மாதம், அடுத்த வருடம், அடுத்த நூற்றாண்டு, அடுத்த ஊழிக்காலம் என உயிரோடு இருப்போம். அதற்கான சிறந்த பண்பை நாம் பெற்றிருக்கிறோம்.

மேலும் நம்மிடையே காதல் இருக்கிறது. ஒரு எளிய மற்றும் அபாரமான உணர்வளிக்கக்கூடிய மூர்க்கமான விலங்கினையொத்த காதலை நாம் கைவசம் வைத்திருக்கிறோம். காதல் நமக்கு கருணையைக் கற்றுத் தருகிறது. பொதுவாக விலங்கின் தன்மையிலான காதல் ஒரு உலகளாவிய தத்துவம் எனலாம். இதற்காக ஒவ்வொரு மனிதரும் தனித்தனியான விளக்கங்களைக் கொண்டுள்ளோம். அவரவர் அனுபவம் அவரவர் காதல்.

ஆனால், நமது நாட்டில் தத்துவத்திற்கு ஆன்மீக மஞ்சள் பூசி மதமென்றாக்கி ரகளை செய்துகொண்டிருக்கிறார்கள். என்ன கொடுமையென்றால், மூலச்சிறப்பு மிக்க பல்வேறு தத்துவங்களை உருவாக்கிய பெருமைக்குரிய தீபகற்பம் நமது நாடு. எவ்வளவு சிந்தனைகள்... எவ்வளவு உரையாடல்கள். அனைத்தும் மொன்னையாக்கப்பட்டு ஆன்மீகம், மதம் என அதிகார பீடங்களாய்ச் சுருங்கிப்போன காலத்தில் நாம் வாழ்கிறோம்.

இருக்கட்டும்; தத்துவம் ஒரு குறிச்சொல்லாக நான் ஏன் சொல்கிறேன் என்றால், அது மனித சிந்தனையை ஒழுங்குபடுத்தி ஒருவகையான கட்டுப்பாடு மற்றும் சுதந்திரமான வாழ்வை மேற்கொள்ள வழிவகை செய்கிறது என்பதால்தான். எனவே தத்துவத்தை அதன் அறிவியல்பூர்வமான விளக்கத்தை முடிந்த அளவு சுருக்கமாகப் பார்க்கலாம்.

முதலில் தத்துவம் என்பது எதற்காக என்று பார்த்தோம் என்றால், ஏற்கெனவே சொன்னதுபோல, மரணம் என்ற இயற்கை நிகழ்வை மனிதப் பார்வையில் புரிந்துகொள்ள

விழைவது எனலாம்.

மனிதன் தனது மரணம் பற்றிய சுய அறிவை ஆய்ந்து பார்க்கத் தொடங்கும்போது அவனது மூன்று வகையான அடிப்படை அறிவான, ஒன்று உள்ளுணர்வு *(intuition)*, இரண்டாவது உணர்வுகள் *(emotion)* மற்றும் மூன்றாவதாக பகுத்துணர்வு *(Reason)* ஆகியவை தத்துவத்தின் அடிப்படை அலகுகளாக இருக்கின்றன.

உள்ளுணர்வு அல்லது அடிப்படை உணர்வுகள் *(basic instict)* என்பது ஒருவகையான விலங்கு நிலையில் இருந்து வரும் இயல்பான உணர்வுகள் ஆகும், உணவின் தேவை, பாலுணர்வின் விழைவு மற்றும் இணக்க உறவின் தேவை *(campany)* ஆகியவை அடிப்படை உணர்வுகளின் இயல்புகளாகும். உள்ளுணர்வு என்பது மனிதனின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய தன்னைத்தானே செயல் புரிந்துகொள்ள உதவுகிறது.

போலவே, பயம், கோபம், மகிழ்ச்சி போன்ற பல்வேறு உணர்வுகள் சுற்றுச்சூழலினால் *(environment)* கட்டுப்படுத்தப்பட்டு மனிதனின் தன்முனைப்பை நிர்வகிக்கின்றன. மேலும் பகுத்துணர்தல் முறையில் அடிப்படை உணர்வுகளையும் பொது உணர்வுகளையும் கட்டுப்படுத்தி நம்மைச் சமூக பின்னணியில் ஒழுங்குடன் வாழ வகை செய்கிறது.

ஆக, உள்ளுணர்வு, உணர்வு மற்றும் பகுத்துணர்வு ஆகியவை, மனிதகுல வரலாற்றில் கால்நடை வளர்ப்பு மற்றும் வேளாண்மைச் செயல்பாடு உருவான பிறகு கிடைத்த நிறைய ஓய்வு நேரத்தில் படிப்படியாக நிறைய சிந்தனை செய்யும் செயல்பாட்டில், தத்துவம் சிறிது சிறிதாக உருவாகத் தொடங்கியது.

தத்துவத்தின் செயல்பாடு நிறைய நிறைய கேள்விகளால் ஆனது. மனிதன் என்பது என்ன, எங்கிருந்து வருகிறான், எங்கு செல்கிறான் என்கிற கேள்விகளிலிருந்து அவை தொடங்குகின்றன.

உண்மை மற்றும் யதார்த்தம் என்றால் என்ன, அவற்றை நாம் எப்படி அறிந்துகொள்வது, கடைசியாக மரணம் என்றால் என்ன என்பதை முடிவான கேள்வியாக முன்வைத்து ஆராயத் தொடங்கியது ஆதிகாலத் தத்துவம்.

பின்பாக, தத்துவம் இரண்டு பிரதான பிரிவுகளாகப் பிரிந்தது. ஒன்று இருத்தல் மற்றும் இருப்பின் தன்மை பற்றிய சிந்தனை *(ontology)*. இரண்டாவது அறிவு என்றால் என்ன *(epistemology)* என்கிற சிந்தனை.

மேலும் தத்துவம் ஒரு பகுத்தறிவுக் கருவியாக *(rational tool)* உலகத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இதை வைத்துக்கொண்டு தத்துவவியலாளர்கள் தத்துவத்தை மூன்று திசைகளில் புரிந்துகொள்ள முனைகிறார்கள். ஒன்று இயற்கை உலகம் *(physical world)* என்றால் என்ன, இரண்டு வாழ்வின் தொடக்கம் எப்படி உருவாகிறது, மூன்றாவதாக, மனித மனம் என்றால் என்ன என்பதுதான்.

இவற்றின் மூலம் சிந்தனையாளர்கள் தத்துவத்தின் மூன்று பாடங்களை *(subject)* உருவாக்கினார்கள்.. இயற்பியல், உயிரியல் மற்றும் உளவியல் என. இவை மூன்றும் தத்துவவியலுக்கு வேலையில்லாத வகையில் பெரும் சிந்தனை மற்றும் அடிப்படைப் பார்வைகளைச் சீர்பார்க்கத் தொடங்கிய நிலையில் நவீன தத்துவம் தனது பார்வையை மீண்டும் மனித உள்ளுணர்வினைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது. இந்த வகை தத்துவச் சிந்தனை மனிதகுலத்தின் மேம்பட்ட அறிவின் உற்பத்தியையும் எதிர்கால மனிதவாழ்வின் நிமித்தங்களையும் வரையறுக்க முயல்கிறது.

மொத்தத்தில், தத்துவத்தைப் புரிந்துகொள்ள நாம் அதன் வரலாற்றை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும். பல்வேறு தத்துவமுறைகளை *(philosophical school)*, மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய தத்துவ வழிமுறைகளை, பகுத்தறிவு வாதம் – அனுபவவாதம், சமூகவியல் – தனிமனித உளவியல், நவீனத்துவம் – பின் நவீனத்துவம், அமைப்பியல் – பின் அமைப்பியல், காலனியம் – பின்காலனியம் முதலானவற்றை நாம் பயில வேண்டும். நமக்குத் தத்துவம் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள விருப்பமில்லை என்றாலும் அதன் அடிப்படைகளைக் கண்டிப்பாகப் புரிந்துகொள்வதென்பது அவசியம் என்பது எனது புரிதல்.

ஆர்மேனிய மூலம் : வி.பெத்ரோசியன்
தமிழில் மொழிபெயர்ப்பு : வல்லிக்கண்ணன்
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

# அம்மாவின் வீடு



அம்மாவின் வீட்டுக்கு அவன் தனியாக ஒரு சாவி வைத்திருந்தான். வழக்கமாக அவன் வாசல் மணியை அடிப்பதில்லை. ஏனெனில், அவன் அம்மா தூங்கிக்கொண்டிருந்தால் விழித்துவிடுவாள்; அல்லது, தூங்காமலிருந்தால் அவள் அதைக் கேட்க மாட்டாள். நாலைந்து மாதங்களாக அவன் அம்மாவைப் பார்க்கவில்லை. மாஸ்கோவுக்கும் அயல்நாடுகளுக்கும், பல்வேறு பெரிய அலுவல்கள், சிறு வேலைகள் என்று போயிருந்தான். 'ஓ, எனக்கு மட்டும் நேரம் இருந்திருந்தால்...' அவன் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான். தாழ்வாரத்தில் விளக்கு எரிந்தது.

'அம்மா – அம்மா!'

பதில் இல்லை.

அவன் அறைக்குள் போனான். படுக்கை நன்கு விரிக்கப்பட்டிருந்தது. தரை சுத்தமாக இருந்தது. ரேடியோ ஒலிபரப்பிக்கொண்டிருந்தது. அவன் அம்மா எப்போதும் ரேடியோவைக் கத்தவிட்டிருப்பாள். 'அது ஏதோ மனிதக் குரலாக இருக்கிறதே. நான் உள்ளேயும் வெளியேயும் போய் வரும்போது, எனக்கு நானே பேசிக்கொள்கையில், எனக்குப் பதில் கிடைப்பதுபோல் தோன்றுகிறது' என்று அம்மா கூறுவாள்.

அம்மா சமையலறையிலும் இல்லை. பால்கனியிலும் இல்லை. வழக்கமான அசிரத்தையுடன் அவன் ரேடியோவை நிறுத்தினான்.

பச்சைத் துணியால் மூடப்பட்டிருந்த பழைய சோபாவில் படுத்தான். அம்மா வீட்டில் இல்லாததும் சரிதான்; மெத்தச் சரியானதே...

அம்மா குடிப்பதற்கு ஏதாவது வைத்திருக்கிறாளா? அவன் சோம்பலோடு எழுந்து, ரிப்ரிஜெரேட்டரைத் திறந்தான். அரை பாட்டில் பிராந்தியும், இரண்டு பாட்டில் பீரும் இருந்தன. அவை சூடாக இருந்தன. அவன் பீர் புட்டியைத் திறந்தான். அவனால் ஒரு வாய்கூட விழுங்க முடியவில்லை. அது புளித்துப்போயிருந்தது. அவன் தேதியைப் பார்த்தான். ஒரு மாதம் ஆகியிருந்தது. வாகனுக்கு பீர் ரொம்பவும் பிடிக்கும் என்று அவன் அம்மா அறிவாள். அவன் மூன்று நான்கு மாதங்களாக ஊருக்கு வரவில்லை. அந்த நினைப்பை அவன் தன் மனசிலிருந்து அகற்றினான். தனிமை என்று கூறப்படும் உலகின் பயனை நன்கு அனுபவிக்க, எதைப்பற்றியும் சிந்திக்காமலிருக்க அவன் ஆசைப்பட்டான். அதிலும் விசேஷமாக, தன்னைச் சுற்றிலும் ஒளி நிறைந்த ஊர் அமைதியோடு நிலவ, குழந்தைகளின் தனிக் குரல்களும், பூச்சிகளின் மந்தமான சலிப்பூட்டும் இரைச்சலும் மாத்திரம் கேட்டுக்கொண்டிருந்த சூழ்நிலையை அனுபவிக்க விரும்பினான். அவன் அம்மா வீடு ஒதுக்குப்புறத்தில், தோட்டங்களுக்கு நடுவில் இருந்தது. அங்கே கார்கள் வருவதில்லை. அவனிடமும் கார் கிடையாது. அவன் திரும்பவும் சோபாவில் படுத்து, எதையும் சிந்திக்காமலிருக்க முயன்றான்.

அம்மாவும் நகருக்கு வந்து தங்களோடு வசிக்கவேண்டும்; மாரிக்காலத்திலாவது அவள் அவ்வாறு செய்யவேண்டும் என்று அவளை வலியுறுத்திக் கூப்பிடுவதற்காக அவன் வந்திருந்தான். சக்திவாய்ந்த பேச்சு ஒன்றை அவன் நினைத்துப் பார்த்தான். ‘இது கேவலம், அருமை அம்மா. நான்தான் உனக்கு எல்லாமான ஒரே மகன். ஆண்டவனுக்கு நன்றி. எங்களுக்கு ஒரு வீடு இருக்கிறது. அதில் நான்கு அறைகள் உள்ளன. உனக்கு உன் மருமகளையும் பிடித்திருக்கிறது. இது வெட்கமாக இல்லையா? இன்னும் எத்தனை காலம் தனிமையில் உன் வாழ்நாளைக் கழிக்கப்போகிறாய்?’ என்று அவன் கேட்பான்.

டெலிபோன் மணி அலறியது. இனிமையான அசதி உடனே ஓடிமறைந்தது. அந்த அலறல்மீது அவனுக்கு மிகுந்த அலுப்பு. டெலிபோன் அலறிக்கொண்டேயிருந்தது. அவன் எழுந்து, மெதுவாய் சோம்பலுடன் நடந்தான். அது அலறுவதை நிறுத்திவிடலாம்... அவன் ரிசீவரை எடுத்தான். ‘அனுஷ் அத்தை?’ அது ஒரு பெண்ணின் குரல். ‘நான் உன்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பிவிடவில்லை என்று நம்புகிறேன். நீ நகருக்குப் போகிறாயா என்று கேட்க நினைத்தேன். ஆராமேய்ஸ் அவன் காரில் உன்னை அழைத்துப்போவான். அவன் நான்கு மணிக்குப் போவான்.’ அந்தப் பெண் நிறுத்தாமல் பேசினாள். ‘அவனைக் காத்திருக்கும்படி நான் சொல்கிறேன். நீ போகிறாயா?’ ‘அம்மா வீட்டில் இல்லை’ என்றான் அவன். ‘நல்லது’ என்று அந்தப் பெண் சொன்னாள். போன் பஸ்-பஸ்-பஸ்ஸ் என்றது. பேச்சு துண்டிக்கப்பட்டது. வாகன் புன்னகைத்து, ரிசீவரை அதன் இடத்தில் வைத்தான். அவள் யாரோ என்று அவன் அதிசயித்தான்... பிறகு அவன் உண்மையாகவே தளர்ச்சி அடைந்தான். ‘இந்த நாலு சுவர்களுக்கிடையில் நீ எத்தனை காலத்துக்கு அடைபட்டுக் கிடப்பாய்? உன்னை நகரத்துக்கு இட்டுச் செல்லும்படி அடிக்கடி அவளையும் இவளையும் கேட்பாய்?’ அவன் அம்மா அவனுக்கு ஒரு கவலையாக இருந்தாள். அவன் ஊருக்கு அடிக்கடி வராமல் இருந்தாலும்கூட, அம்மாவைப்பற்றிய கவலை அவன் மூளைக்குள் சதா குறுகுறுத்தது. அவன் அம்மா எரெவானில், அவன் வீட்டில், இருக்கிறாள் என்று உறுதிப்படுத்துவதன் வாயிலாக, அவன் அந்தக் கவலையைப் போக்கடிக்க விரும்பினான். இந்த வாழ்வின் இறுக்கம் ஒரு கவலையால் குறையுமே. வாகன் அம்மாவுடன் சண்டை போடத் தன் மனசுக்குள் ஆயத்தம் செய்தான். ‘இவ்வளவுதான் விஷயம். நாம் போகப்போகிறோம். எனக்கு நேரமில்லை. என்னைப் புரிந்துகொள்! உனக்குச் சொந்தமானவர்களை விட்டு விலகி நீ தனியாக வசிக்கும் அளவுக்கு உன் வாழ்வில் எவ்வளவு எஞ்சியிருக்கிறது? உனக்கு வேறு யார் இருக்கிறார்கள்?’

இன்னும் எவ்வளவு காலம் அவன் அம்மா உயிரோடு இருப்பாள்? ஒரு தடவை (அப்போது அவன் தனிச் சாவி



வைத்திருக்கவில்லை) அவன் வந்தபோது, அவள் வீட்டுக்குள் இருப்பதாக அண்டை அயலார் உறுதியாகச் சொன்னார்கள். அவன் கதவைத் திரும்பத் திரும்பத் தட்டினான். பக்கத்து வீட்டுக்காரர்கள் கூடிவிட்டார்கள். சற்று நேரத்துக்கு முன் அவள் வீட்டுக்குள் போனதைப் பார்த்ததாக அவர்கள் அனைவரும் உறுதி கூறினார்கள். வாகனை பயம் கவ்வியது. சன்னல் சட்டத்தை உடைத்து, ஒருவாறு உள்ளே புகுந்தான். அவன் உடல் முழுவதும் வேர்வை பெருகி ஓடியது. அம்மா தரையில் விழுந்து கிடக்கிறாள்; அம்மா ரேடியோ அருகில் உயிரற்றுக் கிடக்கிறாள்– இப்படிப் பலவிதமாக அவன் கற்பனை பண்ணினான்.

ஆனால் அவன் அம்மா தூங்கிக்கொண்டிருந்தாள். அவள் தன் மேல்போர்வையைக் களைய மறந்து அப்படியே தூங்கிப்போனாள்.

'அம்மா?' முதலில் எச்சரிக்கையான குரலில் அவன் கூப்பிட்டான். ஒருவேளை எதிர்பாராத விதமாக அவள்.. 'அம்மா!' குழப்பமடைந்து கூப்பிட்டான். அவள் கையைத் தொட்டான். சூடாக இருந்தது. நாடித் துடிப்பு அமைதியாக இருந்தது.

'ஓ! நான் தூங்கிவிட்டேன்' என்று அம்மா விழித்தெழுந்தாள். 'ஓ, என்னைக் காப்பாற்று. என் வாகன் வந்திருக்கிறான். நான் தூங்கிக்கிடந்திருக்கிறேனே...'

அதன் பிறகு அவன் எப்போதும் தனியாக ஒரு சாவி வைத்துக்கொண்டான். மாஸ்கோ, அயல்நாடு, அநேக வேலைகள். 'ஓ, நேரமே இல்லை...!' அவன் நான்கு மாதங்களாக அம்மாவைப் பார்க்கவில்லை!

வீட்டில் சாப்பிடுவதற்கு ஏதேனும் இருந்ததா? பொரித்த மொச்சைகள் இருந்தன – வாகனுக்குப் பிடித்த உணவு. வேறு தானியங்களும் இருந்தன. எதுவும் சூடாக இல்லை. ஆறிப்போன உணவை வாகன் உண்டான். மெல்லிசான கிராமத்து ரொட்டி இல்லை. நகரில் வாங்கி வந்த ரொட்டி இருந்தது. யார் வாங்கி வந்திருக்கக்கூடும்? நல்லது. இதுதான் கடைசி. அவன் அவளைத் தன்னோடு நகருக்குக் கூட்டிப்போவான். 'நீ அவளைக் கிராமத்தில் தனியாக விட்டிருக்கிறாய். அயலார்கள் இப்போதே ரகசியமாகப் பேசுகிறார்கள். தனியாக... ஒருநாள் இருந்துபார். நீ பைத்தியமாகிவிடுவாய்' என்று ஹாஸ்மிக் திட்டமாகக் கூறிவிட்டாள்.

மொச்சைப் பயறு, ஆறியிருந்தாலும் ருசியாக இருந்தது. அதைச் சூடுபண்ண அவனுக்குச் சோம்பல். அவன் சிறிது பிராந்தி குடித்தான். அது உள்ளே ஓடியது. ரத்த நாளங்களில் பாய்ந்து, தேகத்தின் சகல பாகங்களிலும் பரவியது. ஒருவித அசதி அவனைக் கவ்வியது. அவள் எங்கே போயிருக்கக்கூடும்? மருமகள் வீட்டுக்கா? அந்த ஊரில் இருந்த அவர்களின் ஒரே ஒரு உறவினள். அவனுடைய அம்மா வழி அத்தையின் மகள். அவளை அவன் மூன்று – நான்கு வருஷங்களுக்கு முன்பு பார்த்ததுதான். அவள் பெயர் வாஸகானுஷ் ஆக இருக்கவேண்டும்; அல்லது மய்ரானுஷ். எதுவோ, 'அனுஷ்' அதில் இருந்தது. அவளுக்கு ஏழு குழந்தைகள். அதை அவன் நிச்சயமாக நினைவு வைத்திருந்தான். ஏனெனில், ஏழில் ஆறு பெண்கள். மறுபடியும் டெலிபோன் அலறியது. இம்முறை அவன் உடனடியாக ரிசீவரை எடுத்தான்.

'அம்மா வீட்டில் இல்லை. இது வாகன்.'

'வாகன், அருமைப் பையா!' ஒரு ஆண்குரல் பேசியது. 'ஹல்லோ. அராகெல் பேசுகிறேன்.'

'அராகெல்?'

'உனக்கு எப்படி நினைவிருக்கும்? நான் உன் அப்பாவின் நண்பன். நானும் அர்மெனாக்கும்தான். அவன் நகருக்குப் போய்விட்டான். நீங்கள் ஒருவரை ஒருவர் பார்ப்பதில்லையா?'

அவரை எப்படிக் கூப்பிடுவது? மாமா என்றா?

'ஹல்லோ, அராகெல் மாமா! அம்மா எங்கே இருக்கிறாள், தெரியுமா? நான் இரண்டு மணி நேரமாகக் காத்திருக்கிறேன்.' இயல்பாக அவன் கைக் கடியாரத்தைக் கவனித்தான். 'நான் இங்கே வந்து ஒன்றேகால் மணி நேரம் ஆகிறது. அவளைக் காணவில்லை.'

'நான் சொல்கிறேன், அருமை வாகன்.' அவர் ஈழையிழுக்கும் குரலில் பேசினார். அவர் அதிகம் புகை பிடித்தார். அவருக்கு ஆஸ்துமா இருக்கிறது என்று தெளிவாகப் புரிந்தது. 'அவள் செட்ராக்கின் வீட்டில் இருக்கலாம். அவன் பேத்தி கல்யாணம் இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் நடக்க இருக்கிறது. நல்ல பையனாகப் பார்த்துத்தான் கொடுக்கிறான். அல்லது, அகாலக்காலக்கிலிருந்து வந்திருக்கும் சிற்ப வேலைக்காரன் வீட்டுக்கு அவள் போயிருக்கலாம்; அல்லது, வால்நட் வாங்குவதற்காகக் கடைத் தெருவுக்குப் போயிருக்கலாம். இப்போது ஜாம் செய்யவேண்டிய காலம். வீட்டுக்கு வந்து தனக்கு உதவும்படி அவள் நேற்று மரியத்திடம் சொல்லிக்கொண்டிருந்தாள். மரியம் என் மருமகள். அவள் ஆஸ்பத்திரியில் நர்ஸ் வேலை பார்க்கிறாள். மெடிக்கல் இன்ஸ்டிடியூட்டில் படித்துத் தேற அவளால் இயலவில்லை. அவளுக்கு நான்கு குழந்தைகள். அவள்தான் என்ன செய்வாள்...? அல்லது, அவள் மருமகள் வாஸானுஷ் வீட்டுக்குப் போயிருக்கலாம். பாவம், அந்தப் பெண் ஒரு மாதமாக உடம்பு சுகமில்லாமல் இருக்கிறாள். புற்றுநோயாக இருக்கும் என்று சந்தேகிக்கிறார்கள்... அல்லது, அவள் செயின்ட் ஸார்கீஸ் சர்ச்சுக்குப் போயிருக்கலாம்.. இன்றுதான் நாள்... அல்லது...'

'அங்கே போன் இல்லையா?'

'செயின்ட் ஸார்கீஸிலா?'

'இல்லை, என் அத்தை வீட்டில்.'


'ரிசீவரை வைத்துவிடு. நான் பார்த்துவிட்டு, உன்னைக் கூப்பிடுகிறேன்.'

சன்னலிலிருந்து தோட்டங்களைத்தான் பார்க்க முடிந்தது. இலையுதிர்காலம் வந்து நாளாகியிருந்தது. பசுமை எல்லாம் மஞ்சளாக மாறியிருந்தது. சேகரம் செய்யப்பெற்ற திராட்சைகள் ஒயின் ஆகவும், சாராயமாகவும், மற்றும் பலவிதமான பொருள்களாகவும் மாறின. திடீரென்று அவனுள் ஒரு கிளர்ச்சி எழுந்தது. அம்மாவின் திராட்சைத் தோட்டத்தில் இப்பவும் ஏதாவது திராட்சைப் பழங்கள், ஒரே ஒரு கொத்தாவது, விடுபட்டிருக்குமா? கடைசி திராட்சைகள் மிகவும் ருசிகரமாக இருக்கும். குழந்தைப் பருவத்தில் அவர்கள் திராட்சைத் தோட்டங்களுக்குக் காற்று மாதிரி வேகமாய் ஓடுவார்கள். நெடுகத் தேடி ஆராய்ந்து, மறைந்து கிடக்கும் பழக்குலைகளைக் கண்டுபிடிப்பார்கள். அவை ஏற்கெனவே வெயிலில் நன்கு காய்ந்து, சுவையான உலர்ந்த திராட்சைகள் ஆகியிருக்கும். இப்போது ஏதாவது

இருக்குமா? அவன் வெளியேறி, திராட்சைத் தோட்டத்துக்கு நடந்தான். அங்கே மூன்று, நான்கு பாத்திகள் இருந்தன. அவன் அம்மாவின் திராட்சைப் பாத்தியின் எல்லைகள் அவனுக்குத் திட்டமாகத் தெரியாது. அயலாரின் பாத்திக்குள் அவன் புகுந்திருக்கலாம். அதனால் தப்பு எதுவுமில்லை. திராட்சைத் தோட்டங்களில் எல்லைக்கோடுகள் இல்லை. நாய் ஏதாவது இருக்கலாம்... தோட்டத்தில் அமைதி நிறைந்த மவுனம் நிலவியது. அவன் திராட்சைக் கொடிகளை ஆராயலானான். குனிந்து பார்த்தான். கிளைகளை மேலே உயர்த்தினான். ஒரு இடத்தில் சேறாக இருந்தது. அவன் கால் வழுக்கியது. காய்ந்த மஞ்சள் இலைகள் மத்தியில் தலையைப் புதைத்து அவன் கண்களை அகல விழித்துப் பார்க்க நேர்ந்தது. அங்கே அது தென்பட்டது. கொடிகளிடையே ஆழ்ந்து புதைந்து, ஒரு கொத்து, மஞ்சளாய், பெரிய பழங்கள் நிறைந்து தொங்கியது. அந்தக் குலை எளிதில் வரவில்லை. அவனிடம் கத்தி இல்லை. அவன் மறுபடி முயன்றான். பழக்குலை விடாமல் பற்றிக்கொண்டிருந்தது. அந்தக் கிளை முறிந்துவிடுமோ என அவன் அஞ்சினான். அம்மா வருத்தப்படுவாள். இறுதியில் அவன் வெற்றி பெற்றான். பழக்குலை அவன் கைக்குக் கிடைத்தது. அது சூரிய ஒளியில் நன்றாக மினுமினுத்தது. அவன் பாத்தியின் வரப்புமேல் உட்கார்ந்து, பழங்களை அதிக ஆசையுடன் தின்னலானான். குழந்தைப் பருவக் குளிர்காலத்தின் இன்சுவை அந்தப் பழங்களில் இருந்தது. அல்லது, அவனாக அதை வருவித்துக்கொண்டானோ? திராட்சைத் தோட்டங்களைத் தானே கவனிப்பதாகவும், கொத்துவது மூடுவது போன்ற வேலைகளில் அயலார் சிலர் உதவுவதாகவும் அம்மா சொல்லியிருந்தாள். யார் உதவினார்கள்?

முந்திய மாரிக்காலத்தில், பாரிஸ் நகரில் ஒரு இத்தாலிய உணவு விடுதியில், அவன் திராட்சைப் பழங்கள் கொண்டுவரச் சொன்னான். பழங்கள் பெரிதாகவும் தெளிவாகவும் இருந்தன. அவற்றினுள் இருந்த விதைகள், மீன்காட்சி சாலையில் காணப்படுகிற மீன்களைப்போல், நன்கு தெரிந்தன. அவை ருசியில்லாத திராட்சைப் பழங்கள். அதைக்கூட அவனாகவா எண்ணிக்கொண்டான்? அல்லது, அது சுவையற்றே இருந்ததோ? மிஸ் மேரி இப்போது அவனைப் பார்த்தால்! ஒரு குலைப் பழங்களையும் அவன் தின்றுவிட்டானா என்ன? இன்னும் சிலவற்றைக் கண்டுபிடிக்க முடியுமா? அவன் தரையில் படுத்துக் கண்களை மூடினான்... முந்திய தினம், ஒரு கிழவிக்கு அவன் ரணசிகிச்சை செய்தான். அவளது பித்தப் பையை நீக்கினான். கிழவியை அவர்கள் வெள்ளைத் துணிகளால் போர்த்து, முகத்தை மட்டும் மூடாமல் விட்டிருந்தபோது, அவன் சட்டெனக் கவனித்தான். அவனுடைய அம்மாவின் உருவம். அபத்தம். அவளோ, சுருக்கங்களும் நரை முடியும் கொண்ட கிழவி. அவள் கண்கள் உடனே மூடிக்கொண்டன. அவன் பயந்துவிட்டான். அவள் நாடித் துடிப்பைப் பரிசோதித்தான். அவளுடைய இதயம் அமைதியாகவும் சீராகவும் துடித்தது. எவ்வளவுக்கு அவன் அந்த மாதின் வாழ்க்கையை நீட்டுவித்தான்? ஒருவேளை அதைக் குறைத்துவிட்டானோ?... அவள் பித்தப்பையில் பெரிய பெரிய கற்கள் இருந்தன. தூரத்தில் ஒரு குரல் `அர்த்தவாஸ்த், அர்த்தவாஸ்த்` என்று அழைப்பதை அவன் கேட்டான். பிறகு ஒரு விமானம் ஆகாயத்தில் மிகவும் தணிவாகப் பறந்து சென்றது. அவன் தன் கண்களைத் திறக்கவில்லை. மிஸ் மேரி ஒரு ரண வைத்தியர். பாரிஸ் நகரின் வெளிப்புறத்தில் அவளுக்கு ஒரு கிளினிக் இருக்கிறது. அவள் மணம் செய்துகொள்ளவில்லை; தன்னந்தனியாக வசிக்கிறாள். `ஒரு ரணசிகிச்சையின்போது நான் செத்துப்போக விரும்புகிறேன்` என்று அவள் அன்று, இத்தாலிய உணவு விடுதியில், சொன்னாள். அது ஒயின் செய்த வேலையா? இல்லை, அவளே திடீரென்று சோகம் அடைந்தாளா? மனிதன், இலையுதிர் காலத்தின் கடைசி திராட்சைகளைப்போல், இலைகளுக்கிடையே மறைந்து, சூரிய கிரணங்களால் மெதுவாகக் காய்ந்து உலர்ந்து, மடிந்துபோக வேண்டும். அவன் கண்களைத் திறந்தான். வானத்தைப் பார்த்தான். நீலப் பாலைவனமாகத் தோன்றியது அது.

- அடுத்த இதழில் நிறைவுறும். ■


FILMING IN PROGRESS...
PADAIPPU
PRODUCTION
AISHWARYA DUTTA - SENDRAYAN
PRODUCTION NO:01
DIRECTED BY CHARLES RAYAPPAN
DOP MARUTHA NAYAGAM MUSIC DEV PRAKASH
EDITING TAMILARASAN CHOREOGRAPHER ABU & CHALS PRO NIKIL MURUKAN
CO PRODUCER SASIKUMAR NITHYANANTHAM
PRODUCED BY BALAJI NEDUNCHEZHIYAN
JINNA ASMI